நவம்பர் 13 - 19, 2005 | November 13 - 19, 2005 | 28 பக்கங்கள் | 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்



## விடைபெறத் தயார்



# பயனற்ற பலாலி பயணங்கள்



# வடக்கு-கிழக்கு வாக்களிக்குமா?

ஸ்ரீ லங்காவின் புதிய ஜனாதிபதி ரணிலா அல்லது மஹிந்தவா என்பது இன்னும் சில தினங்களில் தெரிந்துவிடும். ஆனால், நடைபெற இருக்கும் இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிப்பார்களா இல்லையா என்பதே தென்னிலங்கையில் இப்போது பரபரப்பாகப் பேசப்படும் விடயமாகி விட்டது.

ஏனெனில், இந்தத் தேர்தலில் போட்டியிடும் இரு பெரும் கட்சிகளின் வேட்பாளர்களில் தாம் எவரையும் ஆதரிக்காது அமைதி காக்கப்போவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதைத் தொடர்ந்து இந்த எதிர்பார்ப்பு தென்னிலங்கையில் மேலோங்கி நிற்கிறது.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு இவ்வாறு இருக்க, இந்தத் தேர்தலில் வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மக்களைக் கேட்டுக் கொள்ளும் முயற்சிகளும் தமிழ் மண்ணில் தீவிரமடைந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மக்களுக்குச் சுதந்திரம்

தமிழீழ விடுதலைப் புலிகள், ஜனாதிபதித் தேர்தல் பற்றிக் கருத்துகள் கூறுவதையோ அல்லது மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்று தீர்மானிப்பதையோ தவிர்த்து அமைதி பேணவே விரும்புகிறார்கள். நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் பற்றி தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் ஒரு சில கருத்துகளைக் கூற வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படலாம்.

ஆனால், வடக்கு-கிழக்கு மக்கள் இம்முறை யாருக்கு வாக்களிக்க வேண்டும் என அவர்கள் அறிவிக்கமாட்டார்கள் என்று நிச்சயமாகக் கூறலாம். ஏனென்றால், எந்த வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கும் சுதந்திரத்தை இம் முறை மக்களிடமே விட்டுவிடுவது என தாம் முடிவெடுத்து விட்டதாக அவர்கள் ஏற்கனவே கூறி விட்டார்கள்.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் களத்திலிருந்து ஒதுங்கி இருப்பதென தமிழீழ விடுதலைப் புலிகள் முடிவெடுத்துள்ள நிலையில் பொது அமைப்புகளும், மாணவர் அமைப்புகளும் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டு வருவதாகத் தெரிகிறது.

இது பற்றிக் கருத்து வெளியிட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளரான தயா மாஸ்டர், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சிலர் மக்களைக் கோருவது தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வமான கருத்தல்ல என்று தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலை குழப்புவதற்கான எந்த வித நடவடிக்கையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபடமாட்டார்கள் எனக் கூறியிருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு களம் இறங்கியுள்ள இரு பிரதான வேட்பாளர்களும் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்கள் தமிழ் மக்களது உள்ளங்களைக் கவரக்கூடிய வகையில் அமையவில்லை எனவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

"இதற்கு முன்னரும் நான்கு ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. அதில் போட்டியிட்ட வேட்பாளர்களும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை மக்கள் முன் வைத்தனர். இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படும் என அந்த விஞ்ஞாபனங்களில் கூறப்பட்டிருந்தது. ஆனால், பதவியைக் கைப்பற்றியவர்கள் தமிழ் மக்களது உரிமைப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்களா? இல்லையே! அதனால்தான் இம்முறை நாம் எந்த வேட்பாளரையாவது ஆதரிக்கவும் இல்லை. குறிப்பிட்ட ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு மக்களைக் கேட்கப் போவதும் இல்லை" - இப்படி தமிழ்ச்செல்வன் மேலும் விளக்கி இருக்கிறார்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் முடிவு செய்ததற்கும், பொது அமைப்புகளும், மாணவர் அமைப்புகளும் தேர்தலில் இருந்து ஒதுங்கி நிற்குமாறு வடக்கு கிழக்கு மக்களை கேட்பதற்கும் காரணம் என்ன?

### காரணங்கள்

குட்டக் குட்டக் குனிபவனும் மடையன், குனியக் குனிய குட்டுபவனும் மடையன் என்றொரு முதுமொழி வழக்கில் உண்டு. அதுபோல பௌத்த சிங்கள மேலாண்மை வாதம் குட்டக் குட்ட குனியும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை என்பதை சர்வதேசத்துக்குப் பறைசாற்றிக் கூற எடுக்கும் முயற்சி இது.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தென்னிலங்கைத் தலைமைகளால் ஏமாற்றப்பட்டு வந்த தமிழினம் இனியும் ஏமாறத் தயாராக இல்லை என்ற செய்தியை சர்வதேசத்துக்கு விடுக்கும் ஏற்பாடே இது.

தமிழ் இனம் இத் தேர்தலைப் பகிஷ்





கரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி அண்மையில் உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் கடந்த பொதுத் தேர்தலில் முழுவீச்சுடன் பங்கு பற்றிய தமிழ் மக்கள் இந்தத் தேர்தலை ஏன் தவிர்க்க நினைக்கிறார்கள் என்பதற்கான காரணங்கள் தெளிவாக விளக்கப்பட்டிருந்தன.

அந்தத் தேர்தலின்போது,

* தேர்தலில் தெரிவு செய்யப்படும் சிங்களத் தலைமை இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை என்றுமே வழங்கப் போவதில்லை என்ற வரலாற்று உண்மையை நிருபிக்க வேண்டி இருந்தது.

* 1977இல் தமிழ் மக்கள் வழங்கிய தனி அரசுக்கான விடுதலை ஆணையிலிருந்து தமிழ் மக்கள் இன்னும் தடம் புரளவில்லை என்பதை சர்வதேசத்தின் முன் நிருபிக்க வேண்டியிருந்தது.

* தமிழ் மக்களது ஏகப் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்பதையும், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு தமிழீழம் முழுமையான ஆதரவை வழங்குகின்றது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டியிருந்தது.

அதனால் அந்தத் தேர்தலில் முழுமனதோடு- பெருவிருப்போடு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானார்கள் என்று தர்க்கிக்கிறது அந்த அறிக்கை. அந்தத் தேர்தலில் பிரதமராக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ரணில் விக்கிரமசிங்க என்ன செய்தார்?

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்வதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அவர் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை அவர்களுடன் நடத்தினார். இறுதியில் நடந்தது என்ன?

நிறைவேற்று அதிகாரம், ஜனாதிபதியின் கைகளில் இருப்பதால் அந்தப் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்களைக் கூட அமுல் நடத்த முடியாத நிலையில் தான் இருப்பதாக, புலிகளுக்குக் கூறிக்கொண்டு தென்னிலங்கை மக்களையும் இதோ சமாதானம் என்றொரு போலி மாயையில் மயங்க வைத்துக் கொண்டிருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளை மட்டுமன்றி, சிங்கள மக்களையும்- ஏன் சர்வதேச சமூகத்தையும்- ஏமாற்றியதே அவர் இந்தத் தொடர் பேச்சுவார்த்தைகளின் ஊடாகப் பெற்ற வெற்றி.

மேலும் சர்வதேச வலைப்பின்னல் ஒன்றின் ஊடாக, தமிழ் மக்களை நோக்கி வீசிய சர்வதேசத்தின் அனுதாப அலைகளை சிங்கள தேசத்தை நோக்கித் திசை திருப்பி சர்வதேச சமூகத்தை தமிழ் மக்களிடமிருந்து பிரித்தெடுப்பதில் வெற்றியும் கண்டார். இப்போது ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிக்காவையும் தனது வலைக்குள் அகப்படுத்துவதில் வெற்றி பெற்றிருக்கிறார். பரமவைரிகளான இருவரும் கைகோத்துக் கொண்டு இயங்கும் போது ரணிலை அழுத்திப் பிடிப்பதோ அல்லது தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதோ எட்டாக் கனியாகவே இருக்கப் போகிறது.

அதுபோல மற்றைய பிரதான வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவும் பேரினவாதிகளுடன் கைகோத்துக் கொண்டு தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தை சிதறடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிராக யுத்த பேரிகை முழங்குகிறார் அவர். இவர்களின் தட்டிக் கழிக்கும் தந்திரங்களைத் தமிழ்த் தேசம் புரிந்து கொண்டதால்தான் இந்தத் தேர்தலைப் புறக்கணிப்பதில் முனைப்புக் காட்டுகிறது.

### சர்வதேசம்

தமிழ் மக்களின் இந்தப் புதிய சிந்தனை தமிழ் மக்களின் வாக்குகளைக் கௌவ நினைக்கும் கழுகுகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அத்துடன் சர்வதேசமும் தமிழ் மக்களின் இந்தப் புதிய நிலைப்பாடு பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிய வருகிறது.

சர்வதேசத்தின் பல்வேறு மட்டங்களிலும் உள்ள இராஜதந்திரிகள், வடக்கில் உள்ள மக்கள் பிரதிநிதிகளோடு ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் நிலைப்பாடு பற்றி ஆராய்ந்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பங்கு பற்றுவதில்லை என முடிவு எடுத்தால் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் அந்த முடிவு ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்துமா என்பது பற்றியும் இவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் றிச்சாட் ஆமிற்ஸ்றே, ஸ்ரீ லங்காவில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் எப்படி நடைபெறப் போகிறது என்பதில் அமெரிக்கா அக்கறை கொண்டுள்ளது என்று கூறியிருக்கிறார்.

இதைப் போன்று ஸ்ரீ லங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரெட் அக்டோபர் 26ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிக்காவைச் சந்தித்து எதிர்கால சமாதான நகர்வுகள் பற்றிக் கலந்துரையாடி இருக்கிறார். இனப்பிரச்சினை பற்றிய மஹிந்தவின் நிலைப்பாடு சர்வதேச மட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதை அடுத்தே இவர் சந்திரிக்காவைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலை பற்றி கலந்துரையாடினார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஜோன் குவின்ன ஹெமும் வடக்கு-கிழக்கு தேர்தல் நிலைமையை தான் அவதானத்துடன் கண்காணித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சர்வதேசத்தின் கண்கள் வடக்கு கிழக்கு மக்களின் பக்கம் மீண்டும் திருப்பி இருக்கும் நிலையிலே, ரணிலும், மஹிந்தவும் தமிழ் மக்களுக்குத் தாம் செய்யவுள்ள அடாவடித்தனங்களுக்கு- அவர்களின் வாக்குகளின் ஊடாக ஒப்புதலைக் கோரி நிற்கின்றார்கள்.

### வஞ்சகத் திட்டம் ஒன்றே

ரணிலும், மஹிந்தவும் தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வாக எதிரும் புதிருமான திட்டங்களை முன் வைத்திருப்பினும் தமிழ் இனத்தை ஏமாற்ற நினைக்கும் இவர்களது வஞ்சகத் திட்டம் ஒன்றே என்பதை நாம் கவனித்தாக வேண்டும். இவர்கள் இருவரினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களும் ஒரு விடயத்தை அழுத்திக் கூறுகின்றன. அதாவது, தேர்தலில் வெற்றி பெற்று தாம் ஜனாதிபதியானால் இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய இரண்டு சர்வஜன வாக்கெடுப்புகளை நடத்தப் போவதாக மஹிந்தவும் ரணிலும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் கூறியிருக்கின்றார்கள்.

ஜனநாயகம் என்றால் என்ன? பெரும்பான்மையினரின் முடிவை ஏற்றுக் கொள்வதுதானே ஜனநாயகம். அப்படியானால் இவர்களில் ஒருவர் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் போது தமது வெற்றியை தமது இனப்பிரச்சினை யோசனைகளுக்கான பெரும்பான்மை மக்களின் ஆணையாக ஏற்றுக் கொண்டு அவற்றை செயற்படுத்துவது தானே அர்த்தமுள்ள நடவடிக்கையாக அமையும். அதைவிடுத்து மீண்டும் மீண்டும் சர்வஜன வாக்கெடுப்புகளை நடத்த முற்படுவது எதற்காக? இனப்பிரச்சினைத் தீர்வுக்காக மஹிந்த முன்வைத்திருக்கும் யோசனைகள் தமிழ் மக்களால் நினைத்துப் பார்க்கவே முடியாதவைதான். அவர் சொல்லாததைப் பற்றி தமிழ் மக்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. ஆனால், ரணில் சர்வஜன வாக்கெடுப்புகள் பற்றிப் பேசுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

இவ்வாறு தமிழ் மக்கள் ஏற்க முடியாத நம்ப முடியாத தீர்வுகளை- திட்டங்களை இவர்கள் முன்வைத்திருப்பதால்தான் இந்தத் தேர்தல் மூலம் தெரிவாகும் ஜனாதிபதி த[illegible] பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் போவதில்லை என்று தமிழ் மக்கள் நம்புகிறார்கள். இந்தத் தேர்தலில் இருந்து ஒதுங்கி இருக்க விரும்புகிறார்கள்.

### சாதக பாதகங்கள்

இவ்வாறு தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுவது சில பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தலாம் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். தமிழ் மக்களின் வாக்குகளை மோசடி செய்வதற்கான சந்தர்ப்பங்களை இந்தத் 'தேர்தல் தவிர்ப்பு' உருவாக்கி ஒற்றையாட்சியை முன்வைத்துள்ள வேட்பாளரின் வெற்றிக்கு அது வழி அமைத்துக் கொடுக்கும் என்றும் அவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

ஆனால், மேற்குலக நாடுகளும், அமெரிக்காவும் தமக்குச் சார்பான ஒரு வேட்பாளர் வெற்றி பெறுவதையும், அவரின் ஊடாக சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப் படுவதையுமே விரும்புகின்றன என்று இராஜதந்திர வட்டாரங்கள் கதை அடிபடுகின்றது. சர்வதேசத்தின் எதிர்பார்ப்புக்கு முரணாக தேர்தல் முடிவுகள் அமையும் போது அது தமிழர்களின் நலன்களுக்குப் பாதகமாக அமைந்துவிடக் கூடும் எனவும் அரசியல் அவதானிகள் எச்சரிக்கிறார்கள்.

அதேநேரம் ஒஸ்லோ பிரகடனத்துக்கு முரணாக மஹிந்த ஒற்றையாட்சித் தீர்வை முன்வைத்திருப்பதுடன், தீவிர இடதுசாரிக் கட்சியான ஜே.வி.பியுடன் கைகோத்துக் கொண்டு நிற்பதும், நவீன உலகமயமாக்கல் கொள்கைகளுக்கு எதிர்மாறான சுதேச பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுக்க இருப்பதும் நிச்சயம் மேற்கு மற்றும் அமெரிக்க நாடுகளின் வரவேற்பைப் பெறப் போவதில்லை. இவ்வாறான ஒரு நிலைமை தோற்றம் பெறும்போது அது தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்றொரு கருத்தும் நிலவுகிறது.

இறுதியாக, தமிழ் மக்களது தேர்தல் பகிஷ்கரிப்பு அவர்களுக்கு ஒரு சவாலாகவோ அல்லது சாதகமாகவோ அமையலாம். எனவே, அவர்களை வழி நடத்தும் தமிழ்த்தலைமை, தேர்தலைப் பற்றிய தமது மௌனம் எதிர்காலத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் அரங்கில்- தமது போராட்டத்தில் ஏற்படுத்தக்கூடிய சாதக பாதகங்களைக் கவனத்தில் எடுத்து முடிவுகளை மேற்கொள்ளுவது நல்லது.

— நேதாஜி —

# எமது நாட்டினை பாதுகாப்பான கரங்களில் ஒப்படையுங்கள்

ரணில் சட்டத்தை தனது கையில் எடுத்து கொள்பவர் அல்ல. தனது தேவைகளுக்கு ஏற்ற வகையில் சட்டத்தை கையாளுபவரும் அல்ல. அதிகாரத்தை அடைவதற்காக தனது கௌரவத்தையும் மகத்துவத்தினையும் விட்டுக் கொடுப்பவரும் அல்ல. பல சவால்களை சந்திக்க நேரிட்ட போதெல்லாம் அவற்றுக்கு முகம்கொடுத்து அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடியவர்; என்பதை நடைமுறையில் சாதித்தும் காட்டியவர். சமத்துவத்தைப்பேண வேண்டும் என்ற நோக்கில் மக்களின் உரிமைகளை என்றென்றும் மதிப்பவர்.

ரணிலின் சிந்தனை இன்று துன்புற்று பிளவுபட்டுள்ள எமது தேசத்தை மீண்டும் ஒன்றிணைக்கும் வல்லமை கொண்டது. எம் அனைவருக்கும் நம்பிக்கைக்குரிய, துார நோக்குமிக்க தலைமைத்துவம் தேவை.

**நமது நாடு இன்று அதனையே எதிர்பார்க்கின்றது.**



**உங்கள் நிகழ்ச்சி நிரல் எனது நிகழ்ச்சி நிரலாகும்**
**உங்கள் பிரச்சினை எனது பிரச்சினையாகும்**
**உங்கள் வெற்றி எனது வெற்றியாகும்**

ரணில் விக்கிரமசிங்க

| ரணில் விக்கிரமசிங்க | | X |
|---|---|---|

சுடர்ஒளி

நவம்பர் 13 - 19, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## பயனற்ற பயணங்கள்

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன. எதிர்வரும் வியாழக்கிழமை தேர்தல் நடைபெற இருக்கிறது.

இந்த தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் பிரதானமானவர்கள் இருவர். ஒருவர் ரணில் விக்கிரமசிங்க, மற்றவர் மஹிந்த ராஜபக்ஷ.

பௌத்த சிங்கள பேரினவாதிகளின் ஆதரவுடன் இந்த தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று மஹிந்த கருதுகிறார். சிறுபான்மையினரான முஸ்லிம்களினதும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்களினதும் ஆதரவுடன் வெற்றி பெறுவதில் ரணில் நம்பிக்கை கொண்டுள்ளார்.

சிஹல உறுமய, ஜே. வி. பி. ஆகியவை மஹிந்தவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. இ.தெ.கா உட்பட மலையகக் கட்சிகளும் மேல் மாகாண மக்கள் முன்னணிமற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையும் ரணிலை ஆதரிக்கப் போவதாக பகிரங்கமாக அறிவித்துவிட்டன.

இத்தகைய நிலையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகள் யாருக்கு என்று கேள்வி எழுகிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்போ அல்லது தமிழீழவிடுதலைப் புலிகள் இயங்கமோ தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று அறிவிக்கப் போவதில்லை.

''ஜனாதிபதித் தேர்தலில் யாரையும் ஆதரிக்கும்படி எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது மக்களை நாம் கேட்டுக் கொள்ள மாட்டோம். சுயாதீனமாக வாக்களிப்பதோ, பகிஷ்கரிப்பதோ மக்களைப் பொறுத்த விடயம்'' என்று புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த முத்த தலைவர் ஒருவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இதற்கு நியாயமான காரணங்களும் இருக்கின்றன.

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மஹிந்தவோ அல்லது ரணிலோ தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் சரியான தீர்வை முன்வைக்க வில்லை.

தமிழர்தாயகம், அவர்கள் தனியான தேசிய இனம், அவர்களின் சுய நிர்ணய கூரிமை என்பவற்றை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மஹிந்தவோ அல்லது ரணிலோ எற்றுக்கொள்ளவில்லை.

இவை குறித்து தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சாடை மாடையாகக் கூட அவர்கள் தெரிவிக்க வில்லை.

இருவரது தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் பௌத்த, சிங்கள பேரினவாதத்தின் பிரதிபலிப்பே காணப்படுகிறது.

கடந்த காலங்களில், புலிகளுடன் நிபந்தனையற்றபேச்சு, இடைக்கால கட்டமைப்பு என்றெல்லாம் பேசி வந்த ரணில் தற்பொழுது தனது சுருதியை மாற்றிக் கொண்டிருப்பது அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தின் எதிரொலிப்பே.

இனப் பிரச்சினை தொடர்பாக சுதந்திரக்கட்சியுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேசி இணக்கப் பாட்டை ஏற்படுத்துவேன் என்று ரணில் தற்பொழுது கூறுகிறார். புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டின் இறைமைக்கே ஆபத்தானது என்று கூறி தனது அரசை கலைந்த சந்திரிகாவுடன் ரணில் ஏற்படுத்தும் இணக்கம் புலிகளுக்கோ தமிழ் மக்களுக்கோ ஏற்புடையதாக இருக்கப்போவதில்லை.

ஆகவே ஜனாதிபதித் தேர்தலில் யார் தெரிவு செய்யப்பட்டாலும் ஒன்றுதான் என்ற நிலைமையே, தமிழ் மக்களைப் பொறுத்து இருக்கிறது.

ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஆர் பிரேமதாஸ, டி. பி. விஜயதுங்க, சந்திரிக்கா ஆகியோர் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதிகளாக சுமார் 28 வருடங்கள் இருந்தும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டார்களா?

தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்கக்கூடாது என்பதில் அனைத்து ஜனாதிபதிகளுமே உறுதியாக இருந்துள்ளனர்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் மஹிந்தவினதும், ரணிலினதும் பலாலிப் பயணங்கள் பயனற்ற பயணங்கள் தான்.

# எம் வழி தனி வழி

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி என்ற கொள்கை விளக்கத்துக்கும் ஒற்றையாட்சிக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற பிரகடனத்துக்கும் இடையிலான ஒரு போட்டியாகவே தெரிகிறது.


இத்தேர்தல் இந்த நாட்டின் இனப் பிரச்சினையை மையமாக வைத்து இடம் பெறுவதால், உள் நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

சர்வதேசத்ததின் அனுசரணையுடன் ஸ்ரீலங்கா அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணக்கம் ஏற்படுத்திய சமஷ்டி ஆட்சித் தீர்வுக்கு ஆப்பு வைக்க சிங்கள, பௌத்த மேலாண்மைவாதம் கங்கணம் கட்டி நிற்பதால் தமிழ்த் தலைமை தென்னிலங்கை பற்றி அலட்டிக் கொள்ளாமல் 'எம் வழி தனி வழி' என்று போக நினைப்பதைப் போன்ற தோற்றத்தையே காண முடிகின்றது.

### மஹிந்தவும் ரணிலும்

எண்பது சதவீதமான தென்னிலங்கை சிங்கள வாக்குகளை நம்பி தேர்தல் களத்தில் குதித்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமய போன்ற மேலாண்மைவாதிகளுடன் கை கோத்துக் கொண்டு இனவாதத்தைக் கக்குகிறார்.

அதேவேளை, சிறுபான்மை மக்களின் இரட்சகராகத் தன்னை இனம் காட்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரும், எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வாக்குகளைச் சுருட்டிக் கொள்ளும் பேரவாவில் கட்சிக்குள் இருந்து வரும் முரண்பாடுகளுக்கு மத்தியிலும் காய்களை நகர்த்தி வருகிறார்.


பிரபா

ஒற்றை யாட்சியின்கீழ் தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்று மஹிந்த அடித்துக்கூற, ரணிலோ சமஷ்டித் தீர்வை முன்வைத்தார். இப்போது ஸ்ரீ.ல.சு. கட்சியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிக்காவையும் தனது கைக்குள் இழுத்துப் போட்டுக் கொண்டு, இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு காணப்படும் எனக் கூறி வருகிறார்.இவர்கள் இருவரும் சேர்ந்து தாம் விரும்பும் தீர்வொன்றைத் தமிழ் மக்களிடம் திணித்து விடுவார்களோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் இப்போது தலைகாட்டி உள்ளது.

தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில் இனப் பிரச்சினை பற்றிய ரணிலின் விளக்கங்கள் தெளிவாக இல்லை. பூசி மெழுகுகின்றார். பிரச்சினைக்கான தீர்வை எல்லை போட்டுக் காட்டினால் தென்னிலங்கை மக்களது வாக்குகளையும், ஏன் தமிழ் வாக்குகளையும் கூடத் தான் இழக்க நேரிடலாம்என்று அவர் அஞ்சுவது இதற்குக் காரணமாக இருக்கலாம். தென்னிலங்கையைச் சீண்டி விடுவதற்கு இரு வேட்பாளர்களுமே தயாராக இல்லை என்பதை அவர்களது நழுவல் போக்கு துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால், இவர்களது இத்தகையஅச்சமே - நிலைப்பாடே தமிழ் மக்கள் தென்னிலங்கைத் தேர்தல் பற்றி அக்கறை கொள்ளாமல் இருப்பதற்கான காரணமாகவும் அமைந்து விட்டது.

### சமஷ்டியே எல்லை

இங்கே ஒரு விஷயத்தை மஹிந்தவும், ரணிலும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, அமெரிக்காவும், மேற்குலகும் ஆசியாவின் பொலிஸ்காரரான இந்தியாவும் சமஷ்டி அரசமைப்பொன்றை அமுல் நடத்துவதன் மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றன என்ற உண்மையே அது.

இப்போது புதிய விடயம் ஒன்று தலை நீட்டுகின்றது. அதாவது, இந்தியாவின் வேண்டுகோளுக்கு அமையவே பிரதான கட்சிகள் இரண்டும் இனப்பிரச்சினை விடயத்தில் இணைந்து செயற்பட முன் வந்தன என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிரதான கட்சிகள் இரண்டும் இனப்பிரச்சினை பற்றிய தீர்க்கமான இணக்கம் ஒன்றுக்கு வராமல் வீணே சண்டை போட்டுக் கொள்வதாயின் இனப்பிரச்சினை பற்றி கலந்தாலோசிக்க எம்மிடம் வரவேண்டாம் என்று திட்டவட்டமாக இரு கட்சித் தலைவர்களிடமும் இந்தியா கூறிவிட்டதாகத் தெரிகின்றது.

'2001ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து மஹிந்த எதிர்க்கட்சித் தலைவர் ஆனார். அதனைத் தொடர்ந்து, 'ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி ஆட்சி முறையை எவ்வாறு அமைப்பது என்பதை நாங்கள் காட்டித் தருகிறோம். வாருங்கள்' என இந்தியா விடுத்த அழைப்பை ஏற்று அங்கு சென்று திரும்பினார் மஹிந்த.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய அவர் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான அரசமைப்பின் கீழ் நாம் தீர்வு காண வேண்டுமாயின் இந்தியா அதற்கு நல்லதொரு உதாரணம் எனவும் கருத்து வெளியிட்டார்.

இப்போது மஹிந்தவின் பேச்சுகள் வேறு திசைக்குத் திரும்பிவிட்டன. அவர் அவசரப்பட்டு ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமய கட்சிகளுடன்செய்துள்ள தேர்தல் உடன்படிக்கைகளே அவரை இவ்வாறு குத்துக்கரணம் அடிக்க வைத்துள்ளன என்றும், உண்மையிலேயே அவர் ஒரு இனவாதி அல்லர் என்றும் அரசியல் வட்டாரங்களில் பரவலான ஒரு கருத்து நிலவுகின்றது.

ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமய கட்சிகளுடன் மஹிந்த செய்து கொண்ட தேர்தல் உடன்படிக்கைகளை அடுத்து சந்திரிக்கா இந்தியாவுக்கான பயணமொன்றையும் மேற்கொண்டார். அந்தப் பயணத்தின் போது இந்தியத் தலைவர்களை சந்தித்து ஸ்ரீ லங்காவின் அரசியல் நிலைவரம் பற்றி கலந்துரையாடினார்.

அப்போது ஸ்ரீ.ல.சு கட்சியின் தலைவி என்ற முறையில் கட்சியின் கொள்கைத் திட்டங்களைத் தானே தயாரிப்பார் என்றும், அதில் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு உள்ளடக்கப்படும் எனவும் அவர்களுக்கு வாக்குறுதி அளித்தார்.

எனவே, எதிர்காலத்தில் இந்தியாவையும் அமெரிக்கா மற்றும் மேற்குலகையும் பகைத்துக் கொண்டு சமஷ்டித் தீர்வுக்கு முற்றிலும் புறம்பான ஒரு தீர்வை மஹிந்தவால் முன்வைக்க முடியாத நிலையே ஏற்படும். அதுபோல் ரணிலும் இந்தியாவை ஆசுவாசப்படுத்தும் வகையிலான சமஷ்டித் தீர்வொன்றையே முன்வைக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்.

ஆனால், சமஷ்டி என்றால் நாட்டுப் பிரிவினை என்று நினைக்கும் சிங்கள மக்கள் இத்தகையதோர் தீர்வொன்றை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதும் இவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. அதனால் பல்வேறு முனைகளில் இழுத்தடிப்புகளே தொடரப் போகின்றன என நிச்சயமாகக் கூறலாம்.

### எம் வழி தனிவழி

காலம் காலமாக இடம்பெற்ற இத்தகைய சரித்திரப் பதிவுகளை தமிழ்த் தலைமையும், மக்களும் மறக்கவில்லை. அதனால் தான் 'எம் வழி தனி வழி' என்று தமிழ் மக்களை வழிநடத்திச் செல்ல தமிழ்த் தலைமை முனைப்புடன் செயற்படுவது போல் தெரிகிறது.

தமிழ் மக்கள் இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பலம் வாய்ந்த அமைப்பின் பின்னால் அணிதிரண்டு நிற்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கு இணைந்த பாரம்பரிய தாயக நிலப்பரப்பின் பெரும்பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன், தாயக நிலப்பரப்பை நிர்வகிப்பதற்கு பலமான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தி உள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் இப்போது சமஷ்டியா, பிராந்திய சபையா அல்லது அதிகாரப் பரவலாக்கலா என்று தென்னிலங்கைத் தலைமைகளுடன் பேரம் பேசக் கூடிய நிலையைக் கடந்து அப்பால் சென்று விட்டனர்.

அதுமட்டுமா? தமது நிர்வாகப் பிரதேசத் தோடு வடக்கு - கிழக்கு இணைந்த தாயகப் பகுதியைப் பாதுகாப்பதற்கான படைகளும் அவர்களிடம் உண்டு. சட்டம், ஒழுங்கைக் கட்டிக்காப்பதற்கான நீதித்துறை, காவல்துறை ஆகியனவும் பலம் பெற்று இயங்குகின்றன.

மேலும், நிதித்துறை, நீதித்துறை, திட்டமிடல் துறை, பொருண்மிய மேம்பாட்டுத் துறை, தனியார் ஒலி, ஒளி பரப்புச் சேவைகள் எனப் பலதரப்பட்ட துறைகளையும் அமைத்து நிர்வகித்து வருகின்றனர். இத்துறைகள் வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றன.

இன்று ஒரு தனி அரசுக்கான - தமிழரசுக்கான கட்டமைப்புகள் அனைத்தையும் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இப்போது தமிழீழத்துக்கான தேசிய கீதத்தை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக சர்வதேசமெங்கும் பரந்து வாழும் கவிஞர்களிடமும், எழுத்தாளர்களிடமும் தமிழீழ தேசிய கீதத்தை உருவாக்கித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த கீதம் தமிழினத்தின் தனித்துவத்தை, அவர்களின் கலாசாரப் பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும் என்று தமது அழைப்பில் கேட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் தமிழ் அரசுக்கான தேசியக் கொடியை ஏற்கனவே உருவாக்கி விட்டனர்.



அதனால் தான் தமிழ் மண்ணில் மட்டுமன்றி, எமது உறவுகள் வெளிநாடுகளிலும் நடத்தும் பொங்கு தமிழ் விழாக்கள்- எழுச்சி விழாக்கள் தமிழ் மக்கள் சுதந்திரமாக தமது தாயகத்தில் வாழ வேண்டும் என்ற அவர்களது துடிப்பை - உள்ளுணர்வை - சர்வதேசத்துக்கு முரசறைந்து சொல்கின்றன.

சிங்கள மக்களோடு சமமாக, சமாதானமாக வாழ வழி தேடியபோது தாம் சந்தித்த தோல்விகளை, வாழ்க்கை இப்போது தமக்கு அபஸ்வரமாக ஒலிப்பதை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டி சுயநிர்ணய உரிமையின் கீழ் எம்மைத் தனியாக வாழ விடுங்கள் என்று கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர் தமிழ் மக்கள்.

அவர்கள் சமஷ்டியை மறந்து விட்டனர். அதிகாரப் பரவல் வேண்டாம் என்கின்றனர். ஆனால், இப்போது தான் தென்னிலங்கையின் தலைமைகள் சமஷ்டியா, அதிகாரப் பரவலாக்கலா அல்லது ஒற்றையாட்சியா என்று முட்டி மோதுகின்றன.

### தந்தை செல்வா

இந்த நேரத்தில் தமிழீழத் தந்தை செல்வநாயகம் தென்னிலங்கை சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளுக்குக் கூறிய வார்த்தைகள் ஞாபகம் வருகின்றன.

"நாங்கள் இப்போது மிகச் சாதாரணமான உரிமைகளையே கோரி நிற்கின்றோம். அவற்றைக் கூட நீங்கள் தருவதற்கு மறுத்து நிற்கின்றீர்கள். ஆனால், எதிர்காலத்தில் இப்போது நாங்கள் கேட்கும் உரிமைகளை விட அதிகமானவற்றை விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறு நீங்கள் விட்டுக் கொடுக்க முன்வரும் போது, எமது மக்கள் அவற்றை நிராகரிக்கக் கூடிய நிலையில் இருப்பார்கள்" என்று கூறியிருந்தார் தந்தை செல்வா

இப்போது, அவை தீர்க்கதரிசனமாகி வருகின்றன. விடுதலைப்புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையிலிருந்து இறங்கி வந்து சமஷ்டி முறையிலான ஆட்சியைப் பரிசீலனை செய்ய உடன்பட்டனர். தென்னிலங்கை அதைக்கூட வழங்குவதற்குத் தயாராக இல்லை. ஒற்றை ஆட்சியா அல்லது ஐக்கிய இலங்கையா என்ற குடுமிச் சண்டை தான் அங்கு, தொடர்கிறது. இவர்களின் சண்டையைப் பார்த்து விடுதலைப் புலிகளின் 'தனி நாடு' கைகொட்டிச் சிரிக்கிறது.

நேதாஜி

# சந்தேகம் கிளப்பும் ஐ. தே. க – மு. கா. ஒப்பந்தம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை ஆதரிக்க முஸ்லிம் கட்சிகள் இரண்டாகப் பிரிந்து அவர்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் ரணிலுடனும், முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழு, தேசிய ஐக்கிய முன்னணி(நுஆ), தேசியக் காங்கிரஸ், ஜனநாயக ஐக்கிய முன்னணி(நுஆ) ஆகிய கட்சிகள் பிரதமருடனும் இணைந்து செயற்படுவதைக் குறிப்பிடலாம்.

இக்கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களின் சார்பில் கோரிக்கைகளை நிபந்தனைகளாக முன்வைத்தும், நிபந்தனைகள் இன்றியும் ஆதரவு வழங்குகின்றன. முஸ்லிம்கள் சார்பில் அவ்வாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அந்தந்தக் கட்சிகள் மக்களுக்கு வெளிப்படுத்தியும், சில கட்சிகள் வெளிப்படுத்தாமலும் உள்ளன.

அவ்வாறு வெளிப்படுத்தாமல் உள்ள கட்சிகளுள் முஸ்லிம் காங்கிரஸும் ஒன்று. ஏனைய முஸ்லிம் கட்சிகள் தாங்கள் முன்வைத்த கோரிக்கைகளை மக்களுக்குத் தெரியப்படுத்தினாலும், தெரியப்படுத்தாவிட்டாலும் பரவாயில்லை என கருதப்படும் அதே சமயம் முஸ்லிம்களின் அதிக செல்வாக்கைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸ், அது ரணிலிடம் முன் வைத்த கோரிக்கைகளை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.

## ஒப்பந்தத்தை வெளியிடுமாறு ஜே.வி.பி வேண்டுகோள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம்கள் சார்பில் 64 அம்சக் கோரிக்கைகளை ரணிலிடம் முன்வைத்தது. அவற்றை நிறைவேற்றுவதாக ரணில் உறுதியளித்ததைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் ரணிலை ஆதரிக்க முன்வந்தது.

முஸ்லிம்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட 64 அம்சக் கோரிக்கைகள் முஸ்லிம்களின் பாதுகாப்பு, சுயநிர்ணயம் மற்றும் உரிமை போன்றவற்றை உறுதிப்படுத்தும் விடயங்களை உள்ளடக்குவதாக முஸ்லிம் காங்கிரஸால் கூறப்படுகிறதே தவிர, அக்கோரிக்கைகளில் ஒன்றையேனும் அது இன்னும் மக்களுக்கு வெளிப்படுத்தவில்லை.

இந்நிலைமையானது ஐ.தே.கவுடன் முஸ்லிம் காங்கிரஸ் செய்து கொண்ட ஒப்பந்தத்தை சந்தேகக் கண் கொண்டே பார்க்கச் செய்கிறது. முஸ்லிம்களுக்குப் பாதகமான வகையில் இதில் ஏதேனும் அடங்கியிருக்குமோ என்ற அச்சத்தை முஸ்லிம்கள் மத்தியில் தோற்றுவிக்கின்றது.

இந்த ஒப்பந்தத்தைப் பகிரங்கப்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், ஜே.வி.பியினரும் பகிரங்கமாகக் கூறிவருகின்றனர். கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற அரச செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச இது பற்றி அழுத்தமாகக் கூறினார்.

“ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் செய்திருந்த ஒப்பந்தங்களை மக்களுக்கு வெளிக்காட்டியதைப் போல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் ரணிலுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மக்களுக்கு வெளிக்காட்ட வேண்டும்.

ரணிலுடன் செய்து கொள்ளப்பட்ட முஸ்லிம் காங்கிரஸினதும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினதும் ஒப்பந்தங்கள் நாட்டின் நலன்களுக்குப் பாதகம் இல்லாத வகையில் அமைந்தால் அவற்றைப் பகிரங்கப்படுத்த ஏன் தயங்க வேண்டும்.

இந்த ஒப்பந்தங்களை மக்களுக்குக் காட்டாமல் இவ்வாறு ஒளித்து மறைக்கும் செயலானது நம்பகத் தன்மையை இல்லாமல் செய்து விடுகிறது. நாட்டைக் கூறு போடும் அம்சங்கள் இவ்வொப்பந்தங்களில் உள்ளனவோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என விமல் வீரவன்ச கூறினார்.

விமல் வீரவன்ச மாத்திரமன்றி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இந்த ஒப்பந்தங்களை வெளிப்படுத்துமாறு பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்து வருகிறார்.

“இந்த ஒப்பந்தங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றால், பிரதமர் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை எடுத்துக் கொண்டு வரட்டும். நானும், முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை எடுத்துக் கொண்டு வருகிறேன். பொது மேடையொன்றில் எமது இரு ஒப்பந்தங்கள் பற்றியும் விவாதம் நடத்துவோம்” என்கிறார் ரணில் விக்கிரமசிங்க.


ரவூப் ஹக்கீம்

## ஒப்பந்தங்களை வெளிப்படுத்துவதில் ஹக்கீமின் நிலைப்பாடு என்ன?

இந்த ஒப்பந்தங்களைப் பகிரங்கப்படுத்துவது தொடர்பாக ரணில் கொண்டிருக்கும் நிலைப்பாடு இது. இந்த நிலைப்பாட்டுடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஒத்துப் போகிறாரா இல்லையா என்பது தான் கேள்வி.

ஓர் இனத்தின் நலன்கள் தொடர்பாக செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களை அந்த இனம் தெரிந்து கொள்ள நினைப்பது நியாயம். அந்த நியாய பூர்வமான நிலைப்பாட்டில் தான் இப்போது முஸ்லிம் சமூகம் உள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் அதிக ஆதரவைப் பெற்ற ஏக பிரதிநிதிகள் தாங்கள் என்ற காரணத்தால் தாங்கள் எடுக்கும் தீர்மானமே முஸ்லிம்களின் தீர்மானம் என எண்ணக் கூடாது. அவ்வாறு தீர்மானித்தாலும் அத்தீர்மானங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு காண்பிக்கப்பட வேண்டியது அவசியம்.

ரணிலுடன் முஸ்லிம் காங்கிரஸ் செய்து கொண்ட ஒப்பந்தம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என ஏனைய முஸ்லிம் அரசியல் தலைவர்களை விடவும் ஜே.வி.பியினரே அதிக அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

ஜே.வி.பியினரின் இந்த வேண்டுகோள் அவர்களின் அரசியல் லாபத்திற்காக இருக்கலாம். ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவுக்கு வேண்டுமென்றால் நாம் எமது ஒப்பந்தத்தைக் காண்பிக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார் ரவூப் ஹக்கீம்.

விமல் வீரவன்சவுக்கு ஒப்பந்தத்தைக் காண்பிப்பது வேறு விடயம். இது தொடர்பாக விமல் வீரவன்ச வேண்டுகோள் விடுத்தாலும், விடுக்காவிட்டாலும் முஸ்லிம்களுக்கு இந்த ஒப்பந்தத்தைக் காண்பிக்க வேண்டியது ரவூப் ஹக்கீமின் கடமைதானே. அதை விடுத்து இவ்வாறான சாக்கு போக்குகளைக் கூறி ஏன் ஒப்பந்தத்தை மறைக்க வேண்டும்? இது தொடர்பாக ரவூப் ஹக்கீமின் நிலைப்பாடு என்ன என்பதை அவர் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

## நிபந்தனைகள் இன்றி பிரதமருக்கு ஆதரவு

ரவூப் ஹக்கீம் முஸ்லிம்கள் சார்பில் கோரிக்கைகளை முன்வைத்து ரணிலுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள இதே நிலையில், முஸ்லிம்களுக்கு நீங்கள் விரும்பியதைத் தாருங்கள் என்ற பொருட்பட நிபந்தனைகள் எதுவுமின்றி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர் சில முஸ்லிம் தலைவர்கள்.

பிரதமருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக அமைச்சர் அத்தாவுல்லாஹ் சில வாரங்களுக்கு முன் கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார். அதில் கலந்து கொண்ட அமைச்சர்கள் அத்தாவுல்லாஹ், அமீர் அலி, ரிஷாத் பதியுதீன், நஜீப்.ஏ.மஜீத் மற்றும் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் ஆகியோர் நிபந்தனைகள் அற்ற வகையில் பிரதமருக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை பற்றி தெரிவித்தனர்.

முஸ்லிம்களுக்கு கரையோர மாவட்டம் வேண்டும் என்றும், தனி அலகு வேண்டும் என்றும், சமாதானப் பேச்சில் தனித்தரப்பு வேண்டுமென்றும் கோஷமெழுப்பி, அவற்றையே முதன்மைப்படுத்தி அரசியல் நடத்தியவர் அத்தாவுல்லாஹ்.

ஆனால், இப்போது இவற்றை எல்லாம் வேண்டாம் என்று கூறிக் கொண்டு இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு வரும் போது, முஸ்லிம்களுக்கும் ஒரு தீர்வு கிடைத்தால் போதும் என்ற கொள்கையை முதன்மைப் படுத்தி அரசியல் நடத்துகிறார் அத்தாவுல்லாஹ்.

அத்தாவுல்லாஹ்வின் இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன? இவரது இப்போதைய இந்தக் கொள்கை முஸ்லிம்களுக்கு எந்தளவு நன்மை பயக்கும் என்பது பற்றி முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும்.

முஸ்லிம்களின் நலன்கள் தொடர்பான இவ்வாறான கொள்கைகளுக்கு மத்தியில் ரவூப் ஹக்கீம் போன்று பலமான கோரிக்கையை முன்வைத்து ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது சரியான முறை என்றாலும், அவற்றை மக்களுக்குக் காண்பிக்காமல் மறைப்பது தான் பிழை.


விமல் வீரவன்ஸ

அதாவுல்லாஹ் மற்றும் அவருடன் இணைந்துள்ளவர்களின் அரசியல் கொள்கைகளை விடவும், பலமான கொள்கைகளைக் கொண்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் இந்த ஒப்பந்த விடயத்தில் பாராமுகமாக இருப்பது மீண்டும் புத்துயிர் பெற்று வரும் முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சியில் எதிர்மாறான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்த ஒப்பந்த மறைப்பு நடவடிக்கையை தமக்கு சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிரான முஸ்லிம் தலைவர்கள் அரசியல் லாபம் தேடவும் வாய்ப்புண்டு.

இதனைக் கருத்தில் கொண்டு ஹக்கீம் செயற்பட மறுப்பாராயின் அது கட்சிக்குப் பாதகமான விளைவைக் கொண்டு வருவதோடு, அந்த ஒப்பந்தத்தில் முஸ்லிம்களுக்குப் பாதகமான கருத்துகள் அடங்கியுள்ளது என்றே கருத வேண்டும். ஆகவே, ஹக்கீம் இது தொடர்பான சரியான முடிவை எடுக்க வேண்டும்.

எம்.ஐ.முபாரக்

**தற்பொழுது வவுனியா மாநகரில்...**

வலது குறைந்தோர்
ஊனமுற்றோர்களுக்கான

- ஊன்று கோல்கள் (Walking sticks)
- கிரட்சஸ் (Crutches)
- முழங்கை கிரட்சஸ் (Elbow Crutches)
- Bed Pan
- URINAL
- Walking Frame
- Wheel Chair (சக்கர நாற்காலி)
- Tricycle

ஆகியவை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

**ASHRAFF & CO**

இல.30, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
தொ.பே 0242222383

**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு எனறு தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**
நவம்பர் 23 – 28 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**
டிசம்பர் 3 - 4
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**
நவம்பர் 7 -10
A.S.N. கற்றலா வீடுதி
392/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



# சுவடுகள்

இளைய அப்துல்லாஹ்


வாழ்வு எப்போதும் இனிமையானதாகவே இருக்கவேண்டும் என்ற விருப்பம் எல்லோருக்கும் உண்டு.

தமிழ் இளைஞர்கள் நான்கு பேர் வசிக்கும் வீடு ஒன்றுக்குப் போனேன். முன்பகுதி குப்பை, குசினி குப்பை, மலசலகூடம் குப்பை, ரும் எல்லாம் குப்பை.

"ஏன் இப்படி இருக்கிறீர்கள் குப்பையை கலியாணம் கட்டிக் கொண்டு?"

"அண்ணை நான் வந்து ஏழு வருஷம், அவன் வந்து ஆறரை வருஷம். உங்கை உவன் வந்து ஐந்து வருஷமும் நாலு மாதமும். ஆனால் எங்கடை வாழ்க்கையில் சந்தோசம் என்ற சாமானே இல்லை அண்ணே". என்று சுற்றி இருந்தவர்களைக் காட்டினார் அவர்களில் ஒருவர்.

அகதிகள் தொடர்பான அக்கறையை இப்பொழுது பிரித்தானிய அரசு குறைத்து விட்டது அகதிகளின் தொகை அதிகரிக்க அதிகரிக்க வேலை கிடைக்குது போவோம். மொழி பிரச்சினை இல்லையா லண்டனுக்கு. யெஸ், நோ, பிளீஸ் என்ற மூன்று சொல்லோடு பிழைத்துக் கொள்ளலாம்



என்ற எண்ணத்தில் எல்லா நாட்டு அகதிகளும் முக்கியமாக ஜேர்மனி, பிரான்ஸ், ஹொலன்ட், பெல்ஜியம், இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து தமிழர்களும், மற்றவர்களும் இங்கே வந்து குவியத் தொடங்கினார்கள்.

ஆனால், இங்கு வந்தவர்களுக்கு நாட்டின் நிலைமைகளை வைத்து அகதி அந்தஸ்து கொடுக்கப்பட்டது.

இமிகிரேஸனில் அகதிகளின் வேலை தான் மலை போல் குவிந்து கிடந்தது.

உள்துறை அமைச்சு அகதிகள் விடயத்தில் எடுக்கும் முடிவுகள் அரசியல் நிலைவரத்தைப் பொறுத்து தான். அகதிகளுக்கான ஒரு நிரந்தர சட்டம் கிடையாது. அரசியல் மாற்றங்கள் அகதிகளின் நிலைவரத்தையும் மாற்றும்.

இங்கு இப்பொழுது வருவது உகந்ததல்ல. சரியான காரணம் சொன்னாலும் பிதுங்கிப் போயிருக்கும் அகதிகளின் வழக்குகளுக்குள் போய் உங்கள் பைல் எங்காவது சிக்குப்பட்டு விடும் என்பது தான் அங்கு இருக்கும் போது லண்டன் பற்றி-காசு கொடுத்து போவது பற்றி கதைப்பவர்களுக்கு நான் சொல்வது.

எனக்குத் தெரிந்த பெண்மணி நான் சொல்வதையும் கேட்காமல் இங்கு வந்து இருபத்து மூன்று லட்சம் கொடுத்து, இப்பொழுது தடுப்பு முகாமில் இருக்கின்றார்.

எப்பொழுது விடுதலை அல்லது திருப்பிஅனுப்புதல் என்ற நிலை. திருப்பி அனுப்பினால் 23 லட்சம் நாசம். அடுத்த முறை கொன்சவேட்டிவ் கட்சிதான் ஆட்சிக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கட்சிகள் அகதிகள் விடயத்தை தான் ஆயுதமாக எடுக்கும். கொன்சவேடிவ் கட்சியின் இப்போதைய தலைவர் மைக்கல் ஹவாட் அகதிகள் விடயத்தில் மிகவும் கடுமையானவர். ஆனால், இரண்டாம் உலகப் போரின் போது ஆஸ்திரியாவிலிருந்து லண்டனுக்கு அகதியாக வந்தவர் மைக்கல் ஹவாட்டின் தந்தையார்.

பதவியும், பவிசும், அரசியல் வாழ்வும் தன்னையே மறக்கச் செய்து விடும். அதற்கு உதாரணம் கான்சவேடிவ் கட்சியின் தலைவர்.

❖ ❖ ❖ ❖

ஒரு வீட்டுக்குப் போன போது இரண்டு முன்னாள் இலங்கை ஆமிக்காரர் இருந்தனர். எங்கு இருந்தாலும் இலங்கையின் நினைவாகவே இருப்பதாக தெரிவித்தனர். இருவரும் சிங்களவர்கள். இலங்கைத் தேர்தல், யுத்த நிலைவரங்கள் பற்றி பேசினர்.

தாண்டிக்குளம் பகுதியில் பல ஒப்பரேஷன் காலங்களில் வேலை செய்தவர்கள். தென்பகுதியின் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். சம்பளத்துக்காக இராணுவத்தில் சேர்ந்தோம் என்று சொன்னார்கள்.

சரியான வழிநடத்தல் இல்லாத காரணத்தாலும், மேலதிகாரிகள் நல்லவர்களாக இல்லாத காரணத்தாலும் சொல்லாமல் கொள்ளாமல் இத்தாலிக்குக் கடல் மார்க்கமாக வந்து அங்கு பல வருடங்கள் இருந்து விட்டு லண்டன் வந்திருக்கிறார்கள்.

எந்த தேர்தல் வந்தாலும் நாட்டில் அமைதி சமாதானம் வரவேண்டும் என்பதே அவர்களின் நோக்கம், பேச்சு. மஹிந்தவா, ரணிலா, சித்தாலேப வைத்தியரா என்பது இல்லை பிரச்சினை. பிரச்சினை வாழ்வா, சாவா, யுத்தமா, சமாதானமா, மக்களின் நிம்மதியா என்பது தான் என்று அந்த ஆமிக்காரரில் ஒருவர் சொன்னார்.

தாங்கள் ஓடி வந்த பொழுது சுமார் மூவாயிரம் இளைஞர்கள் ஓடி வந்ததாகக் குறிப்பிட்டார்.

தமிழ் மக்கள் யுத்தத்தால் இழந்தது போதும் என்னும் மனக் கவலை மற்றவரில் நிறைந்திருந்தது.

எத்தனையோ உயிர்களைக் கொன்று விட்டோம் என்னும் கவலையும் அவர்கள் மனதில் இருந்தது. இனி ஒரு யுத்தம் வந்தால் நாடு நாசமாகி விடும் என்று அச்சத்தோடு பல உள் விவரங்களை தெரிவித்தனர்.

யுத்தம் நிற்பதை விரும்பவில்லை, அரசியல் பண்ணவே விரும்புகிறார்கள் அரசியல் வாதிகள் என்றனர்.

❖ ❖ ❖ ❖

பாதையில் செல்வதற்கு பயமாக இருக்கிறது என்று எனது நண்பன் ஒருவன் தெரிவித்தான். லண்டனின் புறநகர் பகுதியில் வசிக்கிறார் அவர். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். ஊரில் என்றால் இரவு எத்தனை மணிக்கும் போக முடியும். எத்தனை பேர் றோட்டில் பேசிக் கொண்டிருந்தாலும் போக முடியும். ஆனால், இங்கு அப்படி இல்லை.

மூன்று பேர் றோட்டில் பேசிக் கொண்டிருந்தால் அவர்களைத் தாண்டிப் போகப் பயமாக இருக்கிறது. அடித்து விடுவார்களோ என்று.

மொபைல் பறித்தல், சங்கிலி பறித்தல், காசு கேட்டல், சிகரட் கேட்டல் என்று வீதியில் நிற்கும் இளைய பிரித்தானியர்களால் தொல்லைகள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. இதனால் தனியே 10 நிமிடதூரம் நடந்து போகும் வீட்டுக்கு, ஐந்து பவுண்ஸ் பணம் கொடுத்து ரக்ஸியில் போக வேண்டிய கரைச்சல் இருக்கிறது என்று சலித்துப் போனார்.

லண்டனிலும் புறநகர் பகுதிகளிலும் அடிக்கடி வெளிநாட்டவர் மீதான வன்முறைகள் வலுவடைந்து வருகின்றன.

பொலிஸாரும் சுதேசிகளுக்கு ஆதரவாகவே இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஐரோப்பா முழுவதும் இப்பொழுது ஒரு கொதிநிலையே காணப்படுகிறது.



அது வெடிக்கக்கூடிய நிலையும் பதற்றமும் இருக்கிறது.

பிரான்ஸின் புறநகர் பகுதிகளில் நடைபெறும் வன்முறைகள் நாட்டுக்குள்ளும் புகுந்து விடும் ஆபத்து இருப்பதாக பிரெஞ்சுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அது ஜெர்மனி, ஹொலன்ட், இங்கிலாந்துக்கும் பரவும் ஆபத்து இருக்கிறது என்று தெரிவிக்கின்றனர்.

வேலை வாய்ப்பின்மை, அகதிகளுக்கான நெருக்கடி, குடியேற்ற வாசிகள் மீதான அழுத்தம், இளைஞர்களை அவமதிக்கின்றமை எல்லாம் சேர்ந்து இளைஞர்களை கொதிப்படைய வைத்திருக்கிறது. இது ஒரு புற்று நோய் கிருமிபோல அரித்துக் கொண்டிருக்கிறது ஐரோப்பாவை. ஐரோப்பா ஆடித்தான் போயிருக்கிறது. அடுத்தது என்ன?

❖ ❖ ❖ ❖

ஒரு முறை கண்டியில் எந்தவித குற்றமுமில்லாமல் நண்பன் செய்த தவறுக்காக இரண்டு மணித்தியாலம் கோர்ட் ஜெயிலில் இருக்க வேண்டி இருந்தது எனக்கு.

ஊத்தை, குப்பை, எச்சில், நாற்றம் நடுவே மூக்கை பொத்திக் கொண்டு இருந்தேன். அதற்கிடையில் எனது 'பாக்கர்' பேனாவை பறித்தெடுத்து விட்டார் கூண்டுக்கு முன்னால் இருந்த பொலிஸ்காரர்.

லண்டனில் இரண்டரை மாதம் ஜெயிலுக்கு போய் வந்த ஓர் இளைஞனைச் சந்தித்தேன். அவர் நொந்து நூலாகிப் போயிருந்தார்.

கொலைக்குற்றத்திற்காக உள்ளே போனவரை பத்தாயிரம் பவுண்ஸ் கட்டி பிணையில் எடுத்திருக்கிறார் தமையன். சுமார் பதினெட்டு இலட்சம் இலங்கை ரூபாய்கள்.

பிரித்தானியாவில் கிரிமினல் குற்றம் செய்பவர்களுக்கு சிறையில் மனோவியல் உளைச்சல்கள் கொடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இரவு அரை மணி நேரத்துக்கு ஒரு பெரிய சத்தத்தை ஒலிபெருக்கியில் போட்டு குழப்பிவிடுகிறார்கள் நித்திரையை.

உணவோடு சேர்த்து மனக்குழப்பம் ஏற்படுத்துகிற இரசாயனங்களை உட்கொள்ளக் கொடுக்கிறார்கள். அதனால் கிரிமினல்களின் புத்தி பேதலித்து போகிறது என்றும் சொன்னார் அவர்.

அவர் வெளியில் வந்து அரைவாசி சித்தபிரமை பிடித்தவர் போலவே காணப்பட்டார். கிரிமினல் வேலைகளில் இனி மேல் ஈடுபடக்கூடாது. அப்படியான மனநிலையை மாற்றித்தான் உளவியல் தாக்கத்தோடு அனுப்பி விடுகிறார்கள் வெளியில். மனித உரிமைகளை மதிக்கும் நாடுதான் இது. ஆனால், அது குற்றவாளிகளுக்கு இல்லை என்கிறது பொலிஸ்.

சும்மா இருந்தால் இரு, அல்லது இது தான் நடக்கும் என்கிறார்கள். தமிழ் கிரிமினல்களால் முழு சமூகத்துக்குமே கரைச்சல் என்கிறார்கள் தமிழ் புத்திஜீவிகள். வாழ்வுக்கே இலக்கணமாக வாழ்பவர்கள் பிரித்தானியாக்காரர் என்று தான் பெயர். சுதேசிக்கு ஒரு நீதி வாழ வந்தவர்களுக்கு இன்னொன்று. மனித உரிமையாவது மண்ணாங்கட்டியாவது.

❖ ❖ ❖ ❖

ரஞ்சகுமார் நல்ல சிறுகதையாளர். 'மோகவாசல்' தொகுப்பை தேடிப்படித்திருக்கிறேன். கவிதைகள், சிறுகதைகளில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியவர். காணும் போதெல்லாம் சொல்லுவேன்.


"எழுதுங்கள் எழுதுங்கள்" என்று. ஆனால், இப்பொழுதுதெல்லாம் எழுதவே மாட்டேன் என்கிறார். அவரின் கவிதை எனக்குப் பிடித்த ஒன்று.

**நான் அனுமதிப்பதேயில்லை**

உழவனின் மகனும், அந்தச்
செப்படவனின் மகனும்
எங்கோ கண்காணாத இடத்துக்கு
ஓடிப் போனார்கள்
அவர்களைப்பற்றி கிசு கிசுத்துக்
கதைக்கிறார்கள் கிழவிகள்.
அவர்கள் துப்பாக்கி சுடுவார்களாம்!
துப்பாக்கிகள்...!
அவர்களின் துப்பாக்கிகளும் முட்டாள் தனம்
கொண்டனவே
துப்பாக்கிகளுக்கு மூளையே கிடையாது
எல்லாவற்றையும் நாசம் செய்வன அவை.
சூரியனைக் கூட.

(இன்னும் வரும்)

# கவர்ச்சி காட்டாதே



'அந்நியன்' படம் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் கொஞ்சம் குண்டாகி இருக்கிறார், சதா. முன்பைவிட தெளிவாகத் தமிழ் பேசுகிறார். தற்போது 'திருப்பதி' படத்தில் அஜித்தோடு ஜோடி போட்டிருக்கும் சதாவை படப்பிடிப்பு இடைவேளையில் சந்தித்து வம்பளந்தோம்.

**"அழகாக தமிழ் பேசுறீங்கள், எப்படி சதா?"**

"பிறந்து வளர்ந்தது மும்பை என்றாலும் எனக்கு வாழ்வளித்தது தமிழ் படங்கள்தான். அதனால்தான் முயற்சி செய்து தமிழ் பேசக் கற்றுக் கொண்டேன்."

**"கொஞ்சம் குண்டாகிவிட்டீர்களே"**

"அந்நியன் படம் வெளிவந்த பிறகு ஒரு மாதம் வீட்டில் ஓய்வெடுத்தேன். அம்மாவின் சிறப்புக் கவனிப்பால் லேசாக சதை போட்டுவிட்டது!"

**"சதைதானே நடிகைகளுக்கு முதல் சொத்து?"**

"அப்பிடின்னு யார் சொன்னது? கவர்ச்சியை மட்டும் வைத்தே நடிகை ஆகிவிட முடியாது. நடிப்பும் சேர்ந்தால் மட்டுமே நிலைக்கமுடியும். சக நடிகைகளிடம் 'கவர்ச்சி காட்டாதீர்கள் . நடிப்பை மட்டும் காட்டுங்கள் ' என்றுதான் நான் சொல்வேன். நடிகைகள் அதிகம் கவர்ச்சி காட்டி நடிப்பது தப்பு. இன்றைய இளைய சமுதாயமே சினிமாவைப் பார்த்துத்தான் கெட்டுப் போகிறது!"

**"இவ்வளவு வாய் பேசும் நீங்கள் அந்நியன் படத்தில் கவர்ச்சி காட்டியது ஏனோ?"**

"இயக்குனர் இயக்கும் நடிகை நான். சங்கர் சொன்னதைத்தான் அந்நியன் படத்தில் செய்தேன். அவர் சொன்னதை செய்யமாட்டேன் என்று எதிர்க்கும் தைரியம் எனக்கு கிடையாது!"

**"பிரியசகி படத்தில் நீங்கள் மாதவனோடு ஜோடி சேர, கிசு கிசுக்கள் தூள் பரத்துகின்றனவே?"**

"மாதவனும் நானும் நீண்ட கால நண்பர்கள். அவர் மனைவியும் நானும் தோழிகள். கிசு கிசுக்களை எழுதி எங்கள் நட்புக்கு வேட்டு வைக்க நினைத்தார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை . இப்போதும் நாங்கள் நல்ல நண்பர்கள்!"

**"நடிகைகள் அரசியலுக்கு வருவது பற்றி?"**


"வாழ்த்துகிறேன். வரவேற்கிறேன். என் நீண்ட நாள் ஆசை, அரசியல்தான். பொறுத்திருந்து பாருங்கள், நானும் அரசியலில் குதிப்பேன்."

**"குஷ்பு சொன்னது பற்றி உங்கள் கருத்து ?"**

"குஷ்பு போல் கவர்ச்சியாக குண்டாக ஆகவேண்டும் என்பது என் ஆசை! அவ்வளவுதான்!"

# நம்பிக்கைப் பயணம்

## புனர்வாழ்வு, புனரமைப்பு, மக்களிடையே நல்லிணக்கம் ஆகியவற்றிற்கான இடைவிடாத அர்ப்பணிப்பு




### நோக்கம்

### செயற்பாடு

சமூக அடிப்படையிலான அணுகுமுறை.
உட்கட்டமைப்புக்களை மறுசீரமைத்தல்.
நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவும் வகையில் தனிப்பட்டவர்களை வலுவூட்டுதல்.

### வீடமைப்பு



மடு பிரதேசத்திலுள்ள கீரிசுட்டான் மற்றும் பரசன்குளம் மீள்குடியேற்றக் கிராமங்களில் 42 வீடுகள் அமைத்தல்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள 11 கிராமங்களில் 416 நிரந்தர வீடுகளும் 313 மலசலகூடங்களும் அமைத்தல்.

### கடற்றொழில்



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் 2,400 மீனவர்களுக்கு ரூபா 30 மில்லியன் நிதி உதவி வழங்குதல்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் மீனவர்களுக்கான ஓய்வு மண்டபம்

### கல்வி

2004/2005இல் 378 வேலைத்திட்டங்கள்



முருங்கன் மகாவித்தியாலயத்தில் 2 மாடி பாடசாலைக் கட்டிடம்.

அடம்பன் மகாவித்தியாலயத்தில் 2 மாடி பாடசாலைக் கட்டிடம்.

### நீர்ப்பாசனம்



புனரமைப்புச் செய்யப்பட்ட பச்சைக்குளம்.

புனரமைப்புச் செய்யப்பட்ட கல்நாட்டிக் குளம்

### கண்ணிவெடி அகற்றல்

2005 ஆகஸ்ட் வரை 136,349 கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு, 18,907,811 சதுர மீற்றர் பிரதேசம் துப்புரவு செய்யப்பட்டது



புத்தூரிலும் அரியாலையிலும் நிலக்கண்ணிகள் அகற்றப்படுகின்றன.

### தொழிற் பயிற்சி



வடக்குக் கிழக்கில் 6,500க்கு மேற்பட்ட இளைஞர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்க ரூ.180 மில்லியன் முதலீடு.

### சுகாதாரம்

2004/2005இல் 159 வேலைத்திட்டங்கள்



மட்டக்களப்பு, மகிழவெட்டுவானில் மத்திய மருந்தகம்.

சிலாவத்துறை கிராமிய வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட நீர்த்தாங்கி, பிரேத அறை மற்றும் அம்புலன்ஸ் தரிப்பிடம்.

### போக்குவரத்து



யாழ் மாவட்டத்திலுள்ள கைதடி பாலம்

திருகோணமலை, இறால்குழியில் படகுச் சேவை

### நீர் விநியோகம்



முல்லைத்தீவு, கனகரத்தினபுரத்தில் நிறுவப்பட்ட பொதுக் கிணறு

மன்னார் நகரில் புனரமைப்புச் செய்யப்பட்ட நீர் விநியோகத் திட்டம்



"விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உட்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு 1995ஆம் ஆண்டு முதல் நான் அயராது முயன்று வந்துள்ளேன்...

எமது பிரஜைகள் இந்த நாட்டின் எப் பகுதியில் வாழ்ந்தாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், யாரின் கட்டுப்பாட்டிற்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் சுகாதார, கல்வி மற்றும் பொருளாதார வசதிகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். சமாதானத்திற்கு அபிவிருத்தி சிறந்த வழியென நாம் நம்புகிறோம்...

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் சேர்ந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை அது வழங்குகின்றது."

(ஆசிய சமூகம், செப்டெம்பர் 2005)

### நல்லிணக்கம்



செய்பிறியும் ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டவர்களில் ஒருவருக்கு ஜனாதிபதி இழப்பீடு வழங்குகிறார்

### நிவாரண உதவிகள்



வவுனியா, சிதம்பரபுரம் அகதிகள் முகாமிற்கு கிடுகுகள் வழங்கப்படுகையில்

மட்டக்களப்பில் சுனாமியால் இடம்பெயர்ந்தோருக்கு உதவிகள் வழங்கப்படுகையில்

நிவாரணம், புனர்வாழ்வளிப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு

# பெரும் தோட்ட அபிவிருத்திக்கு 10 ஆண்டுத் திட்டம்

நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம 8ஆம் திகதி தனது இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளார்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் பல்வேறு விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். விசேஷமாக பெருந்தோட்ட அபிவிருத்திக்கு தான் என்ன செய்யப் போகிறார் என்பதையும் தொகுத்துக் காட்டி இருக்கிறார்.

பெருந்தோட்ட அபிவிருத்திக்காகப் பத்தாண்டு அபிவிருத்தித் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதன்படி பெருந்தோட்ட அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் ஒன்றை ஏற்படுத்தவுள்ளார்.

முக்கியமாக பெருந் தோட்டத் துறையில் பெரும் பிரச்சினையாக இருப்பவை குடியிருப்புகள். நாட்டின் தேசிய வருமானத்தில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் நிலையே இன்னும் பரிதாபமாகவே இருக்கிறது.

சொந்தமாக ஒரு அங்குலம் காணியும் இல்லை. குடியிருக்க சொந்த வீடும் இல்லை. வெளியுலகை ஏமாற்றவும் - தனது வரவு செலவுத் திட்டத்தை கவர்ச்சியாகக் காட்டுவதற்கும் மாறி மாறி வரும் அரசுகள் பல தந்திரோபாயங்களைக் கையாண்டு வந்துள்ளமை நாம் கண்ட அனுபவம்.

இப்படி கண்துடைப்பாக ஆங்காங்கே சில பகுதிகளில் காணிகளை வழங்கி உள்ளார்கள். மாடி மனை என்ற பெயரில் வரிசை லயத்திற்கு மேல், மேலும் ஒரு லயத்தைத் தூக்கி வைத்துள்ளனர். இரண்டு பேச்சஸ் கூட இல்லாத இந்த வீடுகளுக்குக் கூட அதற்கான வீட்டு உறுதிகள் வழங்கப்படவில்லை. இன்னும் அவர்கள் கொத்தடிமைகளாகவே வைக்கப்பட்டுள்ளனர் என்பது தான் உண்மை.

தோட்டத் தொழிலாளர்கள் மாடி மனைகளில் வாழ்கின்றனர். தேனும் பாலும் தான் குடிக்கின்றனர் என்று வீராப்புப் பேசுவது எல்லாம் வெறும் பம்மாத்து. மலையகத்தில் தாமே வீரர்கள் என்று காட்டிக் கொள்வதற்காக உண்மை நிலையை மூடி மறைக்கும் ஊஹாரித்தனம். மாறி மாறி வரும் அரசுகளில் அமைச்சர்களாக இருந்தவர்கள் யாராவது ஒரு தொழிலாளிக்கு காணி அல்லது வீட்டுக்கான உறுதி பத்திரம் வாங்கிக் கொடுத்துள்ளோம் என்று கூற முடியுமா? இன்று வரை அப்படி ஏதும் இல்லை. அதே போன்று நிதி அமைச்சர் சரத் அமுனுகம இப்பொழுது தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்புத் திட்டத்தில் கரிசனை காட்டி உள்ளார்.

பத்தாண்டு கால அபிவிருத்தித் திட்டத்தில் முதல் கட்டமாக 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கப் போவதாகவும், அதற்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் கூறி உள்ளார்.

தோட்டத் தெழிலாளர்களுக்கு குடிநீர் வழங்கல். முன்பள்ளி (மொண்டிசூரி) களை அமைத்தல், நிர்வாகப் பாதுகாப்பு, விளையாட்டுமைதானங்களை அமைத்தல் என்பவற்றிற்காக ரூ.164 கோடி பத்துஇலட்சம் ஒதுக்கப் போவதாக குறிப்பிட்டுள்ளார்.

அதே வேளை, மலைய மக்களின் கல்வி அபிவிருத்திக்காக நுவரெலியாவில் தொழில் பயிற்சிக் கல்வி ஒன்றை அடுத்த ஆண்டில் நிறுவப் போவதாகவும், மலையகத்திற்கென தனியான பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்யப் போவதாகவும் கூறுகின்றார்.

இத்தோடு நின்று விடவில்லை. பெருந் தோட்டத்துறையில் உள்ள அனைத்து வைத்திய சாலைகளும், பாடசாலைகளும் மாகாண சபைகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் என்கிறார். இந்த திட்டங்களையும் உறுதி மொழிகளையும் வாசிக்கவும், கேட்கவும் மிகவும் நன்றாகத் தான் இருக்கின்றது.

இதுவரை தோட்டத் தொழிலாளர்கள் எத்தனையோ வரவு செலவுத் திட்டங்களை பார்த்து பழக்கப்பட்டு விட்டனர். அவை பார்க்க மட்டுமேயன்றி தொட்டு அனுபவிக்கக் கூடியதாக இல்லை. இன்று வரை அந்த உறுதி மொழிகள் எட்டாக் கனிகளாகவே இருக்கின்றன.

இப்பொழுது ஜனாதிபதித் தேர்தல் அதோ இதோ என்று இருக்கும் நிலையில் நிதி அமைச்சர் தனது வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். இது ஒரு கவர்ச்சிகரமான வரவு செலவுத் திட்டமாகத்தான் இருக்கிறது. இது மக்களின் மனதைக் கவர்வதற்கான திட்டமா அல்லது வாக்குகளைக் கவர்வதற்கான திட்டமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் காலம் காலமாகவே ஏமாற்றப்பட்டு வருபவர்கள். ஏமாற்றத்தின் விளிம்பில் நிற்பவர்கள். அவர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படக் கூடாது. வரவு செலவுத் திட்டமும், வாக்குகளும் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாக மட்டும் இருக்கக் கூடாது. அவை செயற்படுத்தப்பட வேண்டும்.

## மலையகக் கண்ணோட்டம்



இரா. புத்திரசிகாமணி

# சதைத் தொழில் தரகர்கள் - ஜாக்கிரதை

தலைநகரிலும், புறநகர்ப்பகுதிகளிலும் இன்று பெரிதாகப் பேசப்படுவது பாலியல் வல்லுறவும் விபசாரமும்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சம்பவங்களின் பின்னணியில் மறைக்கப்பட்டுள்ள சில உண்மைகள் மிகவும் அதிர்ச்சி தரக்கூடியவையாக இருக்கின்றன.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளை துருவிப் பார்க்கும் போது, அதில் மறுபக்கம் மறைக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனையாகவே இருக்கின்றது. இதற்கு முக்கிய காரண கர்த்தாக்கள் சமூக சேவகர்கள் போன்று நடமாடும் சதைத் தொழில் தரகர்கள்.

இவர்களுடைய பசப்பு வார்த்தைகளிலும், நடிப்பிலும் பல படித்த யுவதிகள் கூட சிக்கிச் சீரழிகின்றனர். இவர்கள் குறிவைப்பது நாகரிகமாகவும், ஆடம்பரமாகவும் வாழ வேண்டும் எனத் துடிக்கும் இளம் யுவதிகளையும், இளம் விதவைகளையும் தான்.

இப்படியானவர்களை அணுகி "கொழும்பில் கம்பெனிகளிலும், தொழிற்சாலைகளிலும் நிறைய வேலைகள் இருக்கின்றன. உயர் அதிகாரிகள் எனது நண்பர்கள். இங்கே வேலை வெட்டி இன்றி கஷ்டப்பட வேண்டுமா? நல்ல வேலை, வசதியான வாழ்க்கை, இலவசமான தங்குமிட வசதி, கட்டுப்பாடின்றி சுதந்திரமாக வாழலாம், கை நிறைய வருமானம், பெற்றோருக்கு உதவலாம்" என அக்கறையுடன் கூறுகின்றனர்.

இவர்களுடைய ஆசை வார்த்தையில் மயங்கிய யுவதிகள் பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் கொழும்புக்கு முட்டை கட்டி விடுகின்றனர்.

இங்கே வந்ததும், இலவச தங்குமிட வசதி எனக் கூறப்படும் அப்படியான இடங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். முதல் ஒரு வாரம் ஓய்வு, நல்ல சாப்பாடு, நித்திரை, படம் பார்த்தல், கோல்பேஸ் கடற்கரைக்குச் செல்லுதல், மிருகக் காட்சி சாலை பார்த்தல், ஐஸ்கிறீம், பழவகை, சுவையான சாப்பாடு இவை எல்லாமே இலவசம். இந்த சுகபோகம் அப்பாவிப் பெண்களை மெய் மறக்கச் செய்து வருகின்றது.

தொழில் தேடி வந்தோம். உழைக்க வேண்டும் என்ற எண்ணம் மறந்து விடுகின்றது. காரணம் இவர்களுக்கு வழங்கப்படும் ஐஸ்கிறீம்களிலும், குளிர்பானங்களிலும் சிறிது சிறிதாக கலக்கப்பட்ட போதைப் பொருள் இவர்களை குடிப் போர்வழிகளாக்கி விடுகின்றது.


ஒரு வாரத்தின் பின் கம்பெனி டிரக்டர்கள், மனேஜர்கள், முதலாளிமார்கள் என அறிமுகப்படுத்தப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இந்த நேர்முகப் பரீட்சைகள் எல்லாம் ஹோட்டல் அறைகளிலும், படுக்கை அறைகளிலும் தான். ருஷியான சாப்பாடு, சுவையான சிற்றுண்டி, புதுமையான சுகம் இவர்களை அடிமைப்பட வைத்து விடுகின்றது. தங்குமிடம் திரும்பும் போது சில மைல் தாள்கள் கைமாறுகின்றன.

ஆரம்பத்தில் இத்தொழில் அருவருப்பாகவும், வேதனையாகவும் இருந்த போதும் படிப்படியாக அதுவே கட்டாயத் தேவையாகி விடுகின்றது. அவர்களுடைய தலைவிதியே மாறிவிடுகின்றது.

இவர்கள் கொண்டுவரும் பணத்தில் பெரும்பகுதி தங்குமிட வசதி உரிமையாளருக்கும், தரகர்களுக்கும் போக மிஞ்சிய ஒரு பகுதியை பெற்றோருக்கு அனுப்பிவிடுகின்றனர். இதை வெளியே சொல்லவும் முடியவில்லை, கடைசி வரை மூடி மறைக்கவும் முடியவில்லை. எல்லை மீறும் போது பொலிஸாரிடம் மாட்டிக் கொள்கின்றனர். அங்கே அவர்களுக்கு சதைத் தானம் செய்ய வேண்டும். இல்லையேல் அடி, உதை, வழக்கு, வம்பு.

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளை தொழிலுக்கு அனுப்பும்போது இதில் முன் எச்சரிக்கையாக இருங்கள். இந்த சதைத் தொழில் தரகர்களிடம் ஏமாந்து விடாதீர்கள். இது ஆலோசனை அல்ல, கண்டிப்பான எச்சரிக்கை.



# டேஸ்ட்கடை தனிகாசலம்

தனிகாசலம் அண்ணன் கடைக்குப் போக தயாராகிக் கொண்டிருந்தார். அப்பொழுது சிவலிங்கம் நடராசன், கோகிலா உட்பட பல இளைஞர்கள் கூட்டமாக வந்தனர். வந்தவர்கள்,

"வணக்கம் அண்ணா" என்று கோஷ்டி கானம் இசைப்பது போல் கூறினர்.

நாளைக்கு ரணில் விக்கிரம சிங்கவை தூக்கி உச்சியில் வைத்த மாதிரி இருக்கும். இன்னும் ஒரு நாள் என்னடா வென்றால் தலைகீழாகத் தூக்கி அடித்த மாதிரி இருக்கும்"

"அதானே பத்திரிகை தர்மம். தமக்கு கிடைக்கும் செய்திகள் உண்மைதானா என்பதை ஒரு முறைக்குப் பலமுறை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டு வெளுத்துக்கட்டி விடுறாங்கள்"

"இந்தப் பேப்பரைப் பார்த்தால் எந்த ஒரு அரசியல் கட்சியின் பக்கமும் பக்கச் சார்பாக செய்திகளைப் போடாமல் பெலன்ஸ் பண்ணி போடுவது வெளிச்சமாகி விட்டது."

# குட்டையை குழப்பி குட்டு வாங்கிய நவீன் தம்பி

"வணக்கம் வணக்கம், என்ன காலையிலே எல்லோரும் கூட்டமாக வந்து இருக்கிங்க. என்ன விடயம். நடா...! கையிலிருக்கும் பேப்பரை இப்படித் தா. அதில் என்ன விசேஷம் போட்டு இருக்கு"

"அந்த பேப்பர்ல இருக்க செய்தி விசேஷமாக மட்டும் இல்லை, அதிர்ச்சியாகவும் இருக்கு. அதை நம்புவதா? இல்லையா என்ற நிலை ஏற்பட்டுள்ளது. நீங்களே இதைப் பாருங்கள்" என நடராசன் பேப்பரை நீட்டினான்.

பேப்பரை வாங்கிப் பார்த்ததும் தனி அண்ணன் முகத்திலும் சிறிது கடுப்பு ஏற்பட்டது.

"என்னடா அப்பா, இந்த பாவி மனுஷன். இப்படி பேசி இருக்கானே. வெண்ணெய் திரண்டு வரும் போது தாளியை உடைப்பது போல அல்லவா பேசி இருக்கான்"

"ஆமாங்க அண்ணன். இதைப்பார்த்ததும் எங்களால் கூட நம்ப முடியல. ஆனால் கூட்டத்திற்குப் போன நமது நண்பர்களும் அதை உறுதிப் படுத்துகின்றனர்"

"இதில சந்தேகப்பட என்ன தம்பி இருக்கு, இன்றைக்கு கொழும்பில இருந்து வர்ர பேப்பர்களில் இது ஒன்றுதான் துணிச்சலாகவும் பால்பிடிக்காமலும் உண்மைகளை அப்படியே போட்டு புட்டுக் காட்டுது"

"அண்ணன் சொல்றதும் சரிதான். இவங்க போடுற செய்திகளைப் பார்த்தால் ஒரு

"ஆமாம் தம்பி, இந்த கருணா விடயத்தை பாருங்க. நவீன் திஸாநாயக்க கினிகத்தேனயில் பேசும்போது கருணாவை உருவாக்கியதே ரணில் விக்கிரமசிங்கதான் புலிகள் யுத்தம் ஒன்றை ஆரம்பித்தால் பதிலடி கொடுக்க இந்தியாவும் அமெரிக்காவும் தயார் என்று இல்லையா மனுஷன் கூறி இருக்கார்".

"அண்ணே கூட்டம் நடந்ததோ கினிகத்தேன. அது ஒரு சிங்கள ஏரியா. கூட்டத்திற்கு பெரும்பாலும் சிங்களவர்களே வந்திருப்பார்கள். அந்த கூட்டத்தைப் பார்த்து இப்படி பேசுவாரோ?

"என்ன தம்பி அப்படி சொல்லிப்புட்டே! ஒரு வேளை இப்படியும் இருக்கலாம் இல்லையா?

"அது என்னங்க அண்ணே?"

"அதாவது ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதியானால் நாட்டின் ஒருபாதியை பிரபாகரனுக்குப் பிரித்துக் கொடுத்துவிடுவார் என்று மகிந்த ராஜபக்ஷவின் ஆட்கள் தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகின்றனர் இல்லையா?

"அதுக்காக ரணில் அப்படி இல்லை. சமாதானப் பேச்சு நடக்கும் போதே பிரபாகரனுக்கு எதிராக கருணாவை உருவாக்கியவர் கடைசிவரை பிரபாகரனிடம் நாட்டை பிரித்து கொடுக்கமாட்டார் என்று கூறி சிங்கள மக்களிடம் ஓட்டுக்களைப் பெறுவதற்காக இப்படி தொப்பியை பிரட்டிப் போட்டு விட்டாரோ?"



"என்னதான் தொப்பியைப் பிரட்டிப் போட்டாலும், கொஞ்சமாவது உண்மை இருக்கத்தானே செய்யும். பானையில் இல்லாமல் எப்படி அகப்பையில் வந்து இருக்க முடியும்?"

"நடா நீ கேட்கிற கேள்வியும் சரிதான். இப்ப எனக்கு பழைய கதை ஒன்று ஞாபகம் வருது."

"அது என்ன அண்ணே பழைய கதை"

"அதாவது தம்பி மட்டக்களப்பில முன்பு ஒரு யூ.என்.பி மந்திரி இருந்தாரே... அவர்தான் மௌலானா... இந்த மனிதர் தானே கருணா குழுவினரை பாதுகாப்பாக கொழும்புக்கு அழைத்து வந்தார்"

"ஆமாங்க அண்ணே எனக்கு இப்பதான் அந்த விசயம் தட்டுப்பட்டது. இந்தச் செய்தியைக் கூட இந்தப் பேப்பர் தானே வெட்ட வெளிச்சமாக்கியது."

"உண்மைதான் தம்பி. இந்தப் பேப்பர் செய்தியை ஒப்புக்கொண்டு அந்த மௌலானா எம்.பி பதவியையே இராஜினாமா செய்துவிட்டார். "இப்ப நம்ம யூனியர் திஸாநாயக்க ஏதோ ஒன்றைக் கூறிவிட்டு மாட்டிக் கொண்டார். "இவர் குட்டையைக் குழப்பிவிட்டார். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீன் பிடிக்கப் பார்க்கிறார்கள்."

"எது எப்படியோ தம்பி, இப்படி பொறுப்பற்ற தனமாகப் பேசி நாட்டைக் குழப்பிவிடக் கூடாது. நமது மக்கள் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். எரிகின்ற கொள்ளி எல்லாம் சுடத்தானே செய்யும்" என்று கூறி முடித்துவிட்டார் தனி அண்ணன்.

தென்னிலங்கையில் ஜனாதிபதித் தேர்தலின் இறுதிக் கட்ட காட்சிகள் அரங்கேறத் தொடங்கி விட்டன. பிரதமர் நோக்கத்துக்காக தமது கட்சியினதும், தமது கட்சித் தலைவியினதும் கொள்கை களை பேரினவாதிகளிடம் அடமானம்

# வெளிக்கிளம்பும் இனவாத பூதம்



நவீன்

வைத்துள்ளார் பிரதமர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தம்மைச் சிறு பான்மை மக்களின் விசுவாசியாகக் காட்டு வதன் மூலம் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைத் திரட்டும் தந்திரோ பாயத்தில் - உத்தியில் ஈடுபட்டுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிர மசிங்க.

எனினும், அவரையும் மீறி, அவரது கட்சியினுள் இருந்து அவர்களின் உண் மைத் தன்மையை - சுயருபத்தை அம்பலப் படுத்துமாற்போல் கருத்துகள் வெளிவந்து விடுகின்றன.

அண்மையில் ஹட்டன் கினிகத்தேனை யில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரை யாற்றிய ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பி னராகவும், அக்கட்சியின் முன்னாள் அமைச்சராகவும் இருந்த காமினி திஸநாயக் காவின் மகனும், தற்போது ஐ.தே. கட்சி யிக் பிரதித் தலைவரான கருஜயசூரியா வின் மருமகனுமான நவீன் திஸநாயக்க போர் ஏற்பட்டால் அதற்குத் தயார் என வும், அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுக ளின் படைகளை பயன்படுத்தி புலிகளை ஒடுக்குவோம் எனவும் கருத்து வெளியிட் டிருந்தார்.

இதேபோன்றுதான் கடந்த நாடாளு மன்ற அமர்வில் அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணைமீது நாடாளுமன்றில் உரையாற்றிய நவீன், 'போர் என்றால் போருக்கும் நாம் தயார்' என்ற சாரப்பட உரையாற்றியிருந்தார். 1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தைத் தொடர்ந்து தமிழ்த் தேசத்தைப் பார்த்து அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்த்தனா "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என முழங்கியதற்கு ஒப்பாக இருந்தது நவீன் திஸநாயக்காவின் பேச்சு.

அவர் இரண்டு விடயங்களை வெளிப் படுத்தி ஐ.தே.கவின் குட்டை உடைத் திருந்தார்.

புலிகளிடம் இருந்து கருணா குழு பிரியக் காரணமாக இருந்தது ஐ. தே. க தான் . மற்றது ரணில் ஜனாதிபதியான பின்னர் புலிகள் யுத்ததைத் தொடங்கினால் இந்திய, அமெரிக்க இராணுவ உதவியுடன் அவர்களை ஒடுக்கு வோம் என்று பேசினார். ரணில் தலைமை யிலான ஐ.தே. கவின் உண்மையான முகத்தை தமிழ்மக்கள் இப்பேது இனம் கண்டுள்ளனர்.

அதிகாரமற்ற பிரதமராக மட்டும் இருக்கும்போதே ரணில் புலிகளுக் கெதிரான சர்வதேச வலையை பின்னிக் கொண்டு புலிகளை மாட்டுவதற்கு தயாராக இருந்தார். பல இடங்களில் புலிக ளின் தலைமை மேற்கொண்ட சாதுரிய மான நகர்வுகளால் தமிழ் மக்களின் உரி மைப் போராட்டம் காப்பாற்றப்பட்டது.

நவீன் திஸநாயக்காவைத் தொடர்ந்து ரணிலின் மூளையாகச் செயற்படுபவரும், சமாதான பேச்சு காலத்தில் முக்கிய பங்கு வகித்தவருமான மிலிந்த மொரகொட, ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியும் நவீனின் கருத்துகளும் ஒன்றா கவே காணப்படுகின்றன.

மிலிந்த மொரகொட கருத்து தெரிவிக்கையில், "ஐ.தே. கட்சியின் அதிகளவான பங்களிப்பினால் முன் னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகளின் உருவாக்கமே கருணா குழு. யுத்த சூழ்நிலையில் கருணா போன்ற அதிருப்தியாளர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் உருவாகவே முடியாது. துப்பாக்கிகளை அமைதியடைய வைத்து புலிகளுக்கு மாற்றுவழியை திறந்து விட்டது ஐ.தே. க.தான். இலங்கை அமைதி முயற்சியில் சர்வதேச வலைப் பின்னலை ஏற்படுத்தி புலிகளை யுத்தத்திற்கு திரும்ப முடியாத நிலைக்குக் கொண்டு வந்தது நாங்கள் தான்" என மிலிந்தமொறகொட மார் தட்டியுள்ளார்.



மஹிந்த

இந்தக் கருத்துகள் தமிழ்மக்களை கடும் விசனத்[illegible] [illegible], எரிச்சலுக்[illegible] [illegible] [illegible]. தேர்தல் காலத்தில் சில [illegible] அரசியல் வாதிகளின் [illegible] [illegible] [illegible] [illegible]மையாகும். இந்த நிலையில் [illegible] கருத்துகள் தமிழ்மக்களை சிந்திக்கத் தூண்டி உள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளிப் படையாகத் தனது கருத்துகளை கூறிவரும் நிலையில் ஐ.தே.கவின் உண்மை முகம் தெரிகிறது.

அண்மையில் இதனைத்தான் புலிகளின் பிரமுகர் பாலகுமாரும் தெரிவித் திருந்தார். அவர் அதில்,

"மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாக இனவாதம் பேசிவருகிறார். எனினும், ரணில் விக்கிரமசிங்கவின் தமிழ் மக்கள் பற்றிய சூழ்ச்சி மிக்க கருத்துகள் ஆபத்தானவை." எனத் தெரிவித்திருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஒரு பிரிவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஒரு பிரிவும் களத்தில் தீவிரமாக இறங்கியுள்ளன.

தமிழ் மக்களின் வாக்குகள் இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் கிடைக்கும் சாத்தியம் இல்லாத நிலையில், இரண்டு தரப்பும் பிரதான மக்களின் வாக்குகளை வேட்டையாட இனவாதத்தை நேரடியாக, மறைமுகமாக கக்கத் தொடங்கியுள்ளன.

தமது ஊதுகுழல்கள் ஊடாகவும் இவர்கள் தமது பிரச்சாரக் கருத்துகளைக் விதைக்கத் தொடங்கியுள்ளர்.

ஜனாதிபதித் தேர்தலில் வென்றுவிட வேண்டும் என்ற குறுகிய அரசியல் லாப

தலைவன் பிரபா நீண்டகாலத்துக்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு விடயத்தை மீண்டும் நினைவூட்டுவது சாலச்சிறந்தது. 'எந்தவொரு சிங்களத் தலைமையும் எமக்கு நீதியான தீர்வைத் தரப் போவதில்லை.' என்பது தான் அது.

-சோஷா-

# மனைவி இல்லாமலே பிள்ளை பெறலாம்

'இது ஒன்றும் அதிசயம் இல்லையே! அப்பன் பேர் தெரியாத எத்த னையோ பிள்ளைகள், தாலி கட்டிக் கொள்ளாத பெண்களுக்குப் பிறந்த வர்கள் தானே!!' என்று சிலர் சொல்லக் கூடும்!

இது அந்தப் பிள்ளை இல்லை! அப் பன் பெயர் தெரிந்த பிள்ளை! அம்மா வின் பெயர் தான் தெரியாது!

அப்படி ஒரு குழந்தை இந்தியாவில் பிறந்திருக்கிறது!! இந்த குழந்தைக்குத் தந்தை உண்டு; ஆனால் தாய் கிடையாது!!!

**தனித்து வாழும் தந்தை!**

தந்தையின் பெயர், அமீத் பானர்ஜி. 46 வயது ஆகிறது. கொல்கத்தாவில் வசிக்கிறார்.

அவர் தனி ஆள். மனைவி இல்லை. ஆனால், பிரமச்சாரி அல்ல! திருமண மாகி, மனைவியை விவாகரத்துச் செய்தவர்.

**குழந்தை ஆசை!**

அவருக்கு குழந்தை ஆசை ஏற்பட் டது. தன் பெயர் சொல்ல ஒரு குழந்தை வேண்டும் என்று விரும்பினார்.

ஆனால், மறுமணம் செய்து கொள்ள விரும்பவில்லை. 'பட்டது போதும்! இனிப் படமுடியாது, துயரம்' என்று எண்ணினார்.

**செயற்கை முறையில்**

ஒரு மருத்துவரைப் போய்ப் பார்த் தார். மருத்துவரின் பெயர் சுதர்சனம். இவர் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதில் 25 ஆண்டு அனுபவம் உள்ளவர்.

"எனக்குக் குழந்தை வேண்டும். ஆனால், மனைவி இல்லை. குழந்தை 'பெற்று'க் கொள்ள முடியுமா?" என்று பானர்ஜி கேட்டார்.

"ஓ முடியுமே! மனைவி இல்லாமலே ஒருவர் தந்தையாக முடியும்" என்று மருத்துவர் சொன்னார்.

**இரவல் கரு!**

உடனே அதற்கான வேலையையும் அவர் தொடங்கினார்.

ஒரு பெண்ணிடமிருந்து கரு முட்டை எடுத்தார். பானர்ஜியிடமிருந்து விந்து உயிரணுக்கள் எடுத்தார். இரண்டையும் சோதனைக் குழாயில் இணையவிட்டார்.

இணைந்து கரு வளரத் தொடங் கியதும், ஒரு வாடகைத்தாய் தேடினார். ஒரு பெண் கிடைத்தாள். அவளது கருப்பைக்குள் கருவை வைத்து, வளர விட்டார்.

**குழந்தை பிறந்தது!**

கரு, குழந்தையாக வளர்ச்சி அடைந் தது.

பத்தாவது மாதம் முழு வளர்ச்சி அடைந்து குழந்தை பிறந்தது!

அழகான ஆண் குழந்தை!

அந்தக் குழந்தைக்கு பானர்ஜி தந்தை!

கருமுட்டையை இரவல் தந்த பெண்யார் என்பது யாருக்கும் தெரியாது. மருத்துவர் மட்டுமே அறிந்த மர்மம், அது!

குழந்தையை வயிற்றில் சுமந்த பெண்யார் என்பது பானர்ஜிக்குத் தெரியும். ஆனால், அவள் இரவல் தாய்! பெற்றுக் கொடுத்துவிட்டு, "கூலி" வாங்கிக் கொண்டு, தலைமறைவாகப் போய்விட்டாள். குழந்தைக்கு அவள் சொந்தம் கொண்டாட முடியாது!


National Child Protection Authority
No. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka. Telephone : 94-2778911-14 Fax : 94-2778915
IPEC
E-mail: ncpa@childprotection.gov.lk / Website: http://www.childprotection.gov.lk


# சிறுவர் பாதுகாப்பு

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக ஏற்பட்டி ருக்கும் பல்வேறு பிரச்சினைகளில், வீட்டிற்கு வேலைகளுக்காக சிறுவர்களை அமர்த்துதல்




பிரதான இடத்தை வகிக்கிறது. இவ்வாறு பல்வேறுபட்ட வேலைகளில் ஈடுபட்டு பணம் சம்பாதிக்கும் இச்சிறுவர்கள் பற்றி வெளிநாடுகளுடன் ஒப்பிடுவோமானால் இலங்கையில் நிலைமை ஓரளவு நன்றாகவே உள்ளது.

இதே வேளை, வீட்டு வேலைகளுக்கு சிறுவர்களை அமர்த்துதல், திட்டுதல், அடித்தல், பலவந்தப்படுத்தல் ஆகியவற்றை நோக்குவோமானால்- இலங்கையின் மனிதாபிமானம் தற்போது குறைந்து வருவதாகத் தெரிய வருகிறது. காரணம், இலங்கைவாசிகள் பலர் எந்தவொரு தினத்திலாவது சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதாகத் தகவல்கள் தெரிய வரு கிறது.இவ்வாறான வேலைகளுக்கு உட்படு பவர்கள் உளவளவினாலும், உடல ளவினாலும் பாதிக்கப்படுகின்றனர்.

"ஐயா" "அம்மணி" என வீட்டுவேலை செய்யும் சிறுவர்களால் அழைக்கப்படும் இவர்கள், சிறுவருக்கும், அக்குடும்பத்திற்கும் சேவை செய்வதாகக் கூறி அவர்களை அழைத்து வருவார்கள். ஆனால், அவர்கள் அங்கிருந்து கூட்டிவந்த பின்பு அனை அனைத்தையும் மறந்து விடுவார்கள். வேலைக்கு அமர்த்தும் சிறுவர்களை மிருகத்தைவிட கொடூரமாகத் துன்புறுத்து வதுடன் அதே வயதைக் கொண்ட தனது குழந்தையை அவ்வாறு கொடூரப்படுத்த தவறுகிறார். இது என்ன நியாயம்!

தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை கடந்த காலங்களில் வடக்கில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பாக பல் வேறு தகவல்கள் கூறப்பட்டுள்ளன அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 700 வீடுகளில் 12 வீடுகளுக்கு ஒரு சிறுவர் விதம் இருப்பதாகவும், அவ்வீட்டு வேலைகளில் 1/3 பங்கை அவர் தனியாக சுமப்பதுமான பரிதாப தகவல்களை வெளியிட்டுள்ளார். இச்சிறுவர்கள் கூடுதலாக தோட்டப்பு றங்களில் உள்ளவர்களாகவும், வைத்தியர் கள், அதிகாரிகள், வியாபாரிகள், தோட்ட அதிகாரிகள் ஆகியவர்களினால் சிறுவர்கள் அடக்கி ஒடுக்கப்படுவர்களாகவும். மற்றும் இவர்களால் பல்வேறு இடங்களுக்கும் மாற்றம் செய்யப்படுவதாகவும் அவ்வறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெற்றோர் வெளிநாடுகளுக்குச் செல்வதாலும், சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிக்குமென தெரிவிக் கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் செல்வது




னால் குழந்தைகளைக் கவனிப்பதற்கு யாரும் இல்லாததால், கல்வியில் அக்கறை கொள்ளாமல் இவர்கள் தமது இளம் பிராயத்தை [illegible] [illegible] [illegible] [illegible] வீட்டு வேலைகளுக்குச் செல்வதற்கு இடமுண்டு.

# தமிழ் மக்களே!

## நீங்கள் ரணிலுக்கு வாக்களிக்க வேண்டியது ஏன்?

- தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாட்டையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும், கைச்சாத்திட்டு 20 வருடப்போருக்கு முடிவு கட்டியவர்.
- 10 வருடங்களாக மூடப்பட்டிருந்த ஏ-9 பாதையைத் திறக்க வழிவகுத்து பல சௌகரியங்களை ஏற்படுத்தியவர்.
- தமிழ் மக்கள் தமது பூமியில் சுதந்திரமாக நடமாடுவதற்கு கணிசமான அளவுக்கு உதவியவர்.
- தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்கியவர் இவரே.
- சமஷ்டி முறையில் அதிகாரங்களைப் பகிர்வதே இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு என்று பிரகடனப்படுத்தி உள்ளவரும் ரணிலே!
- இருள் சூழ்ந்திருந்த வடபகுதிக்கு ஒளியூட்டியவர்.
- நிரந்தர சமாதானம் எட்டப்படாத போதிலும் தமிழ் மக்களின் வாழ்வில் ஓரளவுக்கேனும் நிம்மதியை ஏற்படுத்தியவர்.
- வடக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் பொலீஸ் பதிவு, சோதனைகள் என்பவற்றை நீக்கியவர் ரணிலே!
- தலைநகரில் அமைக்கப்பட்டிருந்த பெரும் எண்ணிக்கையிலான சோதனைச் சாவடிகளை நீக்கி போக்குவரத்தைச் சீராக்கியவர். சோதனைகளுடன் வாழந்த தமிழ் மக்களின் துன்ப துயரங்களைத் துடைத்தவர்.



**நாட்டின் சமாதானம் சீர்பெறவும் நிலைக்கவும் வழி செய்யக்கூடிய ஒருவர் ரணில் மட்டுமே!**

**இம்முறை தெரிவு செய்யுங்கள். பெரும் நற்பயன்களை நிச்சயம் பெறுவீர்கள்.**

**ரணிலுக்கே வாக்களியுங்கள்**

# ரணில் விக்கிரமசிங்கா

ஐக்கிய தேசிய கட்சி

X




## இராட்சத கடல் கணைகள்







ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சுனிமி குபேதரா என்ற விஞ்ஞானி சுமார் 26 அடி நீளமுள்ள இராட்சத கடல் கணை ஒன்றை படம் பிடித்துள்ளார். அவர் உயிரினங்களுக்கான ஆய்வை மேற்கொண்டபோது 20 அடி நீளமுள்ள உயிரினம் ஒன்று தூண்டிலில் சிக்கிக் கொண்டதை அறிந்தார். மேலும் அது அவரது கையை உறிஞ்சுவதையும் உணர்ந்தார். தொடர்ந்து புகைப்படங்களை எடுத்துஆய்வுகளை மேற்கொண்ட போது நூற்றுக்கணக்கான 'கடல் கணைகள்' பற்றிய தகவல்கள் கிடைத்தன.

கடலில் மூவாயிரம் அடி ஆழத்தில் இந்த உயிரினங்கள் காணப்பட்டன. இவை Architeathis எனப்படும் கடல் உயிரின வகையைச் சேர்ந்தவை.

இந்த உயிரினங்கள் கடலில் பதுங்கி இருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்ததும் அதற்கான பிரத்தியேக பாய்மரக் கட்டையில் கமரா உள்ள ஒளியுணர் வேக நோக்கி விளக்கு (Strobos Cope Light), நேரம் அளவிடும் கருவி (Timer), ஆழ உணரி (Depth Sensor) போன்றவை பொருத்தப்பட்டு அவற்றுடன் கூனி இறால்கள் கொண்ட பைகள் இரண்டு தூண்டில்களில் இரையாக இணைக்கப்பட்டன. கடலில் ஆழத்தில் இருள் நிறைந்த இடத்துக்குத் தூண்டில் சென்றபோது 20 அடி நீளமுள்ள உயிரினம் ஒன்று தூண்டில் இரையைத் திடீரெனத் தாக்கியது. அடுத்த 4 மணி நேரத்துக்கு அது தூண்டிலில் இருந்து விடுபட முயற்சித்தது. தூண்டிலில் அதன் நீண்ட உணர் கொம்புகள் மாட்டிக் கொண்டன. பாய் மரத்தை அவை அழுத்தமாகப் பற்றிக் கொண்டன. உடனே அது மேலே இழுத்து எடுக்கப்பட்டது.

கடல் உலகில் மேலும் ஆய்வுகளை மேற்கொண்டால் பல்வேறு புதுமையான உயிரினங்களையும், புதுமைகளையும் சந்திக்கலாம்.

## கம்பியூட்டர் பாவனை வேகமாக அதிகரிப்பு



கடந்த ஆறு மாதங்களாக கம்பியூட்டர் பயன்பாடு இந்தியா மற்றும் சீனாவில் மட்டுமின்றி, உலக நாடுகள் அனைத்திலும் அதிகரித்துக் காணப்பட்டது. இதற்குக் காரணம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கம்பியூட்டர் என்ற வகையில் வீடுகளில் கம்பியூட்டர்கள் பயன்படுத்தப்படுவதே. மேலும், வளர்ந்துவரும் தொழில் நுட்பம் புதிய கம்பியூட்டர் ஒன்றை வாங்கும் தேவையை அதிகரித்துள்ளது. தவிர, குறைந்த விலையில் கம்பியூட்டர் விற்பனையாவதும் உலகின் அனைத்து நாடுகளிலும் ஏற்பட்ட மாற்றமாகும். இதனால் சென்ற காலாண்டில் முன்னைய ஆண்டைக் காட்டிலும் 17.2% கம்பியூட்டர்கள் விற்பனையாகி உள்ளன. மொத்தம் 5 கோடியே 55 லட்சம் கம்பியூட்டர்கள் விற்பனையாகி உள்ளதாக பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகின்றது. இதில் குறிப்பிடத்தக்க விசேடம் என்னவென்றால் ஆசிய பசுபிக் நாடுகளில் இந்த அதிகரித்த விற்பனை 31 சத விகிதமாக இருந்தது. அமெரிக்காவில் சென்ற மூன்று மாதங்களில் 1 கோடியே 79 லட்சம் கம்பியூட்டர்கள் விற்பனையாகி உள்ளன.

## எலிகளும் பேசுமாம்



மனிதனால் மட்டுமே மொழிகளை இனம் பிரித்து அறிந்து கொள்ளமுடியும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். நமது முன்னோர்களான குரங்குகளும் மனிதன் பேசுவதை ஓரளவுக்குப் புரிந்து கொள்ளும் திறன் படைத்தவை தான். தற்போது அந்தப் பட்டியலில் எலியும் சேர்ந்துள்ளது. மனிதன் பேசுவதை எலிகளால் கூட புரிந்து கொள்ள முடிகிறது என உறுதிபடக் கூறுகின்றனர் ஸ்பெயின் விஞ்ஞானிகள். பார்சிலோ பல்கலைக் கழகத்தில் பி. எச்.டி செய்து வருகிறார் ஜிலான் டோரோ. நன்றாகப் பழக்கப்படுத்தப்பட்ட எலிகள் மனிதன் பேசும் போது இது தான் ஜப்பானிய மொழி, இதுதான் டச்சு மொழி என அழகாக உணர்ந்து கொள்கின்றன என்கிறார் டோரா. ஸ்பெயின் விஞ்ஞானிகள் 16 எலிகளைத் தங்களது ஆய்வுக்காக பயன்படுத்தினர். அந்த எலிகளுக்கு ஜப்பானிய மற்றும் டச்சு மொழிகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் முடிவில் அந்த எலிகள் மொழியின் உச்சரிப்பு, ஒலி ஏற்ற இறக்கங்களைத் தெளிவாக அறிந்து ஜப்பான், மற்றும் டச்சு மொழிகளை உணர்ந்து கொள்கின்றன என்று கண்டறிந்துள்ளனர். எலிகளுக்கு மொழிகளை புரிந்து கொள்ளும் திறன் குறிப்பிட்ட அளவுதான் இருக்கும் என்றும் அவர்கள் எச்சரிக்கத் தவறவில்லை.

## மூன்று கிரகணங்கள்

1866ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் பௌர்ணமியே வரவில்லை. ஆனால், முன்பும் பின்பும் உள்ள மாதங்களான ஜனவரி, மார்ச் மாதங்களில் இரண்டு பௌர்ணமிகள் வந்தன!









இம்மாதிரி பத்து லட்சம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே ஏற்படும் என அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்!

ஆறாயிரம் ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

கடந்த அக்டோபர் மாதம் விண்வெளியில் மூன்று அரிய நிகழ்வுகள் இடம் பெற்றன.

ஒரே மாதத்தில் வானத்தில் மூன்று முக்கிய நிகழ்வுகள் தொடர்ந்து நடப்பது அரிது!

இந்த மூன்று நிகழ்வுகளும் மீண்டும் ஒரே மாதத்தில் நடக்க ஆறாயிரம் ஆண்டுகள் ஆகும்!

கடந்த அக்டோபர் மாதத்தில் வானவெளியில் அப்படி என்ன நிகழ்ந்தன?

சூரியகிரணம்- அக்டோபர் 3-ஆம் திகதி இடம் பெற்றது ஒரு சூரிய கிரகணம். இது முதல் நிகழ்வு.

சந்திரகிரணம் - இரண்டாவது நிகழ்ச்சி. அக்டோபர் 17 ஆம் திகதி இடம்பெற்றது. அது சந்திர கிரகணம். முழு சந்திர கிரகணம் அல்ல; ஒரு பகுதிதான்.

நெருங்கிவரும் செவ்வாய் - 3ஆவது நிகழ்வு- அக்டோபர் 30ஆம் திகதி இடம்பெற்றது. செவ்வாய்க் கோள் பூமிக்கு மிக அருகில் வந்தது. அன்று பூமியிலிருந்து 694.5 இலட்சம் கி.மீ. தொலைவில் செவ்வாய் இருந்தது.

ஆறாயிரம் ஆண்டு! இந்த மூன்று நிகழ்வுகளும் மீண்டும் ஒரே மாதத்தில் நடக்க ஆறாயிரம் ஆண்டுகள் ஆகும் என்று அறிவியலாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்! 'நம் காலத்தில் இப்படி நடந்ததே' என்று நாம் பெருமைப்பட்டுக்கொள்ளலாம்!

## அறிவியல் துணுக்குகள்

- வடதுருவத்திலிருந்து தென் துருவத்துக்கு முதன் முதல் விமானத்தில் பறந்து சென்ற மனிதர் அமுன்ட் சென் என்பவராவார். இவர் ஓர் அறிவியல் அறிஞர். 2,614 மைல் தூரத்தை ஒரே தடவையாகக் கடக்க வேண்டும். இந்த சாதனையை எட்டிப்பிடிக்க அமுன்ட் சென்னுக்கு 71 மணி நேரம் பிடித்தது.
- திருமணத் தம்பதிகளை காரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லும் வழக்கம் பாரிசில் நடைபெற்ற திருமணத்தின் போது தான் முதன் முதல் ஏற்பட்டது. 1897 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இது நிகழ்ந்தது. எம்.எஸ். மிஸ்ஸான் என்பவர் தயாரித்த கார் இதற்கெனப் பயன்படுத்தப் பட்டது என்றும், அதை மிஸ்ஸானே ஓட்டினார் எனவும் 'ஆட்டோகார்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் கூறியிருக்கிறார்.
- சர் வால்டர் ராவே என்ற ஆங்கிலேயர்தான் முதன் முதலில் புகை பிடித்தவர் என்று கருதப்படுகிறது.
- இன்று மூளைக்கு வேலைதரும் குறுக்கெழுத்துப் போட்டி (Cross Word Puzzle) முதன் முதலாக 15 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றியதாம். நவீன குறுக்கெழுத்துப் போட்டி 1913 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி நியூயோர்க் இலிருந்து வெளிவந்த 'உலகம்' என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டது.
- உலகில் நடக்கும் பிரமிக்கத்தக்க சாதனைகளையெல்லாம் வெளிப்படுத்தும் 'Guinnes Book of World Records' லண்டனிலிருந்து வெளிவருகின்றது. இதன் முதல் பதிப்பு 1955 இல் பிரசுரமானது.
- 1955 இல் என்வாய்ட் என்னும் கருத்தடை மாத்திரை முதன் முதலாக உலகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஐரோப்பாவின் முதலாவது மருத்துவமனை கி.பி 542 ஆம் ஆண்டு பிரான்ஸில் நிறுவப்பட்டது.

## கையடக்கத் தொலைக்காட்சி



தற்போது கையடக்கத் தொலைபேசியில் தொலைக்காட்சி பிரபலமாகி வருகிறது. கையடக்கத் தொலைபேசியின் திரை மிகச் சிறிதாக இருப்பதுதான் இதிலுள்ள எதிர் மறை அம்சம். எனினும், எதிர்காலத்தில் இந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் என்று தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் மீடியா நிர்வாகிகள் கூறுகின்றனர்.

தற்போது உலகளவில் கையடக்கத் தொலைபேசிக்கான சந்தை அதிவேகமாக அபிவிருத்தி அடைந்து வருகிறது. தற்போது 7 கோடியாக இருக்கும் செல்போனின் எண்ணிக்கை அடுத்த ஆண்டில் 200 கோடியாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. [illegible] ஆம் ஆண்டு இது [illegible] கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எல்லாவகையான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் கையடக்கத் தொலைபேசியில் காட்டுவதற்கான முயற்சிகள் தற்போது இடம்பெறுகின்றன.

# காஞ்சி மட வழக்கு பாண்டிச்சேரிக்கு!

## காஷ்மீருக்குக் காங்கிரஸ் முதல்வர்

சில மாதங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டை உலுக்கிய காஞ்சி சங்கர மட வழக்கு மீண்டும் ஒரு திருப்பத்தை சமீபத்தில் எடுத்துள்ளது. தமிழ் நாட்டில் இந்த வழக்கு நடத்தப்பட்டால் அரசு இந்த வழக்கில் தனக்கு விரோதமாக செல்வாக்கு செலுத்தலாமென அச்சம் தெரிவித்து சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் உச்ச நீதிமன்றில் தொடுத்த வழக்கின் தீர்ப்பு வெளியாகி இருக்கிறது. அதன்படி சென்னையில் இருந்து பாண்டிச் சேரிக்கு வழக்கை மாற்ற வேண்டும் என உச்ச நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

எனினும், வழக்கை ஆந்திர மாநிலத்தின் சித்தூரில் நடத்த உத்தரவிட வேண்டும் என சங்கராச்சாரியார் விசேடமாக விடுத்த கோரிக்கையை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆந்திராவில் வழக்கை நடத்தினால், தெலுங்கு மொழியில் ஆவணங்களை மொழி பெயர்க்க காலமெடுக்கும் என்பதால் நீதிமன்றம் இவ்வாறு தீர்மானித் துள்ளது. சங்கராச்சாரியாரின் தரப்பு ஆந்தி ராவில் நடத்தக் கோரியதன் காரணமும் இதுவாகவே இருக்கலாம். ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கைத் தி.மு.க தரப்பு பெங்களூருக்கு மாற்றக் கோரியது.அதையே சாதகமாகப் பாவித்து தமிழ் மொழி பெயர்ப்புத் தரவேண்டு மென ஜெயலலிதா கோர, வழக்கு தாமத மடைந்தது.

இதேபோல் இந்த வழக்கிலும் தாமதம் ஏற்படுத்த சங்கராச்சாரியார் தரப்பு முனைந் திருக்கலாம். இன்னும் ஏழு மாதத்தில் அ.தி.மு.க ஆட்சியின் பதவிக்காலம் முடிகிறது. தேர்தலில் ஜெ, தோற்றால் சங்கராச்சாரியார் தப்பலாம். எனினும், தி.மு.க வுக்கும் சங்கராச்சாரியார் மீது அவ்வளவு திருப்தியில்லை. ஆனால், பி.ஜே.பி மட்டுமே சங்காராச்சாரியாரை ஆதரிக்கிறது. ஜெயலலிதாவும், பி.ஜே.பியும் தேர்தல் கூட்டணி வைத்துக்கொள்ளலா மென எதிர்பார்க்கப்படும் நிலையில் சங்கராச்சாரியார், விடயம் இரு கட்சி களையும் பாதிக்குமா என்பது சுவாரஸ் யமாக நோக்கப்படுகிறது.

இதற்கிடையில் பீஹார் மாநிலத்தின் சட்டப்பேரவைத் தேர்தல்களில் இரண்டு கட்ட வாக்களிப்பு முடிந்துவிட்டது. மொத்தத்தில் 243 தொகுதிகளில் 119 தொகுதிகளின் வாக்களிப்பே முடிவடைந் துள்ளது. வாக்களிப்பிற்குப் பின்னரான கருத்துக் கணிப்புகள் பி.ஜே.பி - ஜனதாதள கூட்டணி ஓரளவு பெரும்பான்மை பெறுமெனக் கூறுகின்றன. லல்லுப்பிரசாத் - காங்கிரஸ் கூட்டணி பின்னடைவை சந்திக்கலாமெனத் தெரிகிறது. இது மத்திய அரசியலில் பெரும் பாதிப்புகளை உண்டாக்கும்.

லல்லுப்பிரசாத் யாதவின் கட்சி 15 வருடங்களாக ஆண்ட பீஹார் மாநிலத்தில் முதன்முறையாக வரலாற்றில் பி.ஜே.பி - ஜனதா தளக்கூட்டணி ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம். இதனால் லல்லுவின் கட்சியிலுள்ள முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்கள், எம்.எல். ஏக்கள் மீதான வழக்குகள் தூசு தட்டப்படும். இதன்போது அவரது கட்சி சார்ந்த பலரும், அவரும் மத்திய அரசியலில் இருந்து ஊழல் குற்றச் சாட்டுகளால் பதவி விலக நேரிடலாம்.

இதேவேளை ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இவ்வாறு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இஸ்லாமிய பிரிவினை வாதம் உக்கிரம் பெற்றுவரும் எல்லை மாநிலமான காஷ்மீர், முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரே இந்திய மாநிலமாகும்.1989 இல் இஸ் லாமிய தீவிரவாதம் அங்கு வலுப்பெறத் தொடங்கிய பின்னர் தேர்தல் நடத்துவது பெரும் சிரமமாக இருந்துள்ளது. எனினும்,2002இல் நடந்த காஷ்மீர் மாநில சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி கணிசமான வெற்றி பெற்றது. காஷ்மீர் சிங்கம் எனப் போற்றப்படும் ஷேக் அப்துல்லாஹ்வின் வாரிசான பருக்அப் துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டுக் கட்சி அங்குள்ள முஸ்லிம் களின் ஆதரவு பெற்ற கட்சி. 1996 முதல் 2002 வரை ஆட்சியிலிருந்த அக்கட்சியை அகற்றிவிடுவதில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. மற்றொரு முஸ்லிம் பிரதிநிதிக் கட்சியும் 2002 தேர்தலில் முஸ்லிம் பகுதி களில் அப்துல்லாஹ்வின் கட்சியைப் பின்னுக்குத் தள்ளியது. இந்துக்கள் வாழும் பகுதியில் செல்வாக்குப் பெற்ற பி.ஜே பியை வீழ்த்துவதில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. ஆக காங்கிரஸும், அந்தப் பிராந்தியக் கட்சியும் இணைந்து 2002 அக்டோபரில் ஆட்சி அமைத்தன. முஸ்லிம் கட்சியாக இருந்தும் பி.ஜே.பிக்கு ஆதரவு அளித்தமையால் அப்துல்லாஹ்வின் கட்சி தோற்றது குறிப்பிடத்தக்கது.

இதன்படி பிராந்தியக்கட்சி முதல் மூன்று ஆண்டு முதல்வர் பதவியை வகிப்ப தெனவும், இறுதி 3 ஆண்டு காங்கி ரஸுக்கு அப்பதவியைத் தருவதெனவும் இணங்கப்பட்டது. இதனடிப்படையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குலாம் நபி ஆஸாத் கடந்தவாரம் காஷ்மீரின் புதிய முதல்வராகப் பதவி ஏற்றுள்ளார்.

இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது என்னவெனில், 70களில் காங்கிரஸ் சார்பில் முதலமைச்சர் ஒருவர் பதவிவகித்த பின்னர் 30ஆண்டுகளின் பின்னர் முதன்முறையாக காங்கிரஸ் முதல்வர் ஒருவர் பதவி ஏற்கிறார். அதுவும் யுத்தத்தால் வெகுவாகப் பாதிக் கப்பட்ட டொடா மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரான குலாம்நபிஆஸாத்தின் நியமனம் பெரிதும் பாராட்டப்படத்தக்கது.

காஷ்மீரில் காங்கிரஸ் முதல்வர் ஒருவரை உண்டாக்க முயன்றும் முடியாது போன இந்திராகாந்தி, ராஜீவ், நரசிம்மராவ் ஆகியோரால் செய்ய முடியாததை சோனியாகாந்தி சாதித்துள்ளார். மத்திய அரசில் நாடாளு மன்ற விவகார அமைச்சராகவும் இதுவரை பதவிவ கித்த ஆசாத் பல மாநிலங்களில் கூட்டணிக்



கட்சிகளுடனும், நல்லுறவைப் பேணி கூட்டணிகளைச் சாதித்தவர். தனது காஷ்மீர் தோழமைக் கட்சியினரான பிடிபி மற்றும் காஷ்மீர் தீவிரவாத அமைப் புகளை அவர் எவ்வாறு கையாள்வார் என்பது வெகு ஆவலுடன் நோக்கப் படுகிறது.

-எஸ். சுரேந்திரஜித்-

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 185

சொற்சிலம்பம் 185 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் நவம்பர் 20ஆம் திகதி ஆகும் விடைகள் நவம்பர் 27ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் டிசம்பர் 4 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.183 க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக் காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப் படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ் டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படு வார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 183

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | 2 கி | ச் | 3 சை | ■ | 4 மு | 5 கா | 6 மை |
| 7 வ | ளி | ■ | 8 வ | 9 கு | த் | த | ல் |
| ப் | ■ | 10 ச | ம் | ம | த் | ம் | ■ |
| 11 பு | 12 த | ன் | ■ | 13 ர | ம் | ■ | 14 கு |
| ■ | 15 ம | னி | 16 த | ன் | ■ | 17 ந | டு |
| 18 எ | து | ■ | லை | ■ | 19 க | ட | ம் |
| ரு | ■ | 20 சா | ப் | பா | டு | ■ | ப |
| 21 து | ரு | ம் | பு | ■ | 22 கு | ல | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 185

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | | 13 | | ■ |
| 14 | 15 | | ■ | 16 | | ■ | 17 |
| ■ | | ■ | 18 | | | 19 | |
| 20 | | 21 | | | ■ | 22 | |
| 23 | | | | ■ | 24 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.185

### இடமிருந்து வலம்

1. காலம் பிந்துவது
4. விற்பன்னமான வேலை/ நிபுணத்துவமான செயல்
7. உபகரணம்
8. பொருத்தமான
9. சத்தியவான் துணைவி
11. ஒரு சாரியை உருபு.
12. நிற்பாட்டுதல்/ நிறுத்துதல்
14. பீதி அனுபவம்/ அச்ச உணர்வு
16. செல்வம்
18. தொடக்கம்
20. சில்லு
22. நல்ல/ மங்கள
23. தலையில் சூடுவது/ முடி
24. நிசப்த நிலை/ சமாதான சூழல்.

### மேலிருந்து கீழ்

1. விடாய் தீர்த்தல்
2. நெருங்கி/ சுருங்கி/ திரிந்து
3. அந்தரப்படுதல்
4. சிரி.
5. பல்லினால் வெளிப்படுத் தப்படும் சினக் குறிப்பு
6. பிதாவின் மகன்
8. வறுமை/ மிடி.
10. விளக்கில் எரிவது/ மூன்று
13. கொடுக்கும்/ வழங்கும்
15. ஒரு திசை
17. கணவன்– மனைவி
18. மாலை/ பட்சிகளின் கழுத்தில் வட்டமாக இருப்பது.
19. பசிய தன்மை.
20. ஒரே அளவான
21. தாண்டு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 180

1. இ. ஆறுமுகம், தொட்டிலடி, சங்கானை.
2. ஆர். யோகானந்தன், ஒயார் சின்னக் குளம், கல்மடு வீதி, வவுனியா.
3. த. கனகலிங்கம், இல, 60/1, கம்பஸ் லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

1. வே. கோசலா, அம்பன், குடத்தனை.
2. மேரி மேனகா பர்னாந்து, பி2, எப்27, புளுமண்டால் தொடர்மாடி, கொட்டாஞ்சேனை, கொழும்பு– 13.
3. செல்வி. ப. ஆரணி, புலோலி மேற்கு, புலோலி.
4. கு. சிவரஞ்சினி, இல, 19, பண்டாரக் குளம் வீதி, நல்லூார், யாழ்ப்பாணம்.
5. கே. அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூார் வடக்கு, யாழ்ப்பாணம்.
6. திருமதி பவளம் பாலா, மீசாலை கிழக்கு, மீசாலை.
7. இ. பத்மகுமார், இல, 10, சக்திபுரம், உருத்திரபுரம், கிளிநொச்சி.
8. ச. திலக்ஷன், " நியூ சாந்தி மில்", சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
9. கு. கஜேந்தினி, இல, 403 ஏ, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
10. எ.ஆர். எம். இர்ஷாட், இல, 383/1, நியூ ஸ்ரீற், வெலிகம.

# மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புமா இலங்கை?

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையில் இந்திய மண்ணில் நடைபெற்ற ஒரு நாள் தொடரை இந்திய அணி, இளம் வீரர்களின் ஆற்றல்களுடன் மிக இலகுவாகக் கைப் பற்றி விட்டது.

இத்தொடரில் நடைபெற்ற முதல் 5 ஆட்டங்களில் நான்கு ஆட்டங்களை அடுத் தடுத்து மிக அபாரமாக ஆடிய இந்திய இளம் வீரர்கள் தொடர் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர். இவர்களில் முக்கிய பங்கு வகித்தவர்களாக குறிப்பிடத்தக்கவர்கள் என்றால் மகேந்திரா டோனி, இர்பான் பதான் ஆகியோரே.

இவர்கள் இருவரும் இந்திய அணி பெற்ற முதல் நான்கு ஆட்டங்களிலும் ஒவ்வொரு சதங்களைக் குவித்து வெற்றிக்கு வித்திட்டனர்.

இதில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற 3ஆவது ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 298 ஓட்டங்கள் எனும் பாரிய இலக்கைக் குவித்து வெற்றி பெறும் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

வழமையாக இலங்கை அணியைப் பொறுத்த வரையில் 250 அல்லது 260 ஓட்டங்களைப் பெற்றாலே தமது சிறப்பான பந்து வீச்சின் மூலம் எதிரணியை வீழ்த்தி வெற்றி பெற்றுவிடும்.ஆகவே,298 ஓட்டங் கள் பெற்றமையால் நிச்சயம் வெற்றி பெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால்,இந்த எதிர்பார்ப்பை தலைகீழாக மாற்றினார் இந்திய இளம் வீரரான மகேந் திரா டோனி.

டோனியின் அதிரடியில் இலங்கையின் பந்து வீச்சு கதிகலங்கியது. ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே சச்சின் டெண்டுல்கரை வீழ்த்திய சமிந்த வாஸ், இந்திய அணிக்கு பெரும்நெருக்கடியை ஏற்படுத்தினார்.ஆனால், அடுத்து களமிறங்கிய டோனி தான் ஏதோ ஒரு அனுபவம் மிக்க மூத்த வீரர் என்பதைப் போல் முரளி முதல் வாஸ் வரை அனைத்து பந்து வீச்சாளர்களையும் துவம்சம் செய்து வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

இப்படி தொடர்ந்தும் 3ஆட்டங்களை இழந்த நிலையில் 4ஆவது ஆட்டத்தை அதாவது தொடரைத் தீர்மானிக்கும் ஆட்டத் தில் அதிக எதிர்பார்ப்புடன் களமிறங்கியது இலங்கை அணி. இந்த ஆட்டத்திலும் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 262 ஓட்டங்களைப் பெற்றது. ஆனால், அணி யின் முக்கிய வீரர்களான டிராவிட், சச்சின் போன்றோர் ஆட்டமிழந்தாலும் மீண்டும் பிரகாசித்து வெற்றியைப் பெற்றுக் கொடுத் தார் டோனி. இந்த ஆட்டத்தில் அவர் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களைக் குவித்தார். இப்படி பலமிக்க அணியாக மாறியுள்ள இந்திய அணிக்குத் தொடர்ந் தும் வெற்றிகளைக் குவிப்பது அவ்வளவு கடினமான காரியமல்ல.



இலங்கை அணியைப் பொறுத்த வரையில் பெருத்த எதிர்பார்ப்புடன் டொம் மூடியின் பயிற்சியின் முதலாவது சுற் றுப் பயணத்தை மேற்கொண்டது இந் தியாவுக்கு. ஆனால், சொந்த மண்ணில் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்ற போதும், அந்நிய மண்ணில் சாதிக்க முடியாது ஏமாற்றத்துடன் நாடு திரும்ப வேண் டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்டு விட்டது.

தொடரில் ஏழு போட்டிகள் அடங் கியிருந்தாலும், முதல் நான்கு ஆட்டங்களே தொடரைத் தீர்மானித்தமை இலங்கை ரசிகர் களை கதிகலங்க வைத்தது. ஆயினும், விட்ட தவறுகளைத் திருத்திக் கொண்டு மீண்டும் பல மிக்க பழைய அணியாக இலங்கை உருவாக வேண்டும் என்பதே அனைவரினது எதிர்பார்ப்பு ஆகும்.

இந்த எதிர்பார்ப்பு நிறைவேற வேண்டு மானால் இலங்கை அணியினர் நன்குணர்ந்து சிறப்பாக செயற்பட வேண்டும்.

அணியின் துடுப்பாட்டத்தில் திருப்திபடுத் துபவர் குமார் சங்கக்கார மட்டுமே.இவர் மட்டுமே நடைபெற்ற அனைத்து ஆட்டங் களிலும் ஓட்டங்களைக் குவித்தார்.குறிப்பாக இலங்கை அணி இக்கட்டான நிலையில் இருந்த போதெல்லாம் கை கொடுத்து தக்க சமயத்தில் ஓட்டங்களைப் பெற்றார். அணி யின் சொத்தாகவும் மாறியுள்ளார். இது இலங்கை ரசிகர்களுக்கு நற்செய்தியாக இருந்தாலும், அணியின் மற்றைய வீரர்களான ஜயசூரிய, மாவன், மஹேல, ஆர்னல்ட், டில்ஷான் போன்றவர்கள் தொடர்ந்தும் சோடை போவது வருந்தத் தக்கது.

இதை உணர்ந்து வழமை போல் தமது சிறப்பான துடுப் பாட்டப் பாணியை இவர்கள் மீண்டும் தொடர வேண்டும். அதே நேரம் பந்து வீச்சில் வாஸ், முரளி போன்றவர்கள் சிறப்பாக செயற்பட்டாலும் ஏனைய வீரர் கள் சோபிக்காதது தொடர் தோல்விக்கான முக்கிய காரண மாக அமைகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் அணியின் அனைவரும் சிறப் பாகச் செயற்பட வேண்டும்.

அப்படி பழைய நிலைக்குத் திரும்பும் பட்சத்தில் எதிர்வரும் டிசம்பரில் இந்தியாவில் நடை பெறும் டெஸ்ட் தொடரை இலங்கை கைப்பற்ற மிக இலகு வாக இருக்கும். ஆனால், அது சாத்தியமாவது - இலங்கை வீரர்களின் கைகளிலேயே அடங் கியுள்ளது. மனதைத் தேற்றுவார் களா இலங்கைஅணியினர்?

# சதுரங்கப் போட்டிகளில் சாதிக்கும் யாழ்.இந்துக் கல்லூரியின் மாணவன்



சிங்கப்பூர் தகவல் தொழில்நுட்பக் கல்லூரி யின் வருடாந்த சதுரங் கப் போட்டித் தொடர் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது. ஆறு சுற்றுக்களைக் கொண்ட இப்போட்டித் தொடரில் 19அணிகள் பங்குபற் றின. மொத்தமாகப் பெறக்கூடிய 24 புள்ளி களில் 21 புள்ளிகளைப் பெற்று சிங்கப்பூர் தகவல் தொழில்நுட்பக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றது. இப்போட்டித் தொடரில் பங்கு பற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆதவன் அனைத்துச் சுற்றுக்களிலும் வெற்றி பெற்று தனது கல்லூரிக்கு 6 புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார்.

ஆதவன், யாழ்ப்பாணத்தில் முன்னணி வகித்துவரும் யாழ். இந்துக்கல்லூரி அணியில் முதன்மை வீரராகத் திகழ்ந்தவர். இவர் 1993 இல் இருந்து 1998 வரையான காலப் பகுதியில் பல சதுரங்கப் போட்டிகளிலும் பங்கு பற்றியுள்ளார். மாவட்ட ரீதியிலான போட்டிகளில் பல பரிசுகளை வென்றுள்ள இவர், யாழ். பல்கலைக்கழகம் 1999ல் நடத்திய வெள்ளிவிழாப் போட்டித் தொடரிலும் யாழ். மத்தியக் கல்லூரியில் 2004ஆம் ஆண்டு நடைபெற்ற 'டி.ரீ.நைல்ஸ்' ஞாபகார்த்தப் போட்டித் தொடரிலும் முத லிடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இடைப்பட்ட காலப்பகுதியில் பல சர் வதேசப் போட்டித் தொடர்களிலும் பங்கு பற்றிய இவருக்கு இந்தியாவின் தர்மபுரி யில் கடந்த 2003ஆம் ஆண்டு நடை பெற்ற போட்டித் தொடரில் சிறந்த இலங் கையருக்கான விருது வழங்கப்பட்டது. மேலும், சர்வதேச சதுரங்கச் சம்மேளனத் தின் தரப்பட்டியலில் இவர் இடம்பிடித் துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்!

— கிரிஜா —

# கிரிக்கெட்டைத் தழுவத் துடிக்கும் சீனா

பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற ஆசிய நாடுகள் மட்டுமே சர்வதேச கிரிக் கெட் போட்டிகளில் ஜொலித்துவருகின் றன என்பது யாவரும் அறிந்த விடயம். ஆனால், தற்போது பல ஆசிய நாடுகள் கிரிக்கெட்டுக்கு மக்கள் மத்தியில் உள்ள வரவேற்பை பார்த்து தங்கள் நாட்டிலும் அந்த விளையாட்டை புகுத்த வேண்டுமென கருதி உள்நாட்டு போட் டிகளை நடத்தி சிறந்த அணியை உருவாக் கும் முயற்சியில் ஈடு பட்டு வருகின்றன.

இப்படி பல நாடு கள் கிரிக்கெட் மீது ஆர்வம் கொண்டிருந் தாலும் கிரிக்கெட்டை ஆசியக் கண்டத்தின் முக்கிய நாடான சீனா மட்டும் கிரிக்கெட் போட்டியை இதுவரை புறக்கணித்து வந்தது. சமீபத்தில் சீனாவிற்கும் கிரிக்கெட் மீது ஆர்வம் அதிகரித்துவிட்டது.தங்கள் நாட்டி லும் கொண்டு வந்தே தீர வேண்டும் என கடந்த சில ஆண்டுகளாகவே அதற்கான முயற்சிகளில் சத்தமே இல்லாமல் ஈடுபட்டு வருகின்றது.



சர்வதேச கிரிக்கெட் சபையில் (ஐ.ஸி.ஸி) 2003 ஆம் ஆண்டே உறுப்பினராகி விட் டது சீனா.இன்னும் சில ஆண்டுகளில் ஒரு நாள் போட்டிகளில் பங்கு பற்றினாலும் ஆச் சரியப்படுவதற்கில்லை.விரைவாக ஒரு சர்வதேச அணியை உருவாக்க சீனா அவுஸ்திரேலியாவின் உதவியை நாடியுள்ளது.

இதற்காக சுமார் 30 பயிற்றுவிப் பாளர்களை தெரிவுசெய்துள்ளது. அவுஸ்திரேலிய பயிற்றுவிப்பாளரான ''ஜோன் ஹோர்மர்'' அவர்கள் 6 நாட்கள் பயிற்சி அளித்துள்ளார்.இந்தப்பயிற்சி சீனாவின் ஷாங்காய் மற்றும் பெய்ஜிங் நகரங்களில் நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் பல்கலைக்கழக அளவிலான போட்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுக் கும் விதமாக வெவ்வேறு பந்துகளை பயன்படுத்தி பயிற்சி அளிக்கும் விதம் கற்றுக்கொடுக்கப்பட்டது. இன்னும் சில ஆண்டுகளில் சீன கிரிக்கெட் அணி உலகை அச்சுறுத்தும் அணியாக உரு வானாலும்? உருவாகலாம்!

# விளையாட்டில் ஊக்கமா? ஊக்கத்தில் விளையாட்டா!

## சீனர்களின் ஆதிக்கம்

சீனா விளையாட்டில் முன்னணி பெறு கிறதோ இல்லையோ அந்நாட்டில் ஊக்க மருந்தைப் பயன்படுத்துபவர்களின் எண் ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகின்றது.

2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் சீனாவின் பீஜிங் நகரில் நடத்தப்படவுள் ளன.இந்தப்போட்டியில் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் பதக்கங்களை வெல்ல வேண்டும் என்பதில் சீன அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது.

உலக நாடுகளில் எந்த மூலை முடுக்கில் விளையாட்டுப்போட்டிகள் நடந்தாலும் தனது வீர - வீராங்கனைகளை அனுப்பி பங்கேற்க வைப்பதில் சீனா கைதேர்ந்தது.

பயிற்சி முகாம்கள் அதிக அளவில் திறக்கப் பட்டு, வீர வீராங்கனைகளின் திறமைகள் பரி சீலிக்கப்படுகின்றன. இவையெல்லாம் சிறப்பாக நடந்து வந்தாலும் ,சீனாவை சங்கடப் படுத்தும் செயல்களும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

சீனாவின் , சுசோ நகரில் 10வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றன.இதற்கு முன்னர் இந்த ஆண்டில் சீனாவில் ஊக்க மருந்து பாவித்த வர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டது.


26 பேர் இந்த சர்ச்சையில் சிக்கியுள்ள னர்.இவர்களில் பாரம் தூக்குபவர்கள் 12, தடகளம் 5, 'ஸ்பீட் ஸ்கேட்டிங், சைக்கிளிங், பாடி பில்டிங்' தலா ஒருவர் ஊக்க மருந்து பயன்படுத்தியதாக கைப்பற்றப்பட்டுள்ள னர்.மேலும் மாணவர்கள் 4 பேரும் சிக்கி யுள்ளனர்.

ஒலிம்பிக் நடத்தும் நாடு என்ற பெருமை யுடன் இருக்கும் நேரத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்குபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித் துக்கொண்டே போகிறதே எனும் கவலையில் அரசு ஆழ்ந்துள்ளது.

இனிமேலாவது ஊக்க மருந்தை கை விட்டு வீரர்கள் பயிற்சிக்கு ஊக்கமளிப் பார்களா...? எல்லாம் வீரர்களின் செயல்...!

# கலக்கல்

வதனி




## கணனி குறும்பு



இதென்ன இறாளா.... யானையா.... அல்லது இரண்டையும் CROSS பண்ணியதில் உருவான புதிய உயிரினமா...? சீ...அப்படிஎதுவுமில்ல... சும்மா கணினியில் செய்த PHOTO MAGIC

## கண்டும் காணாததும்



இதிலே தெரிவது ஹரி போட்டர் என்ற குழந்தைகளை கவர்ந்த கதாபாத்திரத்தின் படம். ஆனால் காணாமல் இருப்பவை கஷ்டப்பட்டு கண்டு பிடிக்க வேண்டி இருப்பவை பல உருவங்கள்...கண்டு பிடியுங்கள்... ரசியுங்கள்....

## ஜாலியான படம்



அடடா...
இப்பவே
சலூன்களில்
கியூ...
இவைகளும் முடி
வளர்க்க
தொடங்கி
விட்டால்...கதை
கந்தல்தான்....

பாடசாலை ஒன்றில் வகுப்பு மாணவர்கள்களை பார்த்து ஆசிரியர் கேட்டார்... படித்து எதிர்காலத்தில் என்னவாக வரப் போகின்றீர்கள்?

கண்ணன்: டாக்டராக... வரப் போகிறேன்

மோகன்: எஞ்சினியராக... வரப் போகிறேன்

மாலினி: டீச்சராக... வரப் போகிறேன்

கமலா: நல்ல தாயாக வரப் போகிறேன்

ராஜன்: கமலாவுக்கு உதவி செய்யப் போகிறேன்.



## S.M.S சிரிப்பு

காட்டுக்குள்ளே அவசரமான மாநாடு ஒன்று....
எல்லா பிரதிநிதிகளும் வந்து விட்டார்கள்...
சிங்கம் வந்திருக்கிறது... புலி வந்திருக்கிறது...
யானை வந்திருக்கிறது.... கரடி
வந்திருக்கிறது....
குரங்கு வந்திருக்கிறது.... ஆனாலும்
மாநாட்டை ஆரம்பிக்க முடியவில்லை.
ஏனென்றால் கழுதை மட்டும் வரவில்லை...
ஏன்?
அதுதான் தற்போது இந்த S.M.S ஐ வாசித்துக் கொண்டிருக்கிறதே....

இந்த நிமிடத்தில் -
உலகத்தில் உள்ள
5 மில்லியன் பேர் கசா முசா பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்
10 மில்லியன் பேர் காதல் செய்து கொண்டிருக்கிறார்கள்
50 மில்லியன் பேர் காப்பி குடித்துக் கொண்டிருக்கிறார்கள்
100 மில்லியன் பேர் நித்திரை செய்து கொண்டிருக்கிறார்கள்
ஆனால்...
ஒரே ஒரு முட்டாள் மட்டும் இந்த S.M.S ஐ வாசித்துக் கொண்டிருக்கிறது.

## உலகம் போற போகு

நேற்றொரு மேனகை இன்றொரு ஊர்வசி என்று காதலித்து தள்ளிக் கொண்டிருப்பவர்களே... இன்றைய உலகம் போகும் போக்கை பற்றி அறிந்து கொண்டுவிட்டு உங்கள் பணியைத் தொடருங்கள்

அமெரிக்காவில்- பென்சில்வேனியா என்ற இடத்தில் வாழும் சென்-ஸ்லேவி என்பவர் கெயல் ஏ டூல் என்ற பெண்ணை காதலித்து வந்தார். இடையிலே அவருக்கு வேறொரு பெண் கிடைத்தது. எனவே டூலை விட்டு விட்டு அந்தப் பெண்ணை மடக்கிப் போட்டு விட்டார். இதனை அறிந்த டூல் நொந்து நாடுல்ஸாகிப் போனாள். தன்னை காதலித்த ஸ்லேவியை பழி வாங்க நினைத்தாள்.

அவரை தனது வீட்டுக்கு அழைத்து பாட்டி கொடுத்தாள்... பாட்டி முடிந்ததும்... நன்றாக மப்பு ஏறிக் கொண்ட ஸ்லேவி அங்கேயே தூங்கி விட்டார். இந்த தருணத்திற்காக காத்திருந்த டூல்... வீட்டிலே இருந்த ஒட்டும் பசையை எடுத்து ஸ்லேவியின் அடி வயிற்றுப் பகுதியில் ஊற்றி அவரது அந்தரங்க பாகத்தை அவரது உடலோடு ஒட்ட வைத்துவிட்டார்... இது போதாது என்று தனது நகச் சாயத்தை எடுத்து அவரது தலையிலே கொட்டிவிட்டார்.

காலையில் எழுந்து பார்த்த ஸ்லேவி... தனது நிலையைக் கண்டு அலற தொடங்கி விட்டான்... உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அள்ளிப் போட்டுக் கொண்டுபோய்...அவரது அதனை... உடலில் ஒட்டப்பட்ட பகுதியில் இருந்து பிரித்து எடுத்து விட்டார்கள்...தலைமுடியையும் மொட்டை அடித்து நகச் சாயத்தையும் விலக்கி விட்டார்கள்... இப்போ டூல் - ஸ்லேவி ஆகிய இருவரும் கோட்டு, கேஸு என்று அலைந்து கொண்டிருக்கிறார்களாம்.

இதிலிருந்து கிடைக்கும் நீதி...

காதலித்து கைவிட்ட பெண் கூப்பிட்டால் போகாதீங்கள்

போனாலும் அவர்கள் வீட்டில் படுக்காதீங்கள்

படுத்தாலும் அங்கே பசையோ, பிசினோ

இருக்கிறதா என்று பார்த்துவிட்டு படுங்கள்...

### S.M.S கவிதை

உனக்கென இருப்பேன்
உயிரையும் கொடுப்பேன்
என்னை நீ பிரிந்தால்
அரையை அடிச்சிட்டு
குப்புறப் படுப்பேன்

# அரங்கேற்றம்

## கௌசினி குமாரஜீவா



நாட்டிய தாரகை செல்வி கௌசினி குமாரஜீவாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த ஐந்தாம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் வெகு சிறப்பாக அரங்கேறியது.

விசாக்கா பெண்கள் வித்தியாலய அதிபர் திருமதி ஆர். என். அமரசிங்க கௌரவ அதிதியாக இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந் நடன நிகழ்வின் அரங்க பூஜையை புதிய கதிரேசன் ஆலையத்தின் குரு நடத்தி வைத்தார்.

அரங்கேற்றம் என்ற பதம் அரங்கத்தில் ஏறுதல் என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது. நீண்ட நாள் தமது குருவிடம் பெற்றுக் கொண்ட கவின் கலைத் திறனை ஒரு சிஷ்யன்/ சிஷ்யை பார்வையாளர் முன் முதன்முதல் வெளிப்படுத்துவதே இந்த அரங்கேற்ற நிகழ்வாகும். இந்த அரங்கேற்றத்தில் செல்வி கௌசினி குமரஜீவா தனது நாட்டியத் திறனை மிகத் திறமையாக முன் நிறுத்தி அரங்கம் நிறைந்த சபையோரிடம் 'அப்ளாஸ்' வாங்கினார்.

தனது நடனத்தை 'நாட்டியாஞ்சலி' யில் ஆரம்பித்த கௌசினி தொடர்ந்து கணபதி வந்தனத்தினூடாக அபிநயம் செய்து விநாயகரை வணங்கி பின்னர் ஜதீஸ்வரம், ராமநாடகா, வர்ணம் என்ற நடன நிகழ்ச்சிகளின் ஊடாக தாம் கற்ற கலையின் அற்புதமான பரிமாணங்களை அழகான அபிநயங்களினூடாக வெளிப்படுத்தி பார்வையாளர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார்.



இவரின் துடிப்பான ஆடலுக்கு பின்வரும் பக்கவாத்தியக் கலைஞர்கள் மெருகூட்டினர். நட்டுவாங்கம்:- திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன், பாடல்:- அகிலன், மிருதங்கம்:-இசைக்கலைமாணி திவாகரன், புல்லாங்குழல்:-விசாரத திரு குமாரலியவைத்த, தாளதரங்கம்:- ரட்ணம் ரட்ணதுரை.

'வர்ணம்' நாட்டிய நிகழ்வை அடுத்து சிங்கள மொழியிலான பாடல்களுக்கும்கௌசினி புள்ளி மயில் போல் துள்ளி ஆடி சபையோரைப் பரவசப் படுதியமை குறிப்பிடத்தக்கது.

சிங்களப் பாடல்களை விசாரத எட்வேட் ஜெயக் கொடி, பாடினார்.பக்கவாத்தியக் கலைஞர்களான ஜயந்த ரட்நாயக்க, நிஹால் பெரேரா, ஜானகபோகொட, பிரசாத் சில்வா ஆகியோர் முறையே கீபோட், சித்தார், புல்லாங்குழல், கிட்டார் ஆகிய வாத்தியங்களின் ஊடாக அரங்கத்தை அணிசெய்தனர்.

சிங்கள மொழியிலான நடனங்களை அடுத்து அரங்கத்தை அணிசெய்த பக்கவாத்தியக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து தில்லானா மங்களத்துடன் அரங்கேற்றம் இனிதே நிறைவேறியது.அரங்க நிகழ்வுகளை தமிழில் திரு விஸ்வநாதனும் ஆங்கிலத்தில் திருமதி ஜரீன் பஸ்தியாம் பிள்ளையும் சிங்களத்தில் திருமதி அனோமா வத்தல தெனியவும் அறிவித்தனர்.

செல்விகௌசினி குமாரஜீவாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் கண்களுக்கு கவர்ச்சியையும் மனதுக்கு மகிழ்ச்சியையும் அளித்த பெருவிருந்து என்று கூறினால் மிகையாகாது.

-நிமல்ஷி-







# வீணையின் நாதம்

வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் பத்திரிகையான "சுடர் ஒளி", சூரியன் எவ். எம் ஊடக அனுசரணையுடன் கடந்த 6ஆம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வீணையின் நாதம் எனும் வீணை, இசை நடன நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பங்கு பற்றவென ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்துவான் ராஜேஷ் வைத்தியா தனது இசைக் குழுவினரோடு இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்தார்.

விசேடமாக வடிவமைத்த அரங்க அமைப்பில் வினாயகனே வினை தீர்ப்பவனே என்ற பாடலுக்கான இசையுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. தொடர்ந்து கீதம், பாரதியார் பாடல்கள், ஆஸ்தான வித்துவானின் பாடல்கள், திரைப்படப்பாடல்கள், என்பவற்றை மிக அழகாகவும், லாவகமாகவும் வீணையில் மீட்டி பார்வையாளர்களை மகிழ்வித்தனர் ராஜேஷ் வைத்தியா குழுவினர்.

தொடர்ந்து நடனத் தாரகை செல்வி அஷ்வினி தில்லானா மோகனாம்பாள் திரைப்படத்தில் இடம் பெற்ற "மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன?" என்ற பாடலுக்கு நடனமாடினார்.

இவரின் நடனத்தை அடுத்து திரைப்படங்களில் வெளிவந்த பல பாடல்களுக்கு வீணை இசை இடம்பெற்றது. அத்துடன் சந்திரமுகி திரைப் படத்தின்"ரா ரா" என்ற பாடலுக்கு செல்வி அஸ்வினி நடனம் ஆடினார். திரு ராஜேஷ் வைத்யா பார்வையாளர்கள் விரும்பிக் கேட்ட பாடல்களையும் வீணையில் மீட்டத் தவறவில்லை.



இறுதியாக கலைஞர் கௌரவிப்பு இடம் பெற்றது. நிகழ்ச்சிகளை சூரியன் எவ். எம் நிகழ்ச்சி பொறுப்பதிகாரி ஏ. ஆர். வாமலோஷன் தொகுத்து வழங்கினார்.





பேராதனை பல்கலைக் கழக இந்து மாணவர் மன்றம் இம்மாதம் 1 ஆம் திகதி தீபாவளி தினத்தை முன்னிட்டு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் 'குறிஞ்சிச் சாரல்' பல்சுவை நிகழ்ச்சியை மேடையேற்றியது.

இந்த நிகழ்வில் இடம் பெற்ற 'ஜடாயு வதம்' நாட்டுக் கூத்தில் இடம்பெற்ற ஒரு காட்சியை முதலாவது படத்திலும், 'மெல்லத் தமிழினி...' என்ற நாடகத்தில் இடம்பெற்ற ஒரு காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மோகம் முப்பது நாள்

நான் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். என் அப்பா சிறு கடை வைத்திருந்தார். அவர் இறந்த பின்பு அம்மா கூலி வேலை செய்து என்னை படிக்கவைத்தார்.

என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு தம்பிகள், இரண்டு தங்கைகள். நான் தான் மூத்தவன்.

அப்பா இருக்கும் போதே என்னைக் கல்லூரியில் சேர்த்து விட்டார். நான் முதல் ஆண்டு படித்துக்கொண்டிருக்கும் போதே அப்பா திடீரென்று இறந்து விட்டார். வீட்டில் எல்லோரும் என்னை தொடர்ந்து படிக்கச் சொன்னார்கள். நானும் படித்து, பி.ஏ பட்டம் பெற்றேன்.

ஊரில் அப்பா நடத்திய கடை இருந்தது. என் தம்பி அதை நடத்திக் கொண்டிருந்தான். கொஞ்ச நிலம் இருந்தது. அதை அம்மா பார்த்துக் கொண்டார்.

படித்தவன் வியாபாரம் செய்தால், நல்ல ஆதாயம் இருக்கும்; பயிர் செய்தால் செழிப்பாக இருக்கும் என்ற புத்தி அப்போது எனக்கு இல்லை. கல்லூரிக்கு வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டு போய் பழகி விட்டதால் வெள்ளைச் சட்டை வேலை தேடினேன்; அந்தச் சட்டையில் மண், தூசி படாதபடி வாழ விரும்பினேன்.

எனவே வேலை தேடினேன். பல அலுவலகங்களுக்கு மனுச் செய்தேன். அரசாங்க வேலைக்கும் பரீட்சை எழுதினேன். வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் எனது பெயரைப் பதிவு செய்தேன்.

எனக்கு மாதம் ஐந்நூறு ருபாய் செலவாயிற்று. அறை வாடகை, சாப்பாட்டுச் செலவு, துணி மணி சலவைச் செலவு, வேலைக்கு மனுச் செய்வது, நேர்முகத் தேர்வுக்குப் போய்வருவது, திரைப்படம் பார்ப்பது என்று செலவுகள் இருந்தன. ஊரிலிருந்து மாதாமாதம் தம்பி பணம் அனுப்பிக் கொண்டிருந்தான்.

ஊரில் கடினமான வாழ்க்கை தான். ஒரு தம்பியும் தங்கையும் படித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு தங்கை திருமணத்திற்கு தயாராக வீட்டில் இருந்தாள். ஆனாலும் 'என் பிள்ளை பட்டினி கிடக்கக் கூடாது' என்று சொல்லி, அம்மா எப்படியோ பணம் வாங்கி தம்பியிடம் கொடுத்து எனக்கு அனுப்பி வைத்தார்.

இந்த நிலையில் தான் அந்தத் திருமணத் தரகர் வந்து என்னைப் பார்த்தார். எனது திருமணத்தைப் பற்றி பேசினார். ஒரு பெண்ணின் படமும் காட்டினார்.

பெண் அழகாகத்தான் இருந்தாள். படித்திருந்தாள். ஆனால் நான் திருமணம் செய்யும் நிலையிலா இருக்கிறேன்? வேலையில்லை! வேளா வேளைக்கு சாப்பாட்டுக்கு வழியில்லை. வீட்டில் ஒரு தங்கை திருமணத்திற்கு தயாராக இருந்தாள்.

எல்லாவற்றையும் தரகரிடம் சொன்னேன். "நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள். உங்கள் திருமணச் செலவை பெண் வீட்டாரே ஏற்றுக் கொள்வதுடன், உங்கள் தங்கைக்கும் திருமணம் செய்து வைப்பார்கள்" உன்று சொன்னார்.

அது ஆண் வாரிசு இல்லாத குடும்பம். தாயும் ஒரு மகளும் மட்டுமே. குடும்பத் தலைவர் பல ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார். நிறையச் சொத்துக்கள். மாதா மாதம் வாடகை, வட்டிப் பணம் வருகின்றது என்று சொன்னார்.

வசதியான குடும்பம் என்றதும் எனக்கு ஒரு ஆசை வந்தது. "அம்மாவிடம் பேசுங்கள்" என்றேன். நானே இவரை அழைத்துக் கொண்டு ஊருக்குப் போனேன்.

அம்மாவிடம் நேரடியாக பேசினார். என்னிடம் சொன்னதையெல்லாம் அம்மாவிடமும் கூறினார். கூடுதலாக ஒரு செய்தி சொன்னார்- வீட்டோட மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்று.

அம்மா இதற்கு ஒப்புக் கொண்டார். பிள்ளையாவது நல்லா இருக்கட்டுமே என்ற ஆசைதான். அம்மாவுக்கு வேறு இரு ஆண் பிள்ளைகளும் (என் தம்பிகளும்) இருந்தார்கள். எனவே, என்னை வீட்டோட மாப்பிள்ளையாக அனுப்பி வைக்க அம்மாவுக்கு விருப்பம் இருந்தது. இலட்சாதிபதி குடும்பம் என்றதும் தம்பி தங்கைகளும் அம்மாவுக்கு ஆதரவு அளித்தார்கள். பெண் பார்ப்பது, நிச்சயதார்த்தம் போன்ற சடங்குகள் அடுத்தடுத்து நடந்தன. அதன் பின் திருமணம்.

நேரில் பார்க்க பெண் தேவதை போல் இருந்தாள். வீடோ தேவலோகம். அவ்வளவு அலங்காரம், அவ்வளவு வசதி "மாப்பிள்ளை... மாப்பிள்ளை..." என்று அன்பாகவும் ஆசையாகவும், மதிப்பு மரியாதையோடும் என்னை வைத்துக் கொண்டார்கள். நான் உல்லாசத்தில் பறந்து கொண்டிருந்தேன்!

மறந்து விடாமல் என் தங்கைக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். தரகரே மாப்பிள்ளை பார்த்தார். அந்த வேலையும் முடிந்தது. ஆறேழு மாதங்கள் ஓடின. நான் கார் ஓட்டக்கற்றுக் கொண்டேன் அதன் பின் காரோட்டியை வேலையிலிருந்து நிறுத்திவிட்டோம்.

ஒரு நாள் சமையல்காரிக்கும் சீட்டு கிழிந்தது!

என் மனைவி அடுப்படிக்குள் போனாள். அவளுக்கு உதவி செய்வது போலே நானும் உள்ளே நுழைந்தேன். ஒரு மாதத்தில் நானே சமையல்காரன் ஆகிவிட்டேன்! "பிரமாதம்!" என்று பாராட்டினார்கள். எனக்கு உச்சி குளிர்ந்தது! மனைவிக்கும் மாமியாருக்கும்காப்பி போட்டுக் கொண்டுபோய் கொடுத்தேன். சமைப்பது, பரிமாறுவதும் தான் என்று அது வளர்ந்தது.

என் மனைவி சேலைகளைத் துவைத்துப் போட்டேன்! சேலைகள் மட்டுமா? ப்ராக்கள், உள்ளாடைகளை கூட. மாமியார் சேலைகளும் வந்து விழுந்தன! துவைத்தேன்! வீட்டு வேலைகளை எல்லாம் நானே செய்ததால், என் மீது மனைவிக்கு அன்பு பெருகியது. எனக்காக நிறையச் செலவு செய்தாள். மாலையில் காரை எடுத்துக் கொண்டு ஊர் சுற்றுவோம்.

இரவு வீட்டிற்கு வந்து கட்டிலறைக்குப் போனால் இன்பம் கொள்ளை கொள்ளை! நான் தான் அந்த இன்பத்திலே ஊறிப்போனேன் என்றால், அவள் எனக்குமேல் இருந்தாள்! தேனில் இருந்த எறும்புபோல் நான் ஆகிவிட்டேன்! அந்தத் தேனுக்காய் எந்த வேலை செய்யவும், மாமியாருக்கு கால் பிடித்துவிடக்கூட நான் தயாராக இருந்தேன். ஒரு பேச்சுக்குச் சொல்லவில்லை, உண்மையாகவே ஐந்தாறு முறை மாமியாருக்கு கால் பிடித்து விட்டேன்.

மாமியாருக்கு 40 வயது இருக்கும்.



மணமானதும் அவருக்கு மகள் பிறந்தாள். எனது மனைவி. அடுத்த சில ஆண்டுகளில் கணவன் இறந்தார். எனவே இப்போதும் கை படாத

**உண்மைக் கதை**

ரோஜா போல இருந்தார். கட்டுக் குலையாத உடல். ரோஜா நிறம். கால் பிடித்து விடும் போது பாத்திருக்கிறேன், வாளைத்தண்டு தொடை. பார்க்கப் பார்க்கப் எனக்கே ஆசை ஏற்பட்டது. என் மனைவிக்கு திடீரெண்டு ஒரு ஆசை ஏற்பட்டது. எல்லோர் வீட்டிலும் கணினி இருக்கிறதே நம்ம வீட்டிற்கும் வேண்டும் என்று நினைத்தாள். முதலில் கணினியை இயக்கப் பயிற்சிபெறப் போனாள். காலையில் ஒருமணி நேரப் பயிற்சி; மாலையில் ஒருமணி நேரப் பயிற்சி.

அவளே கார் எடுத்துக் கொண்டு போய் விடுவாள். அவளுக்குக் கார் ஓட்டத் தெரியும்.

ஒரு நாள் அப்படி அவள் பயிற்சி வகுப்பிற்கு போய் இருந்த போது...

"மாப்பிள்ளை தலை வலிப்பது போல் இருக்கிறது. காப்பி போட்டுக் கொண்டு வாருங்களேன்" என்று மாமியார் சொன்னார்.

நான் அடுப்படிக்குப் போய் காப்பி போட்டுக் கொண்டு வந்தேன்.

"வேட்டியில் என்ன கறை மாப்பிள்ளை?" என்று கேட்ட மாமியார் என் வேட்டியை கையில் பிடித்து பார்த்தார். அப்படியே உருவி விட்டார்! இருவரும் கட்டிலறைக்குப் போனோம்!

பிறகு இது வழக்கமாகி விட்டது. என் மனைவி வெளியே போனதும், நாங்கள் இருவரும் படுக்கையறைக்குப் போய் விடுவோம். வெளியே வர இரண்டு மணி நேரமாகும். மோகம் முப்பது நாள் தானே?

'தாய் மகள் இருவருமே காமப் பேய்களாக இருக்கிறார்களே' என்று நினைக்கத் தொடங்கினேன்!

இருவருக்கும் ஈடுகொடுக்க என்னால் முடியவில்லை! இரவில் என் மனைவி வரும்போது முன்போல் நான் இருப்பதில்லை.

'ஏன் இப்படி என்று அவள் ஊகித்தாள்!

அவள் தான் மகிழ்ச்சியுடன் இருப்பதையும் இதனுடன் இணைத்துப் பார்த்திருக்கிறாள்!

ஒரு நாள் திடீரெண்று வீட்டிற்குத் திரும்பினாள்! எங்கள் இருவரையும் கையும் களவுமாக பிடித்துவிட்டாள்!

அம்மாவை வாய்க்கு வந்தபடி ஏசினாள்!

"நீயே எனக்கு சக்களத்தி ஆகி விட்டாய்! இனி என் முகத்தில் விழிக்காதே! வெளியே போ!" என்று தாயை விரட்டினாள்!

"இது என் வீடு! நீ வெளியே போ!" என்று மாமியார் கத்தினார்.

இருவருக்கும் குடுமிச் சண்டை!

நான் செய்வதறியாது நின்றேன்.

கடைசியில் என் மனைவி மாடிக்கு ஓடினாள். துணி மணி நகை, பணம் எடுத்துப் பெட்டியில் நிரப்பிக் கொண்டு, தடதட என்று இறங்கி வந்தாள்.

"வாங்க!" என்று என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியேறினாள்! அவளே கார் ஓட்டினாள். நாலைந்து நாள் ஹோட்டலில் தங்கினோம். பிறகு ஒரு வாடகை வீடு எடுத்தோம்.

நடந்ததற்கு நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

"உங்களை வீட்டோடு வைத்துக் கொண்டது என் தப்பு" என்றாள், அவள்.

அடுத்து என்ன செய்வது என்று யோசித்தோம்.

எனக்கு அப்பாவுடன் அமர்ந்து கடை அனுபவம் கொஞ்சம் இருந்தது. அதைக் கொண்டு பெரிய கடை ஒன்று தொடங்கினோம். என் மனைவி எனக்கு உதவியாக இருந்தாள்.

இப்போது வசதியாக இருக்கிறோம். இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். மாமியார் வீட்டுக்குப் போவோம். அவர்களும் எங்கள் வீட்டுக்கு வருவார்கள்.

அலை அடித்து, அலை விலகாது அல்லவா?

# கிரகணம்

## பூமியை பாதிக்காது!

"சூரிய, சந்திர கிரகணங்கள் பூமியைப் பாதிக்கும். பூகம்பங்கள் ஏற்படும்! புயல் வீசும்! பேய் மழை கொட்டும்!!" என்று எல்லாம் சோதிடர்கள் மிரட்டுகிறார்கள்! அதனால் பயந்து போன மக்களுக்கு ஒரு ஆறுதல்-

ஆனால், கிரகணங்கள் எந்த விதத்திலும் பூமியைப் பாதிக்காது என்று ஆராய்ச்சியாளர்கள் அடித்துச் சொல்லுகிறார்கள்! டெல்லியில் உள்ள வானியல் ஆய்வு மைய இயக்குநர் இரத்தினஸ்ரீ இதுபற்றிக் கூறியதாவது:

"கிரகணங்கள் பற்றி ஐம்பதாண்டு காலமாக நான் ஆராய்ச்சி செ[illegible] வருகிறேன். [illegible] ஐம்பதாண்[illegible] ஏற்பட்ட பூக[illegible]ங்கள், புயல்கள், வெள்ளம் பற்றியும்ஆராய்ச்சி செய்தேன்.

கிரகணங்கள் எந்த வகையிலும் பூமியைப் பாதிப்பது இல்லை என்று கண்டு பிடித்தேன்.




உண்மை இப்படி இருக்க, சோதிடர்கள் ஏன் மக்களை பயமுறுத்துகிறார்கள்?

சூரிய கிரகணத்தால்தான் பாகிஸ்தானில் பூகம்பம் ஏற்பட்டது என்று சோதிடர்கள் சொல்லுகிறார்கள். பூகம்பம் ஏற்பட்ட பின்புதானே சோதிடர்கள் இதைச் சொன்னார்கள்? இதற்கு சோதிடர்கள் தேவையில்லையே! சூரிய கிரகணம் வரப்போகிறது என்று ஜனவரி மாதமே பஞ்சாக்கத்தில் இருக்கிறது. அப்போதே பாகிஸ்தானில் பூகம்பம் ஏற்படும் என்று இந்த சோதிடர்கள் சொல்லியிருக்கலாமே!


கிரகணங்களுக்கும் பூமிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. பூகம்பம், வெள்ளம், புயல் எல்லாம் ஆண்டு முழுக்க நடந்து கொண்டிருப்பவைதான். அதோடு கிரகணங்களை முடிச்சுப் போடுவது, காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதைதான். எனவே,' சோதிடர்கள் சொல்லுவதைக் கேட்டு, மக்கள் பயப்பட வேண்டியது இல்லை!

அடுத்த பூகம்பம் என்றைக்கு, எந்த நாட்டில் ஏற்படும் என்பதை எந்த சோதிடராவது சொல்லட்டுமே, பார்ப்போம்!" என்றார், இந்திய அறிவியல் நிபுணரான ரத்தினஸ்ரீ!




ச.தயிகாசலம்-மன்னார்.

கேள்வி:- பித்தா! கவனம். உமது மனைவி பொல்லாதவர் என்கிறீர்...ஒரு நாளைக்கு நீர் தூங்கும் போது அம்மிக் குளவியை எடுத்து உமது தலையிலே போட்டு உம்மை கொன்றாலும் கொன்றுவிடுவார் ஜாக்கிரதை...



பதில்: -NO... NO... அதற்கு சாத்தியமே இல்லை. ஏனென்றால்- ஒன்று எனது வீட்டில் அம்மியும் இல்லை.. குளவியும் இல்லை... கிரைன்டர்தான் இருக்கிறது... அடுத்தது... இப்படி எல்லாம் நடக்கும் என்று தெரிந்து. நான் படுக்கும் போது ஹெல்மெட் போட்டுக்கொண்டுதான் படுப்பேன்.

வ.அரவிந்தன்தாவடி.

கேள்வி:- பித்தா! தீபாவளிக்கு எனக்கு சட்டை தைக்க ரெய்லர் கடைக்குப் போனேன். ஒரு ரெய்லர் எனக்கு 11/2 மீட்டர்துணி சேட் தைக்க தேவை என்றார். ஆனால்- வேறொரு ரெய்லரோ 1 மீட்டரே போதும் என்று வாங்கி அளவாக சேட் தைத்துத் தந்துவிட்டார். இது எப்படி சாத்தியம்?

பதில்:-முன்னைய ரெய்லரின் மகன் பெரியவனாக இருப்பான், பின்னைய ரெய்லரின் மகன் சின்னவனாக இருப்பான். உமக்கு சேட் தைத்த துணியின் மிச்சத்தில் அவனுடைய மகனுக்கு சேட் தைக்க



முடியாமல் இருந்திருக்கும். இவனுடைய மகனுக்கு சேட் தைக்க போதுமானதாக இருந்திருக்கும்.

ச.வானதி-முருங்கன்.

கேள்வி:-பித்தா! இந்தத் தீபாவளிக்கு உமது மனைவி செய்த பலகாரங்கள் எப்படி? சுப்பரா?

பதில்:-சுப்பரோ...சுப்பர்... ஒரு லட்டுச் செய்தாள் பாருங்கள். நீண்ட நாளாக கொடுப்புப் பல் வலித்தபடி இருந்தது. டாக்டரிடம் சென்று பிடுங்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அந்த லட்டை சாப்பிட்டேன்.. டாக்டரிடம் போகும் வேலை மிச்சமாகிவிட்டது. வீட்டிலே நிறைய லட்டு மிச்சம் இருக்கிறது. உமக்கு ஏதும் பல் பிடுங்கும் தேவை இருந்தால் சொல்லும் அனுப்பி வைக்கிறேன்.

பாலசிங்கம்.செல்வி-கல்மடு நகர்

கேள்வி: - மாமி - மருமகள் இடையில் உருவாகும் பிரச்சினைக்கு காரணம் என்ன?

பதில்:-பெற்று வளர்த்து ஆளாக்கி தான் வைத்திருக்கும் அன்பை பங்குபோட இன்னொருத்தி வந்து விட்டாளே என்று பொருமும் தாய்க்குலமும்(மாமி) தொட்டுத் தாலி கட்டி-அவனுக்காகவே வாழும் தனது அன்பை பங்கு போடுகிறாளே என்ற மனைவியின் பொருமலும் (மருமகள்)இந்த இரு உணர்ச்சிக் குமுறல்கள்தான் மாமி-மருமகள் பிரச்சினைக்கு காரணம்.

P.நந்தன்-புதுக்குடியிருப்பு.

கேள்வி:-மச்சான் பித்தா! உனது மனைவியிடம் நீ படும் துன்பத்தைப் பர்க்கும்போது மன வேதனையாக உள்ளது. ஆதலால், உனது மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு வா. இதுவரை 4 பேரால் ஏமாற்றப்பட்ட , நன்கு படித்த, அழகிய வெள்ளி திரை உள்ள 4 பிள்ளை களுக்குத் தாயாக உள்ள ஒரு பெண் கைவசம் இருக்கிறாள். உனக்குக் கட்டி வைக்கிறேன்

பதில்:-யேப்பா...நந்து...நீ என்னை கஷ்டத்திலிருந்து காப்பாற்றப் பார்க்கிறியா அல்லது மேலும் கஷ்டத்தில தள்ளிவிடப் பார்க்கிறியா? ஏமாத்திய நாலு பேரில நீயும் ஒருவனா? அது சரி நாலு பேரால் ஏமாற் றப்பட்டு 4 பிள்ளைகள் என்றால் அடுத்ததாக நானும் வந்து 5 ஆவதாக ஒன்றும் பிறந்து விட்டால்... எல்லாவற்றிற்கும் இனிஷல் எப்படி வைப்பார்கள்?



ந.சபனத்-புத்தளம்.

கேள்வி:- பித்தா உன்னிடம் ஒரு அறிவு பூர்வமான கேள்வி. அண்ணன் தம்பி இரண்டு பேர். மூன்று முட்டைகள் இருக்கின்றன. இம்முட்டைகளை எப்படி அவர்களுக்கு சம பங்குகளாக பிரித்துக் கொடுக்கலாம். ஆனால், முட்டைகளை பாதியாக பிக்கவோ, வெட்டவோ கூடாது... எங்கே விடையைச் சொல்லும் பார்ப்பம்...



பதில்:-அண்ணனுக்கு ஒன்று... தம்பி இரண்டு பேரல்லவா அவர்களுக்கு ஒவ்வொன்று...மூன்று முட்டைகளும் O.K... அப்பு... இந்த குண்டக்க-மண்டக்க கேள்விகள் எல்லாம்.... எனக்கு தூசு அப்பு...தூசு...

நில்மலன் - யாழ்ப்பாணம்.

கேள்வி:-டியர் பித்தா! எனக்கு வயது 28. நான் கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்று செல்வங்களிலும் முன்னிற்க வேண்டும் என்பது தான் எனது இலட்சியம். இது நிறைவேற நான் என்ன செய்ய வேண்டும்?

பதில்:-கல்விக்கு - நன்றாகப் படிக்கலாம்.

செல்வத்திற்கு - நன்றாக உழைக்கலாம்.

வீரத்திற்கு..... யோவ் .... வீரத்திலே முன் நிற்பதற்கு எனக்கு வழி தெரிந்தால் நான் ஏன் மனைவியிடம் அடிவாங்கிக் கொண்டிருக்கப் போகிறேன். நான் இந்த விளையாட்டுக்கு வரேல்லை.

சாமிரா பேகம்-புத்தளம்.

கேள்வி:-பித்து மாமா..... பெண்கள் இந்த நாட்டின் கண்கள், முதுகெலும்புகள் என்கிறார்களே.. இது உண்மையா... அல்லது பெண்களுக்கு வைக்கும் ஐஸா?

பதில்:-ஐஸா.... சீ..... தாரு சென்ன... ஐஸுன்னு... கண்ணு, காது, மூக்கு, நாக்கு... கழுத்து.. காலு... கையு... முதுகெலும்பு, விலாஎலும்பு, மனக்கட்டு எல்லாமே அவங்கதான்.. தாரு இல்லேன்னு சென்னது...

அது சரி இந்த ஆம்பிளைங்க என்ன... தலை மசிரா....

மு. கடலவன்-புளியங்குளம்.

கேள்வி:-பித்தா! நான் ஒரு பெண்ணைக் காதலிக்க வேண்டும் என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?

பதில்:-நொந்து நூடுல்ஸ்ஸாகி... சிநூலாகி... அந்து அவலாக வேண்டும்.

அகிலன்- வவுனியா.

கேள்வி:-பித்தா! தற்போது பெண்கள் ஆண்களை குடும்ப வாழ்க்கையில் நெறிப் படுத்துபவர்களாக இருக்கிறார்களே! இது பற்றி உமது கருத்து என்ன?

பதில்:-ஆண்களை அடிமைப்படுத்தி... ஆட்டிவைப்பதற்கு உமது அகராதியில் வாழ்கையை நெறிப்படுத்துவது என்பது தான் அர்த்தமோ... போய்யா....போ... போ...

சமீரா ரபீக் - புத்தளம்.

கேள்வி:-அன்பின் பித்தா! பெண்கள் கட்டாயம் படிக்க வேண்டும் என்கிறார்கள். இவர்கள் படித்து என்னத்தை கிழிக்கப் போகிறார்கள். கடைசியில் சமையல் அறைக்குத்தானே வர வேணும் என்பது எனது கருத்து... உமது கருத்து என்ன?

பதில்:-சமையலறையில் வந்து கிழிப்பதற்கு படிப்பு தேவையில்லையா.. யார் சொன்னது.. படிப்பு என்பது சமையலறைக்கு மட்டுமல்ல... படுக்கை அறைக்கும் கூட தேவை.

தயாளன்- தாவடி.

கேள்வி:-பித்தா... கஜனி பாத்தீரா... எப்படி?

பதில்:-பார்த்தேன் பராவாயில்லை. ஆனால் மனதில் வந்து ஒட்டவில்லை. ஆனால் சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி பார்த்தேன். இன்றும் போட்டு ஆட்டுகிறது.

த.ஆனந்தி -பன்னாகம்.

கேள்வி:-பித்தா! உறுதியாகச் சொல்லும், அடுத்த ஜனாதிபதி ரனில் தானே?

பதில்:-உமது மன ஆறுதலுக்காக நான் "ஓம்" என்று சொல்ல விரும்பவில்லை.... 17ஆம் திகதிக்கு அடுத்து வரும் வார இதழில் உறுதியாக சொல்கிறேன்.

வதனன்-சல்லி.

கேள்வி:-பித்தா.. மனைவி தொல்லை என்றால்... பேசாமல் ஒரு சின்னவீடு வைத்துக் கொள்ள வேண்டியது தானே?

பதில்:-ஆஹா.. மகத்தான ஐடியா.. இது வரை எவரும் சொல்லாத ஐடியா... தான் ரெடி... ஆனால் அதனால் ஏற்படும் மேலதிகச் செலவுகளை எல்லாம் பொறுத்துக் கொள்ள நீர் ரெடியா...

பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-

பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-



பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85,ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14

# வீட்டில் சாப்பிடுங்கள்

வெளியில் சாப்பிடும் பழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது!

குறிப்பாக இளைஞர்கள்,யுவதிகள் வெளியில் சாப்பிட விரும்புகிறார்கள்!

இது உடம்புக்கு நல்லது இல்லை என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்!

இந்தப் பழக்கத்தால் வேறு பழக்க வழக்கங்களும் காளையர், கன்னியரிடம் ஏற்படுவதைக் கண்டறிந்து உள்ளார்கள்!

'வீட்டில் சாப்பிடுவதுதான் நல்லது' என்ற முடிவுக்கு ஆராய்ச்சியாளர்கள் வந்துள்ளனர்!

**அமெரிக்க நாகரிகம்**

ஹோட்டல்களிலும், உணவுக் கடைகளிலும் சாப்பிடுவது அமெரிக்கர்களின் நாகரிகம். அந்த நாகரிகம் இப்பொழுது எங்கும் பரவிவிட்டது.

ஹோட்டல்களிலும்,உணவுக் கடைகளிலும் மாணவ- மாணவிகளின் கூட்டம்தான்! அரட்டை அடித்துக் கொண்டே சாப்பிடுவார்கள்!

குழந்தைகள் கூட உணவுக்கடை உணவுகளை விரும்புகிறார்கள்.

**ஆய்வு**

இந்தப் பழக்கம் பற்றி அமெரிக்காவில் ஒரு ஆய்வு நடந்தது.'எல்சி' என்ற பேராசிரியை இந்த ஆராய்ச்சியை நடத்தினார்.

அமெரிக்கா முழுவதும் 14 ஆயிரம் மாணவ மாணவிகளை அந்த ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டார்கள்.

இந்த மாணவ-மாணவிகள் வழக்கமாக உணவுக் கடைகளில் சாப்பிடுபவர்கள். எதையோ சாப்பிட்டுவிட்டு கோக், பெப்சி குடிப்பார்கள்.

இதன் விளைவு என்ன என்று ஆராய்ந்தார்கள்.

**சத்துக் குறைவு**

இப்படி வெளியில் சாப்பிடுவதால் மாணவ- மாணவிகள், இளைஞர்கள்-இளம் பெண்கள் சத்துக் குறைவாக இருப்பதை



ஆராச்சியாளர்கள் கண்டார்கள்.

இவர்கள் சாப்பிடுவது சரிசம உணவு அல்ல; சத்துள்ள உணவும் அல்ல. வாய்க்கு சுவையாக எதையோ சாப்பிடுகிறார்கள்; வாய்க்கு குளிர்ச்சியாக கோக், பெப்சி குடிக்கிறார்கள். அந்த பானங்களிலும் எந்தச் சத்தும் கிடையாது!

உணவுக் கடைகளில் சாப்பிடும் குழந்தைகளின் உடல் பெருக்கிறது. 'ருசியாக இருக்கிறது' என்று அவர்கள் சாப்பிடுவதே இதற்குக் காரணம்.உடல் பெருத்த குழந்தைகள் பிற்காலத்தில் பல வித நோய்களுக்கு ஆளாகுவார்கள்.

**கெட்ட பழக்கங்கள்**

இப்படி வெளியே சாப்பிடுவதால்,சில கெட்ட பழக்கங்கள் தொற்றிக் கொள்வதையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டார்கள்!

சிகரெட்டுப் பிடிக்கக் கற்றுக் கொள்கிறார்கள்!

சிலருக்குக் குடிப்பழக்கமும் எற்படுகிறது!

இன்னும் சிலர் போதை மருந்துக்கு அடிமை ஆகிறார்கள்!

காதல் மலர்கிறது! 'காதல்' என்ற பெயரில் தமது எதிர் காலத்தை குறிப்பாக படிப்பைக் கெடுத்துக் கொள்கிறார்கள்!

**வீட்டில் சாப்பிடுங்கள்!**

அதே நேரம் வீட்டில் சாப்பிடுவதால் பல நன்மைகள் இருப்பதை நிபுணர்கள் கண்டார்கள்

முதல் நன்மை, வயிற்றுக்கும் உடம்புக்கும் நல்லது. சத்துள்ள உணவு கிடைக்கிறது.

பெற்றோர் பிள்ளைகளின் நெருக்கம்-பாசம் ஏற்படுகிறது.ஒன்றாக அமர்ந்து சாப்பிடும் போது, பெற்றோர்களிடம் பிள்ளைகள் மனம் விட்டப் பேசுகிறார்கள்; நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக் கொள்கிறார்கள்.

"அவசரமான உலகம்தான் . ஆனால், இரவுச் சாப்பாட்டையாவது வீட்டில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

வெளியில் சாப்பிடும்போது ஒரு பழத்துடன் சாப்பாட்டை முடியுங்கள் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

# நிலா நிலா ஓடி வா...

1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ஆம் திகதி நீல் ஆர்ம்ஸ்ட்ராங் நிலவில் காலடி பதித்த நாள். சற்று நடந்து விட்டு மீண்டும் ஆர்ம்ஸ்ட்ராங் தன் விண்வெளிக் கலத்தின் ஏணியில் ஏறுகையில் 'குட்லக் மிஸ்டர் கார்ஸ்கி' என்றார்!

ஆர்ம்ஸ்ட்ராங் பூமிக்குத் திரும்பி வந்ததும் நிருபர்கள் அவரை மொய்த்துக் கொண்டு இது பற்றி விடாப்பிடியாகக் கேட்டார்கள். ஆனால் அதற்கு அவர் எதுவுமே சொல்லாமல் 26 ஆண்டுகளாக அந்த 'மர்மம்' நீடித்தது.

பின்பு 'நாசா'வை விட்டு விலகி வேறு பதவி ஏற்ற போது நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அந்த மர்மப் புதிருக்கு விடை கிடைத்தது!

சிறு வயதில் ஆர்ம்ஸ்ட்ராங் நண்பர்களுடன் வீட்டுத் தோட்டத்தில் பந்து விளையாடிக் கொண்டிருந்திருக்கிறார். அவர் அடித்த பந்து அடுத்த வீட்டு பெட்ரும் கண்ணாடி ஒன்றை உடைத்துவிட்டது. பந்தைப் பொறுக்கப்போன சிறுவன் ஆர்ம்ஸ்ட்ராங் காதில் பக்கத்து வீட்டுக்காரரான கார்ஸ்கியும், அவரது மனைவியும் ஏதோ காரசாரமாய்ப் பேசிக் கொண்டிருந்தது விழுந்தது.

அந்த மனைவி கணவனைப் பார்த்துக் கத்திக் கொண்டிருந்தார்... "இந்த வயதில்" இப்படியெல்லாம் உங்களுக்கு ஆசையா ? என்று கோபத்துடன் கூறினார்.

கடைசியில் அந்தப் பெண்மணி, "முடியாது... முடியாது! ஓ.கே... முதல்ல மனுஷன் சந்திரன்லே எப்போ காலடி எடுத்து வைக்கிறானோ அப்போ பார்க்கலாம்!" என்றாராம்.

இவர்கள் பேச்சு சிறுவன் ஆர்ம்ஸ்ட்ராங்கிற்கு அப்போது புரியவில்லை! பின்பு திருமணமாகியதும் புரிந்திருக்கிறது - புது மாதிரியான 'செக்ஸ்' விவகாரம் என்று!

நிலவில் இருந்தபோது ஆர்ம்ஸ்ட்ராங்கிற்கு இந்த நிகழ்ச்சி நினைவுக்கு வரவே, 'இப்போதாவது உங்கள் ஆசை நிறைவேறட்டும்' என்று கிண்டலடிப்பது போல் 'குட்லக் மிஸ்டர் கார்ஸ்கி' என்றாராம்!

# அமைதியாக வந்த தமிழரசுத் தொண்டர்கள் மீது காலிமுகத் திடலில் வைத்து சிங்களவர் தாக்குதல்!



நாகநாதன்

1956 ஜுன் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட இருந்த நாள். எதிர்ப்பியக்கம் நடத்துவது என்ற தமிழரசுக்கட்சியின் தீர்மானத்திற்கு அமைய அன்று காலை யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து தொண்டர் குழுக்கள் கொழும்பு வந்து சேர்ந்தன. அவர்கள் பம்பலப்பிட்டியில் உள்ள ஒரு கோயில் வளாகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

திருகோணமலை எம்.பி. இராஜவரோதயம், மட்டக்களப்பு முதலாவது எம்.பி. சி. இராஜதுரை, பொத்துவில் எம்.பி. எம்.எம். முஸ்தபா ஆகியோர் தங்கள் தங்கள் பகுதிகளைச் சேர்ந்த தொண்டர்களை ரயில் மூலம் அழைத்து வந்திருந்தனர். எஸ்.நடராஜா யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தொகுதி தொண்டர்களை அழைத்து வந்திருந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வரவிருந்த தொண்டர்களை வரவேற்பதற்காக கோட்டை ரயில் நிலையத்தில் நான் நின்றிருந்த சமயம் ஏற்பட்ட சம்பவம் ஒன்று எனது நினைவுக்கு வருகின்றது.

ரயில் நிலையத்தை வந்தடைந்த, தொண்டர்கள் பிளாட்பாரத்தில் கூடியிருந்த வேளையில் அப்பொழுது யாழ்ப்பாண சட்டத்துறையில் இளம் வழக்குரைஞராகப் பிரகாசிக்கத் தொடங்கியிருந்த எஸ். கதிர்வேற்பிள்ளையும், எனக்குத் தெரிந்த ஆனைக்கோட்டை வழக்கறிஞரான எஸ். திருநாவுக்கரசுவும் நடராஜாவுடன் என்னிடம் வந்தனர். தாங்கள் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களோ ஆதரவாளர்களோ அல்ல என்றாலும், அன்று நடக்க இருந்த சத்தியாக்கிரகத்தில் தாமும் பங்கேற்க விரும்புவதாகத் தெரிவித்தனர். "கட்சியின் தீவிர உறுப்பினர்கள் மத்தியில் இருந்து குறிப்பிட்ட அளவு தொண்டர்களை மட்டுமே தெரிவுசெய்வது என்ற வகையில் அந்தக் காரியம் முடிவுற்று விட்டபோதிலும்,




அத்தியாயம் 19

தலைவர்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்டு குறிப்பாக சாத்வீகத்தைக் கண்டிப்புடன் பின்பற்றுவதானால் அவர்களும் பங்குபற்றுவதில் ஆட்சேபனை எதுவும் இருக்காது" என்று நான் அவர்களிடம் கூறினேன்.

## சாத்வீக வழியில் ஏற்பாடு

இவ்வாறு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாங்கள் எல்லோரும் அமைதியாகவும், சாத்வீகமாகவும் சத்தியாக்கிரகத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இருந்த பொழுது பாரண்டாரநாயக்கா தலைமையிலான மகாஜன எக்சத் பெரமுன (எம்.ஈ.பீ.) அரசைச் சேர்ந்தவர்களும் தங்கள் வழியில் ஏற்பாடுகளில் இறங்கி இருந்தார்கள் என்பது எங்கள் எவருக்குமே தெரிந்திருக்க வில்லை. அப்படியே தெரிந்திருந்தாலும் கூட எங்கள் திட்டத்தில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தி இருக்க முடியாது.

ஒருவேளை, தொண்டர்கள் கையில் ஏந்தவிருந்த அட்டைகளிலும், பதாகைகளிலும் வேண்டுமானால் மாற்றங்கள் ஏதும் செய்திருக்கலாம்.

கோயில் வளாகத்தில் குழுமியிருந்த சுமார் 300 தொண்டர்களுக்கும் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி விளக்கமளிக்கப்பட்டது. பின்னர் காலி முகத்திடலுக்கு அருகில் உள்ள கோல்பேஸ் ஹோட்டலின் எல்லையில் அவர்கள் கொண்டுபோய் விடப்பட்டனர். தொண்டர்கள் அவ்விடத்திலிருந்து இருவர் இருவராக வரிசையாக நடந்து திடலின் மற்றக் கரையிலிருந்த நாடாளுமன்றக் கட்டடத்தை அடைந்து அதன் படிகளில் அமைதியாகவும் ஒழுங்கான முறையிலும் அமர்ந்து கொள்வதே திட்டமாகும்.

## ஆட்டு மந்தைகளில் ஓநாய்கள் போல்

ஹோட்டலின் எல்லையில் தொண்டர்களும், தலைவர்களும் ஒன்றுகூடிய மறுகணமே, அதுவரை காத்திருந்த ஓராயிரம் பேருக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட சிங்களக் காடையர் கூட்டம் ஓநாய்கள் ஆட்டு மந்தைக்குள் பாய்வதைப் போல் தொண்டர்கள் மத்தியில் புகுந்து மிருகத்தனமாகவும், கோழைத்தனமாகவும் அவர்களைத் தாக்கத் தொடங்கியது. தொண்டர்கள் தூக்கப்பட்டு நிலத்தில் வீழ்த்தப்பட்டனர். அவர்களின் சுலோக அட்டைகள் பறிக்கப்பட்டு, அவைகளின் பிடிகள் அடிப்பதற்கு தடிகளாகப் பயன்படுத்தப்பட்டன. சிலர் கீழே தள்ளி உழக்கப்பட்டனர். உதைத்துத் தூக்கப்பட்டனர். அவர்கள் மீது காறி உமிழவும் செய்தனர்.

## நாகநாதனின் வீராவேசம்

இவ்வளவுக்கும் சத்தியாக்கிரகி எவரும் எதிர்ப்புக் காட்டி ஒரு கையைத்தானும் உயர்த்தவில்லை, டாக்டர் நாகநாதனைத் தவிர. டாக்டர் நாகநாதனை ஐந்து குண்டர்கள் தனிமைப்படுத்தித் தாக்கி மைதானத்தின் எல்லைவரை துரத்திச்சென்றனர். அவர் திரும்பி அவர்களை கைகளாலும், கால்களாலும் எதிர்கொண்டார். அவர்கள் பின்வாங்கி ஓடித் தங்கள் ஆட்களுடன் சேர்ந்துகொண்டனர்.

சத்தியாக்கிரகமோ இல்லையோ, டாக்டர் நாகநாதன் தனது ஆண்மையை எவரும் இழிவுபடுத்துவதை அனுமதிப்பதில்லை. அது அவரது பிறவிக்குணம்.

## வன்னியசிங்கத்தின் மனோபலம்

வன்னியசிங்கம் காந்திய தத்துவங்களிலும், நுட்பங்களிலும் அதிகம் ஈடுபாடு கொண்டவர். தனக்கு இழைக்கப்பட்ட அவமரியாதைகள் அனைத்தையும் மனோபலத்துடன் சகித்துக்கொண்டார்.' அவரை காலில் பிடித்து இழுத்துச் சென்றார்கள்.

**இனவாதத்தின் பயங்கரத்தை முதல் தடவையாக தமிழர்களுக்கு உணர்த்திய 1956 ஜுன் - 5**

அவருடைய மேல் சட்டையும் உள்பனியனும் கிழிந்து கந்தலாகின. மேலுடம்பில் ஒன்றுமில்லாமல் காணப்பட்டார்.

குண்டர்கள் முக்கிய தலைவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தித் தாக்கினார்கள்.

அறிவுறுத்தல் இருந்ததாலோ என்னவோ, செல்வநாயகம் மட்டும் அங்குமிங்கும் தள்ளப்பட்டாரே தவிர, அவர் மீது எவரும் கைவைக்கவில்லை.

பின்னர் பொலிஸார் வந்தனர். கலவரக் கும்பலை காலிமுகத்திடலில் இருந்து அப்புறப்படுத்தி திடலின் மத்தியிலிருக்கும் வீதிக்குக்கொண்டுபோய்விட்டனர்.

தாக்குண்டு களைப்படைந்திருந்த தொண்டர்கள் மீண்டும் ஒன்றுகூடி நாடாளுமன்றம் நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

அவர்களை ஊளையிட்டும், காறி உமிழ்ந்தும், அவர்கள் மீது கற்களை எறிந்தும் சிங்களக் காடையர்கள் அவமதித்தார்கள். போதாக்குறைக்குப் பெருமழை பெய்து தொண்டர்களை முற்று முழுதாக நனைத்து விட்டது.

## துறைமுகக் காடையர்கள்

இந்த நிலையில் கொழும்புத்துறைமுகத் தொழிலாளர்கள் வெளியில் விடப்பட்டனர். மத்தியானம் ஆனபொழுது முழு காலிமுக வீதியும் நாடாளுமன்றச்சூழலும் சுமார் ஒரு லட்சம் சிங்களவர்களால் நிரம்பிவிட்டது.

வீதியில் இனங்காணப்பட்ட தமிழர் எல்லோரும் அடித்து நொறுக்கப்பட்டார்கள்.

செல்வநாயகத்தின் புதல்வர்களான மனோகரன், வசீகரன் ஆகிய இருவரும் பிடிக்கப்பட்டு முரட்டுத்தனமாக பல தடவைகள் தூக்கி வீசப்பட்டனர். பல தமிழ்ப் பிரமுகர்கள் பிடிக்கப்பட்டு ஆடைகள் களையப்பட்டு, தாக்கப்பட்டார்கள். கொழும்பு நகரின் ஏனைய பகுதிகளுக்கும் வன்முறை பரவியது. வீதிகள், போக்குவரத்து வாகனங்கள், கடைகள், வர்த்தக நிலையங்கள் எங்கும் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள்.

## சிங்களத்தில் பிரசுரம்

நாடாளுமன்றப் படிகளில் சத்தியாக்



வன்னியசிங்கம்

கிரகம் நடைபெறும்போது, வெளியில் சிங்கள மக்கள் கூடினால் அவர்கள் மத்தியில் விநியோகிப்பதற்கென சிங்களத்தில் அச்சிடப்பட்ட 'திரவிட அபே ஆயச்சனய' (தமிழர்களாகிய எங்களின் கோரிக்கை) என்ற

**தமிழில் 'பேனா'**

தலைப்பிலான பிரசுரங்கள் என்னிடமிருந்தன. சிங்கள மொழிச் சட்டத்தை தமிழர்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதை அவர்களின் மொழியிலே விளக்கிக்கூறும் பிரசுரம் அது. இந்தப் பிரசுரங்களை எனது காருடன் எனது நண்பரும் சக தொண்டருமான எஸ். அழகரட்ணத்திடம் கொடுத்து முடிந்த அளவில் விநியோகித்து விடும்படி கேட்டிருந்தேன். காலி முகத்திடல் வீதியின் நடுவில் எங்கேயோ ஓர் இடத்தில் காரை நிறுத்தி அவர் பிரசுரங்களில் ஏறத்தாழ முக்கால் வாசியை விநியோகித்து முடித்திருந்த வேளையில் குண்டர்களால் கார் முற்றுகை இடப்பட்டு விட்டது. அந்தச் செயற்பாடும் அத்துடன் முடிவுற்றது.

## வீண் விரயம்

இன்று மீட்டுப்பார்க்கையில் சிங்களப் பொதுமக்களை அணுகி எமது நிலைமையை விளங்கவைப்பதென்பது காலம், பணம், முயற்சி ஆகியவற்றின் வீண் விரயமாகவே தென்படுகின்றது.

உறங்குபவனை எழுப்பிவிடலாம். உறங்குவது போல் பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், தமிழரசுக் கட்சி ஒருபோதும் சிங்களப் பொதுமக்களிடம் தமிழரின் நிலைப்பாட்டை அவர்கள் மொழியில் பொதுவாக விளக்கிக்கூறுவதற்கு எதுவித முயற்சியும் எடுக்கவில்லையென்று பல நண்பர்கள் அடிக்கடி கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அதனால்தான் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுத்தேன்,

சத்தியாக்கிரகிகளை பொலீஸார் காலி முகத்திடலின் வடக்கு எல்லையில் தடுத்து நிறுத்தி நாடாளுமன்றக் கட்டடத்தை நோக்கி அவர்கள் செல்வதைத் தடுத்துவிட்டனர். சத்தியாக்கிரகிகள் தடுக்கப்பட்ட இடத்திலேயே அமைதியாக அமர்ந்துவிட்டனர். அவ்வாறே அன்று முழுவதும் இருந்தனர்.

## தனிநாயக அடிகளாரும் பரனவிதானவும்

கொழும்பில் பிரபல்யமான ஒரு சிங்கள சட்ட நிபுணர் பரணவிதான. 'டி சில்வா அன் மெண்டிஸ்' சட்ட நிறுவனத்தைச் சேர்ந்தவர். அவரும் பிரபல தமிழ் அறிஞரும் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவருமான வண. பிதா சேவியர் தனி நாயக அடிகளாரும் அந்தக் கூட்டத்திலிருந்து வெளிப்பட்டு தொண்டர்களுடன் அமர்ந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்வு பத்திரிகைகளில் முக்கிய இடம்பெற்றிருந்தது.

கூட்டத்தினர் வீசிய கல் ஒன்று ஏ. அமிர்தலிங்கம் (வட்டுகோட்டை எம். பி.) தலையில் தாக்கிவிட்டது. பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருந்த நேரத்துக்கு சற்று முன்னதாக நாடாளுமன்றத்தின் படிகளில் பிரதமர் பண்டாரநாயக்கா தோன்றி கூடியிருந்த ஆர்ப்பாட்டக்காரரை நோக்கிப் பேசினார்.

வானத்தைப் பார்த்து அவர் மழை மீண்டும் வரப்போகிறது என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குளிர்ச்சியடைவார்கள் என்றும் கூறி சனங் களை அமைதியாக வீடுகளுக்குப் போகும்படி கேட்டுக் கொண்டார்.

## அமிர்தலிங்கம் தலையில் காயம்

சரியாக இரண்டு மணிக்கு நாடாளுமன்றம் கூடி சிங்கள மொழிச் சட்டம் தாக்கல் செய்யப்படவிருந்த வேளையில் வவுனியா எம். பி. சுந்தரலிங்கம், அமிர்தலிங்கத்தையும் அழைத்துக் கொண்டு நாடாளுமன்றத்துக்குள்

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)



தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு, தொடர் அரசியல் கட்டுரையாக 'சுடர்ஒளி' வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

நுழைந்தார்.

சிரிப்பொலியும், நையாண்டிமொழியும் அவர்களை வரவேற்றன. அமிர்தலிங்கத்தின் காயத்தை "போர்த்தழும்பு" என்று அரசதரப்பினர் கிண்டல் செய்தனர். இதற்கு சுந்தரலிங்கம் பதிலடிகொடுத்தார். சிங்கள சிங்கத்தைப்பற்றி ஏதோ குறிப்பிட்டு, தமிழ்ப் புலியைக் கண்டு அது தன் வாலை கால்களுக்கிடையில் சொருகிக்கொண்டு விட்டது என்றார் சுந்தரலிங்கம்.

## டாக்டர் இரட்ணம் செய்த உதவி

மாலை 5.00 மணிக்கு சத்தியாக்கிரகம் மீளப்பெறப்பட்டது., காயமடைந்திருந்த 18 சத்தியாக்கிரகிகளும், வி. என். நவரத்தினமும் கொம்பனித் தெருவில் உள்ள டாக்டர் இரட்ணம் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். வி. என். நவரத்தினம் காலில் படுகாயமடைந்திருந்தார். ஒரு தொண்டரின் காது கடித்துக் குதறப்பட்டிருந்தது.

மருத்துவமனையில் தொண்டர்கள் மிகுந்த அன்புடன் பராமரிக்கப்பட்டனர். அவர்களுக்கு நல்ல படுக்கை வசதிகள் வழங்கப்பட்டன, அவர்கள் பரிவோடு பராமரிக்கப்பட்டனர். மருத்துவ உதவி, சிகிச்சைகள் மட்டுமல்ல, உடைகளை இழந்திருந்த தொண்டர்களுக்கு புது உடைகளும் வழங்கப்பட்டிருந்தன. சிகிச்சைக்கான கட்டணத்தையோ, தொண்டர்களுக்கு வழங்கிய உடைகளுக்கான பணத்தையோ பெற்றுக்கொள்ள டாக்டர் ராஜதுரை ரட்ணம் மறுத்துவிட்டார். அந்த இளம் டாக்டரின் செயற்பாடு என் உணர்வுகளை வெகுவாகத் தொட்டிருந்தது.

இவ்வாறுதான் தமிழ் மக்கள், சிங்கள கும்பல்களின் இனவிரோத வன்முறையின் தாக்கத்தை முதல்தடவையாக அனுபவித்திருந்தார்கள். அது முன்பு கண்டிராத எதிர்பார்க்காத ஓர் அனுபவமாக இருந்தது. சிங்களவர்கள் ஒரு மக்கள் சமுதாயம் என்ற முறையில் அரசியல் காரணங்களுக்காக இவ்வாறு வன்முறை மூலமாக அச்சுறுத்தல்களில் இறங்குவார்கள் என்று தமிழர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியில் சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலம் சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றித்து வாழ்ந்திருந்தார்கள். இன உறவில் ஒரு விரிசல் ஏற்பட்டதற்கான ஒரு சந்தர்ப்பம் கூட இருக்கவில்லை. மாறாக ஒருவித சகோதரத்துவம் இரு பிரிவினருக்குமிடையில் நிலவியிருந்தது.

அரசியல்வாதிகள் தங்களுக்குள் உரிமைகள் மற்றும் நலன்கள் பற்றி வாதிட்டிருக்கலாம், ஆனால், இருதரப்புப் பொதுமக்களும் மிக அமைதியுடன் வாழ்ந்து வந்திருந்தனர்.

(தொடரும்)




## இளமை ஊஞ்சலாடும் இணையத் தளங்கள்



பொழுது போகவில்லை. இணையத்தளங்களில் உலாவந்து கொண்டிருந்த போது என்னிடம் 'வாங்க' என்று ஒரு அழைப்பு மின்னியது. இலவச அழைப்பை சும்மா விடலாமா? அழைப்பை'கிளிக்' செய்தபோது அரை குறை ஆடைகளுடன் அழகாக 'மொனிட்டரின்'முன்நின்றது அழகு மயில் ஒன்று.

பாவித்த உள்ளாடைகளுக்கான விளம்பரம் அது. நான்கு வாங்கினால் ஒன்று இலவசம் என்றொரு அறிவிப்பை இடை இடையே வீசிக் கொண்டிருந்தாள் அந்த ஆரணங்கு. சிறிதுநேரம் அந்த உள்ளாடைகளைக் கண்கள் மேய்ந்துகொண்டு இருந்தன. வாங்க வேண்டும் போல் இருந்தது. இங்கிருந்துகொண்டு எப்படி டாலர் களைக் கொடுத்து வாங்குவது? முடியாதே!

தொடர்ந்து கிளிக் செய்துகொண்டிருக்க எஸ்கோட் சேவிஸ் ( Escort service) என்றொரு அறிவிப்பு குறுக்கிட்டது. அது என்ன( Escort) என்று கேட்கிறீர்களா? பிரயாணத்தின்போது துணையாகப் போவது, பாதுகாப்பளிப்பது, வழிகாட்டுவது. இவைதான் Escort க்கான தமிழ் மொழி பெயர்ப்பு.

இது என்ன சேவிஸ் (service) என்று யோசித்தவாறு கிளிக் செய்தபோது, இதோ இவள் கண்ணெதிரே தோன்றினாள், கனி முகத்தைக்காட்டினாள். காட்டியதுடன் நின்றாளா? தன்னைப்பற்றிய விவரங்களை இப்படிக் கொடுத்திருந்தாள்.

எனது பெயர்(ஏய்ஸ்) நான் தமிழச்சி, இப்போது மும்பையில் இருக்கிறேன்.இரவில் உங்களுக்கு எப்போதும் துணையாக இருப்பேன். எனது சேவைக்கு முழு உத்தரவாதம் தருகிறேன். மறக்க மடியாத அனுபவம் தேவை என்றால் என்னை 'புக்' பண்ணிக் கொள்ளுங்கள். எனக்குத் தரகர்கள் கிடையாது. 'என் வழி தனி வழி' என்றவள் தொடர்ந்து:-

என்னைப் பற்றி மேலதிக விவரம் வேண்டுமா? என் போட்டோக்கள் வேண்டுமா? இதுதான் 'வெப் சைட்' அங்கே வந்து பாருங்கள் என்ற தகவலையும், கூடவே ஒரு முகவரியையும் தந்தாள்.

அவள் தந்த வெப்சைட்டுக்குப் போய்ப் பார்த்தால் முகத்தை மட்டும் மறைத்து, காட்ட வேண்டிய அழகுகளை மட்டும் காட்டும் படங்களைத் தாராளமாகத் தந்தாள்.

படங்களைத் தந்தவுடன் நிற்கவில்லை எப்படி எனது அழகு? எப்போ நேரில் சந்திக்கிறீர்கள்? என்றும் கேட்டுக்கொண்டாள்.

இது முடிந்த காரியமா? என்று மனம் குறு குறுக்க கம்பியூட்டரை, Shut Down செய்துவிட்டு எழுந்துவிட வேண்டி இருந்தது வேறு அவசர வேலைகள் இருந்ததால். எப்படி இருக்கிறது வெப்சைட்த் தகவல்? உங்களுக்கும் அவளைப் பார்க்க ஆவலாக இருக்கிறதா?

## மரக்கறி அரக்கி



வெண்டைக்காயைத் துண்டு துண்டாக வெட்டி முகத்திலே ஒட்டி இருக்கும் இவர், வெண்டைக்காய்த் துண்டுகளால் மூக்குத்திகளும் போட்டிருக்கிறார். மேலும்- வெள்ளை நிற முள்ளங்கியால் தலையை அலங்கரித்திருக்கிறார்.வாழைப் பூவின் மடல் நாக்காகத் தொங்குகிறது. இவற்றுடன் வாழைப் பூக்களையும் கோத்து மாலையாக அணிந்திருக்கும் இவரை மரக்கறி அரக்கி என்று அழைக்கிறார்கள்.இதுவும் ஒரு சோடனைதான். போங்கள்.

## கலைஞர் இளமை



கலைஞர் கருணாநிதிக்கு வயது 82. இன்னும் இளமைத் தோற்றத்தோடு பொலிவாக இருக்கிறார். நான் தினமும் யோகா பயிற்சி செய்கிறேன். அதனால்தான் இன்னும் இளைஞனாக இருக்கிறேன் என்று கூறிச் சிரிக்கிறார் கலைஞர்.

அதிகாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் எனது இந்தப் பயிற்சி, காலை 7 மணி வரை நீடிக்கும். அதனால் நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க முடிகிறது என்றும் தனது இளமை பற்றி மேலதிகத் தகவல் தருகிறார் அவர்.

## பல்லால் சாதனை



பெண்கள் பலவீனமானவர்கள், என்று சொல்வார்கள். ஒரு பெண்ணுக்கு 71 வயது என்றால் எப்படி இருப்பாள்? படத்தில் இருக்கும் சீனப்பெண்ணான வேங்க் தனது 71 வயதில் பல்லால் கார் ஒன்றை இழுத்து சாதனை படைத்துள்ளார்.

ஒரு தொன்னுக்கு மேல் நிறை உள்ள காரை கயிறு கட்டி, தனது பற்களால் 65 அடி தூரம் இழுத்ததே இவரது சாதனை. இதற்கு 30 வருடங்கள் பயிற்சி செய்தாராம். தனது சாதனையை வெற்றிகரமாக முடித்ததும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்திருக்கிறார் இவர்.

25 கிலோ நிறையுள்ள தண்ணீர் வாளியை பற்களால் கடித்துத் தூக்கியது மட்டுமின்றி, ஒரு சைக்கிளையும் பற்களால் கடித்துத் தூக்கி மற்றும் சில சாதனைகளையும் படைத்துள்ளார் வேங்க்.

## கல்யாணம் நம் கல்யாணம்



படத்தில் இருக்கும் இருவரும் அமெரிக்க இளம் பெண்கள். ஆன்னி,ரோஸா என்பது இவர்களின் பெயர்கள். இருவரும் ஒருவரை ஒருவர் சட்டப்படி திருமணம் செய்திருக்கிறார்கள். அமெரிக்காவில் சில [illegible] திருமணத்திற்கு அனுமதி உண்டு.

## பின்னழகு



ஹங்கேரி நாட்டில் கவர்ச்சி அழகிகளின் செக்ஸ் காட்சி நடந்தது. ஒய்யார அழகிகள், ஆடையுடனும், ஆடை இல்லாமலும் வந்து இரண்டாயிரம் பேர் முன்னிலையில் செக்ஸ் காட்சிகளை அரங்கேற்றினர்.

மாயா கோல்ட் என்ற இந்த அழகி 'பின்னழகி' எனப்பெயர் பெற்றவள். அவள் ஆசனத்தில் அமர்ந்து ரசிகர்களின் ஆட்டோகிராப்களில் கையெழுத்துப் போட்டாள்.

அப்போது குறும்புக்கார புகைப்படக் கலைஞர் ஒருவர் அவளது பின்னழகைக் கிளிக் செய்துவிட்டார்.

பொரித்த 'புல்ஸ்ஐ' (Bull's Eye) முட்டையை ருசித்து இருப்பீர்கள். அவுஸ்திரேலியாவில் இடம் பெற்ற கடற்கரைக் கண்காட்சி ஒன்றில் அவுஸ்திரேலிய கலைஞர் ஒருவர் கண்ணாடி நூலிழை மற்றும் நவீன பெயின்ட் ஆகியவற்றை உபயோகித்து மணலின் மேல் உருவாக்கிய 'புல்ஸ் ஐ' பொரியல் தான் இது.



# வேலியே பயிரை மேய்ந்தால்....

வேர்க்க விறுவிறுக்க யாரோ லயத்தை நோக்கி விரைந்து வருவது, நாய்க்குச் சோறு வைத்துக்கொண்டிருந்த மாரியாயிக்குத் தெரிந்தது. ஒரே மூச்சில் சாப்பிட்டு முடித்த நாய், ரோட்டை விட்டு ஏற்றத்தில் விரைந்து வருபவரை நோக்கிக் குரைத்தது.

'யாரது?.. ஆறுமுகத்தோட மகன் சிவலிங்கம் இல்லை..' அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவளருகில் வந்து விட்டான்.நாய், குரைப்பைக் குறைத்துப் பின்வாங்கியது.

"ஆத்தா... நம்ம சந்திரசேகரன்"- அவன் குரல் ஏதோ அசாதாரணமாகப் பட்டது மாரியாயிக்கு. பதற்றத்துடன், "ஏன்டா முழுங்கிறே என்னான்னு சொல்லித் தொலையேண்டா.." என்றாள்.

சிவலிங்கத்துக்கு மூச்சிரைத்தது. வியர்வையைச் சாரத் தலைப்பினால் துடைத்துவிட்டு, "நம்ம சந்திரசேகரனை பொலிஸில பிடிச்சிக்கிட்டு போயிட்டாங்காத்தா..."

பெற்ற பாசம் துடித்தது." எதுக்குப்பா? என்ன குத்தம் பண்ணினான் எம் மவன்?... ஐயோ பாவி, உடம்பெல்லாம் பதறுதுடா.."

"உம் புருசன் முனியாண்டி மாமா இருக்கிறாரில்ல...." மீண்டும் மூச்சிரைக்க, திக்குவாய் போல இடைநிறுத்தினான் சிவலிங்கம்.

"ஆமாம்... அந்தக் குடிகாரனுக்கு என்ன ஆச்சு? என்ன பண்ணினான் என் பிள்ளய?"

"பெத்த அப்பனையே கவ்வாத்துக் கத்தியால் வெட்டிக் கொலை செஞ்சிருக்கிறான் உம் பிள்ள சந்திரசேகரன்..."

சிவலிங்கம் சொல்லி முடியமுன்னே மாரியாயி ஒப்பாரி வைக்க ஆரம்பித்துவிட்டாள்.

"ஐயோ என்ர மவராசனே... என்ன பண்ணினேன்னு இப்படிச் செஞ்சான்?" தலையிலும், நெஞ்சிலும் அடித்துக் கொண்டாள்.

போட்டது போட்ட படியே தலைவிரி கோலமாக என்னென்னவோ சொல்லி அழுது குளறியபடி அவள் ஓடுவதைப் பார்த்த அவள் நாயும் அவள் பின்னால் ஓடியது.

சம்பவம் நடந்த மலை இறக்கத்தை அடைந்த மாரியாயியிடம், "உன் புருசன்... ஊரை எல்லாம் கூட்டிக் கொடுத்தவன்... சீ... கேவலம் இப்படியும் செய்வானா?... உன் மவன் செஞ்சது சரிதான்" என்று கூறினார் வேலுக்கிழவர்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் "ஐயோ கடவுளே.. என்ன கொடுமை!" எனக் கதறினாள் மாரியாயி.

ஓ... காவேரியைப் படிக்க வைத்து ஆசிரியையாக்க வேண்டுமென அண்ணன் சந்திரசேகரன் கண்ட கனவுகள்... சின்னஞ்சிறு பராயத்து நிகழ்வுகள்.... நினைவுகள்

--❖-- ---❖--- ---❖--- ---❖--

வானம் இன்னமும் இருட்டாகத் தானிருந்தது. கனத்த மழை பெய்து இப்போதுதான் ஓய்ந்திருந்தது. நனைந்திருந்த மரத்தில் இருந்த காகம் உடலைச் சிலுப்பிவிட்டு கத்தியபின் பறந்து போனது. காவேரிக்கு அந்தக் காலைப் பொழுதில் எல்லாமே அழகாகத்தான் இருந்தன. உலகமே அழகாகவும், அமைதியாகவும் இருக்கும் பிரமையில் பார்வையைப் படர விட்டாள்.

"என்ன பாடு பட்டாவது காவேரியைப் படிக்க வைப்பேன்..." இரவு அம்மாவிடம் அண்ணன் கூறிய வார்த்தைகள் தேனாக இனித்தன. வரண்ட நிலப்பரப்பில் குளிர்ந்த காற்றின் வீச்சை கண்டதால் தளர்வு கண்ட மனம் இளகிச் சந்தோஷத்தில் துடித்தது. இனம் கண்டுகொள்ள முடியாத ஆனந்த அலையான உணர்வுடன், மலையடிவார கல்லூரியில் கால் பதிக்கும் கனவில் மிதந்தாள் காவேரி.

"பொட்டச்சிக்குப் படிப்பு எதுக்கு? நாலெலுத்து எழுத வாசிக்கத் தெரிஞ்சா போதாதா?"

"இருக்கிற கஷ்டத்தில இது வேற தேவையா?.... படிப்பு செலவுன்னா சும்மாவா?"

"தோட்டப் பள்ளிக்கூடப் படிப்பு பொம்பளைப் பிள்ளைக்குக் காணும்... வீட்டில நின்னு குழந்தையப் பார்க்கலாம்."

"வீட்டு வேலைக்கு அனுப்பினா நாலுகாசு கிடைக்கும். கொழும்பில ஒரு வீட்டுக்கு அனுப்பலாம்..."

அவள் ஐந்தாம் ஆண்டு சித்தியடைந்தவுடனேயே இத்தனை விமர்சனங்கள் வீட்டிலும் வெளியிலுமாய்! காவேரிக்கு என்னவோ படிக்க வேணுமென்று ஆசை... எனவே அவளுக்கு இப்படியானவர்கள் மீது சீற்றம் ஏற்படும். தையல் ஊசி நூல் கொண்டு இப்படியானவர்களின் உதடுகள் இரண்டையும் தைத்து எல்லோரையும் மௌனத்தில் திணிக்க வேண்டுமென்ற வெறி அந்தப் பிஞ்சு உள்ளத்திலே தோன்றியது.

நல்ல வேளை, அண்ணன் சந்திரசேகரன் அவளுக்கு வக்காலத்து வாங்கி அனைவரின் வாயையும் கூரிய ஊசி இன்றியே மௌனமாக்கி விட்டான்.

அண்ணனுக்குப் பதினெட்டு வயதுதான். குடியே கதியென்று குறுகிப்போய் விட்ட அப்பாவால் குடும்பத்துக்கு எதுவித பலனும் இல்லையென்ற நிலையில் அண்ணன் சந்திரசேகரன் பாதியிலே படிப்பை முடித்து, குடும்பத்திற்காய் அம்மாவுடன் சேர்ந்து சிலுவை சுமக்கிறான். மலையிலே வேலைக்குப்பதிய வயது வர முன்னரே,



ச.முருகானந்தன்

மலையடிவார சிங்களவரொருவரின் கடையிலே சிறுவர் சமவாயம் குறித்த வயதுக்கு முன்னரே சிப்பந்தியாகிவிட்டான். மாரியாயியும் மலையிலே கொழுந்தெடுத்து மாடாய் உழைத்துக் கொண்டிருந்தாள்.

வீட்டின் செலவுக்கு முக்கிய வருவாய் அண்ணனிடம் இருந்து என்பதால் இங்கு அவன் வைத்ததே சட்டம். அப்பா வெறியில் கூச்சல் போட்டு விட்டு அடங்கிப் போய் விடுவார். தன் உழைப்பைக் குடிப்பதுடன் அம்மாவிடமும் பறித்துக் குடிக்கும் அவரது அட்டகாசங்கள் எல்லாம் அண்ணன் தலையெடுத்ததுடன் படிப்படியாக ஒடுங்கி விட்டன.

இதனால் இப்போது காவேரி கல்லூரி மாணவியானாள். காவேரி படிக்கத் தொடங்கியதும் வீட்டுச் செலவு அதிகரித்தது. இலவசக் கல்வி என்று பெயர்தான். புத்தகமும், சீருடையும், தருகிறார்கள். கல்விக்குக் கட்டணம் இல்லாவிட்டாலும், ஏழைக்குடும்பங்களால் இதர செலவுகளைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை.

சந்திரசேகரனுக்கு, தான் படிக்க முடியாமல் போனதில் கவலை. அந்தக் கவலையை ஈடு செய்ய காவேரியைப் படிக்க வைக்கிறான். ஏனைய தம்பி தங்கைகளையும் படிக்க வைத்திட வேண்டும் என்ற வைராக்கியம் அவனிடமிருந்தது . கல்விதான் மனிதனை முழுமையானவனாக்குகிறது, எதிர்காலத்தை சுபீட்சமாக்குகிறது என உறுதியாக நம்பினான். சிங்கள சமூகத்திலே பெண்களும் கல்வி கற்றதனால், அவர்கள் முன்னேறியிருப்பதைக் கண்ணால் கண்ட அவனுக்குக் காவேரியை படிப்பித்து எப்படியும் ஓர் ஆசிரியையாக்கிட வேண்டுமென்ற அதீத ஆசை! பெருந்தோட்ட தொழிலாளியின் பிள்ளைகளும் கொழுந்தெடுக்க வேண்டும் என்ற கபட நோக்கில் அவர்களுக்குக் கல்வியை மறைமுகமாக மறுத்துநிற்கும் ஆட்சியாளர்களையும், அவர்களுக்கு தமது பதவிகளுக்காக துணைபோகும் அமைச்சர்களையும், தொழிற் சங்கவாதிகளையும் அவன் வெறுத்தான்.

கொழுந்தெடுக்க பெயர் பதியும் வயது வந்ததும், படிப்பைக் கைவிட்டு, அனைவருமே தோட்டத் தொழிலாளிகளாக மாறுவதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. [illegible] வர்கள் படித்து முன்னேற [illegible] ச்சியார் கூறியது அ[illegible] சந்திர[illegible] பதியும் [illegible] இருந்து[illegible] அதிகா[illegible] சம்ம[illegible] களின்[illegible] முதல[illegible] வழ[illegible] சிப்[illegible] அவ[illegible] ம[illegible] போ[illegible]

வரும் வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய அது போதாமலிருந்தது. காவேரி சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர் வகுப்புக்கு வந்த போது செலவு இன்னமும் அதிகரித்தது. மேலும், ஏனைய சகோதரர்களும் மேல் வகுப்புக்கு வந்து விட்டதால், பற்றாக்குறை நிலவியது.

அம்மாவும் அவனும் தினமும் காலையில் எழுந்து மலைக்குப் போகவேண்டியிருப்பதால் அதிகாலையிலே அடுப்படி கலகலக்கும். காவேரியும் அரக்கப் பரக்க பாடசாலைக்கு வெளிக்கிட்டுக் கொண்டிருப்பாள். அவர்கள் மலையேறித் தேயிலைத் தோட்டத்திற்கு விரையும்போது, அவள் மலையிலிருந்து இறங்கி பாடசாலைக்கு விரைவாள். அவளது படிப்பிற்காக வீட்டில் அண்ணனும், அம்மாவும் படும் கஷ்டத்தை அறிந்து அவளும் கவனமாகப் படித்தாள்.

வழக்கம் போல் அம்மா அதிகாலையிலே எழுந்தபோது வானம் மழைவரும் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது. லயத்துக் கூரைத் தகரங்களும் உக்கிப்போய் இருந்தன. கடந்த ஒரு வார அடை மழையில் வீடு ஒழுகிக் கொண்டிருந்தது. பல சமயம் இவ்வாறு வானம் இருண்டிருப்பதைப் பார்த்து மழை வருமென நம்பி ஏமாந்திருக்கிறாள். மழையோ, பனியோ, வெய்யிலோ மலைக்கு வேலைக்குப் போகாதுவிட்டால் அடுத்தநாள் அடுப்பு புகையாது.

சந்திரசேகரன் குறட்டைவிட்டு தூங்கிக் கொண்டிருந்தான். காவேரியும் குளிரில் குன்றிப்போய் தூங்கிக் கொண்டிருந்தாள். மகளைத் தட்டி எழுப்பினாள் "எடீ காவேரி நேரமாச்சு... பள்ளிக்கூடம் போகவில்லையா?"

காவேரி எழுந்து சுறுசுறுப்பானாள்.

சந்திரசேகரனை எழுப்பவில்லை "பாவம்... அவன் என்ன பண்ணுவான்? பொழுதெல்லாம் மலையில மாடா உழைக்கிறான். தோட்டவேலை முடிச்சப்புறம் ராவில லொறிக்கு கொழுந்து மூட்டை, தேயிலைப் பெட்டின்னு தூக்கிப் போடுறான். காலையில தூங்காமல் என்ன பண்ணுவான்..." அம்மா தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டு ரொட்டி தட்டிக் கொண்டிருந்தாள். காவேரியும் சிறிது நேரம் அம்மாவுக்கு ஒத்தாசை புரிந்துவிட்டு பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமானாள்.

சாப்பாட்டு பெட்டிகளில் ரொட்டியை வைத்துவிட்டு "ஏம்பா சந்திரசேகரா, மலைக்குப் போறேன், சுருக்கா எந்திரிச்சுப் [illegible] வைச்சிருக்கேன் [illegible]ீர்" என்றபடி [illegible] நான் வரேன்.." [illegible]பவும் படுத்துக் [illegible] மாரியாயிக்கு [illegible] பிள்ளைகள் [illegible]ப்பட்டிருந்த [illegible]றுதலில்லை. [illegible]ட்டு வந்த [illegible] பிள்ளைகள் [illegible]மின்றி ராத்திரி [illegible]ு அவளைப் [illegible] எப்படித்தான் [illegible] உறைக்க மாட்டேங்குதே' என்று சலித்துக் கொண்டாள் மாரியாயி.

அவள் மலையேறிக் கொண்டிருந்த போதே வானம் இருட்டிக் கொண்டு வந்தது. 'காவேரி குடை எடுத்துக் கொண்டு போனாளா?.. ம் நானும் சாக்கு எடுத்து வரவில்லையே நனையனுமென்னா நனைஞ்சுதானாகனும். அதையும் நனைச்சிட்டா ராத்திரிக் குளிரில எப்படி நான் தாங்கிறது?'

சில் என்ற காற்று அவள் உடம்பைத் தழுவியது. நாற்பது வயதைத்தாண்டிவிட்ட மாரியாயி அந்தக் காலைப் பொழுதில் கவ்வாத்துச் செய்யப்பட்டு துளிர்க்காத தேயிலைச் செடி போல் தோற்றமளித்தாள்.

அவள் நடந்த வழியெங்கும் தேயிலைச் செடிகள் வரிசை வரிசையாக துளிர்த்து நின்றன. காலைப் பொழுதின் இரைக்காய் பறவைகளினதும், வண்டுகளினதும் புளங்காகிதமான ஓசையானது மாரியாயின் நினைவுகளுக்குத் தூபமிட்டன. முனியாண்டி திருமணமான புதுதில் இனிப்பாய்த் தானிருந்தான். மாரியாயியே உசிருன்னு இருந்தவன், எப்படித்தான் மாறினானோ தெரியாது. அவனுக்கு வைப்பு நிறையப்பேர் இருப்பதாக அவ காதிலையும் விழுந்திச்சு. ஆனாலும் தட்டிக் கேட்டால் சண்டப்பிரசண்டன் ஆனான். அவனை அவன் போக்கிலையே விட்டுப் பிடிப்பதைத் தவிர வேறு வழியே மரியாயிக்கு இருக்கவில்லை. அப்புறமாய் அவன் அதிகமாய்க் குடிக்க ஆரம்பித்து விட்டான். தரகு வேலை செய்வதாகவும் காதில் விழுந்தது. பெருந்தோட்டச் சிறுவர்களை நகர்ப்புற வேலைக்குன்னு அனுப்ப ஆரம்பித்தவன், அப்புறமாய் தோட்ட அலுவலர்களுக்கும், மலையடிவாரக் கிராமத்து சல்லிக்காரருக்கும் கூட்டிக் கொடுக்கும் வேலையிலும் ஈடுபட்டான். மாரியாயி எவ்வளவோ எடுத்துச் சொல்லிலும் அவன் கேட்கவில்லை.

வீட்டில் கொஞ்சம் அதிகமாக பணம் புரள ஆரம்பித்ததும் மாரியாயி அடங்கிப்போனாள். எனினும், குடித்துவிட்டு வந்து அவன் அடிக்கும் கும்மாளத்தில் குழந்தைகள் கலங்கிப் போய் விடும். சில சமயங்களில் சிறுசுகள் என்றும் பாராமல் அடிப்பான். காலப் போக்கில் அவன் உழைப்பில் மீதமிருக்கவில்லை.

சின்ன வயசிலிருந்தே சந்திரசேகரனுக்கு அப்பா பேச்சு எடுத்தாலே பிடிக்காது. தாயுடன் சண்டைக்கு வருவான். "நீ திறமில்லாததாலேதான் இந்தக் குடும்பம் இப்படி சீரழிஞ்சு போச்சு. குடிச்சிட்டு கூத்தி கிட்டப் போயி வாறவனுக்கு மீனும், கருவாடுமா காச்சி வைப்பே. தாழ்ப்பாள் போட்டு வெளியே விட்டு வயிறு காயவைக்கத் தெரியாது... சே கருமாதி அவன் தான் உனக்குப் பெரிசு... கல்லானாலும் கணவன்... புல்லானாலும் புருஷன் இன்னும் எத்தனை காலம்? உலகத்தில பொம்பிளைங்க ஆம்பிளைங்களுக்கு நிகரா உயர்ந்திட்டிருக்காங்க. நம்ம சாதியில மட்டும் சாபக்கோடாய், இன்னமும் அடிமையாய்.... சீ..... பொம்புளைன்னா அதுக்கு மட்டும்தானா?" ஒரு தாயிடம் பேசும் பேச்சா இது என மனதுக்குள் குமுறுவாள் மாரியாயி.

பாவம் அவனும் தான் என்ன செய்வான். குடும்பச்சுமை முழுக்க சின்ன வயசிலேயே அவன் தலையிலேதானே? மாத்தி சாரம் கட்ட வழியில்லாம ஒண்ணையே கட்டுறான்.

(21ஆம் பக்கம் பார்க்க)

# வேலியே பயிரை மேய்ந்தால்....

20ஆம் பக்கத் தொடர்ச்சி...

'வயசுப் பிள்ள வயிறாற திங்க வழியில்ல. இந்த நிலையிலும் தன்னை கற்பூரமாக்கி, தன் உடன்பிறப்புகளை உயரவைக்கப் பாடுபடுகிறான்..' மாரியாயின் மனது பெருமூச் செறிந்தது.

சின்ன வயசிலிருந்தே சந்திரசேகரன் முரட்டுப் பிள்ளையாக வளர்ந்து வருவது மாரியாயிக்குச் சங்கடமாக இருந்தது. "ஏலேய்.... இந்த சிடுமூஞ்சித் தனத்தைக் கொஞ்சம் குறைச்சுக்கடா......''என்பாள்.

"எனக்குத் தெரியும்..... நீ உன்னுடைய வேலையைப் பாரு'' 'என்பான். தலைக்கு மேல் வளர்ந்த பிள்ளை. அவள் அழுவாள். ஆனாலும் அவனுக்கு அம்மா மேலே அளவில்லாத பாசம் என்பதை அவள் அறிவாள். ஆனாலும் மறந்தும் அப்பன் பேச்சை எடுத்தால் ஆவேசமாகிவிடுவான்.

"அம்மா அந்த கேடுகெட்டவரைப் பற்றி என்கிட்ட பேசாதே... என் அப்பன்னு சொல்லவும் வெட்கமாயிருக்கு..."

ஆசைமகன் ஆவேசமா, அழுத்தமா பேசறப்போ மாரியாயிக்குக் குலை பதறும். "சந்திரசேகரா மவனே பதட்டப்படாதேயடா நீ எடுத்தோம் கவிழ்த்தோம்னு பேசுறது. சரியில்லேப்பா''மாரியாயி பயந்து கொண்டே சொல்வாள்.

"அம்மா இப்படிச் சொல்லிச் சொல்லித் தானேயம்மா என்னை அடக்கி வைச்சிருக்கே. நீ அவருக்குப் பயந்து தினமும் செத்துக் கொண்டிருக்கிறது போதாதென்னு என்னையும் பயப்படுத்திறியே... நாம குனியக் குனிய எங்கப்பன் குட்டிக்கிட்டிருக்கான்... பொறுமையாயிருக்கச் செல்றே. ஊர்க்காரன் எல்லாம் கொதிச்சுக்கிட்டிருக்கான்... எதுக்கும் ஒன்னு கேட்டுக்க.... செத்தா மயிராச்சு... என்னைக்கென்னானாலும் அவர் தலை தோட்டக் காட்டில உருளும்... அப்ப பாத்துக்கோ..."

மாரியாயி வாயடைத்துப் போவாள்.

"இப்பவே இரண்டில ஒன்னு பாத்திட்டு சிறைக்குப் போயிடுவன்.. என் கூடப் பிறந்ததுகளும், நீயும் கஷ்ரப்பட்டுப் போவீங்க..'' சந்திரசேகரனின் பாசம் கோபத்தை வெல்லும். அவள் நிம்மதிப் பெருமூச்சு விடுவாள்.

காவேரியும் சிறப்பாகப் படித்து உயர்தரப் பரீசையில் பாசாகியிருந்தாள். நேற்றுத்தான் முடிவு வந்தது. தங்கச்சி பட்டதாரியாகப் போறான்னு நேற்று முழுவதும் சொல்லிப் பெருமிதப்பட்டுக் கொண்டிருந்தான்.

இன்னிக்கு இந்தக் கொடூரம்!

0 0 0 0 0 0

மாரியாயி அங்கு சென்ற போது பிரேதம் மருத்துவப் பரிசோதனைக்காக மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதை அறிந்து, அழுதபடி விரைந்தோடினாள்.

அங்கே மரண விசாரனை நடந்து கொண்டிருந்தது. காவேரி விறைத்துப்போய் நின்றாள். மரியாயி ஓடிப்போய் அவளைக் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைத்து அழுதாள் "என்ர மகராசன் போயிட்டாரே"

தாயை விசுக்கென்று விலக்கினாள் காவேரி.

"இந்தக் கேடுகெட்ட மனுசனுக்காக அழாதே. பெத்த மகளையே தந்திரமாய் ஒரு காமுகன்கிட்ட கூட்டிக்கொடுத்த பரதேசி.... அண்ணன் செய்தது சரிதான். விளக்கம் முடிஞ்சுது... வா.... வீட்டுக்குப் போகலாம்."

"சவத்தைக் கொண்டுபோய் கருமாதி செய்யனுமேடி..'' மரியாயி கலங்கினாள்.

"ஒன்னும் தேவையில்ல, அரசாங்க கணக்கில ஆஸ்பத்திரி மூலம் அடக்கம் செய்யட்டும்...வா... அண்ணனைப் பிணை எடுக்கிற வழியைப் பார்ப்போம்'' காவேரி விறு விறுவென நடந்தாள்.

"அவர் முகத்தையென்னாலும் ஒரு தடவை பாத்திட்டு வாரேனடி..." மாரியாயின் கண்கள் சொரிந்தன.

"போய் பாரு. அப்புறம் என்கூட வராதே."

என்று கூறிவிட்டு நடக்கத் தொடங்கிய காவேரியைப் பின் தொடர்வதைத்தவிர வேறு மார்க்கம் மரியாயிக்கு இருக்கவில்லை.


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| | | |


# ராசி பலன்

**மேடம்: அச்சுவினி, பரணி,கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் ராசியில் இருக்க அதை சனியும், குருவும் பார்க்கின்றனர். நன்மையும், தீமையும் கலந்த பலனை எதிர்பார்க்கலாம். இருப்பினும், சுக்கிரன் நட்சத்திரத்தில் இருப்பது ஓரளவு ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும் முதலீடுகளால் லாபம் இருக்கும். (2,7) உரிய சுக்கிரன் 9ல் நல்ல பலனைத் தருவார். கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. (3,6) உரிய புதன் 7ல் நல்ல பலன் செய்யமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லையுண்டு. வழக்குகளில் பாதிப்பு ஏற்படலாம்.4ல் சனியை சுக்கிரன் பார்ப்பதால் வாகன சுகம் உண்டு, தாய் நலம் (9,12) உரிய குரு 7ல் இருப்பது பிதாநலம், சயன சுகம் உண்டு. தொழிலுக்குரிய சனி 4ல் இருப்பது நல்லதல்ல.

**இடபம்:கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 8ல் நல்ல பலனைச் செய்வார். மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். கோட்டு வழக்குகளில் வெற்றி கிட்டும். (2,5) உரிய புதன் 6ல் நல்ல பலனைச் செய்வார். கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 4லுக்குரிய சனி 7ல் நல்ல பலனைச் செய்யமாட்டார்.வாகன சுகம் இருக்காது. (8,11) உரிய குரு 6ல் இருப்பது கூடாது. முதலீடுகளால் லாபம் குறையலாம். நண்பர்களுக்குக் கூடாத காலம். (9,10) உரிய சனி, 3ல் நல்ல பலனைத் தருவார். தொழில் துறை முன்னேற்றம் இருக்கும். பிதாநலம், பிரயாண வாய்ப்பு உண்டு.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 5ல் இருப்பது சிறப்பானது. மேலும், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். வாகன சுகம் உண்டு. தாய் நலம், வீடு, காணி அமைய வாய்ப்பு உண்டு. இரண்டில் சனி இருந்தாலும், சுக்கிரனைப் பார்ப்பதால் கையில் பணம் இருக்கும்.(5,12) உரிய சுக்கிரன் 7ல் நல்ல பலனைத் தரமாட்டார். பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தராது. சயன சுகம் இருக்காது. (6,11) உரிய செவ்வாய், 11ல் ஆட்சியாக இருப்பது விசேஷம். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர், நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (7,10) உரிய குரு 5ல் இருப்பது சிறப்பானது. திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசி நாதன் சந்திரன் மேடம் முதல் மிதுனம் வரை சஞ்சரிப்பார். வார முற்பகுதியிலும், மத்திய பகுதியிலும் நல்ல பலனைத் தருவார். ராசியில் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பது கூடாது. ஆனால், சுக்கிரன் பார்ப்பது சிறப்பானது. இவ்வாரம் சமசுகமான காலம். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சனி 5ல் இருப்பது கையில் பணம் இருக்காது. (3,12) உரிய புதன் 4ல் நல்ல பலனைத் தரமாட்டார். சயன சுகம் இருக்காது. ஆற்றல் இருந்தும் செயலில் காட்ட வாய்ப்பு இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் 6ல் நல்ல பலனைத் தரமாட்டார். தாய்க்கு உடல் நலக் குறைவு ஏற்படலாம். நண்பர்களுக்கு சோதனைக் காலம். வாகன சுகம் இருக்காது. (7,8) உரிய சனி ராசியில் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசி நாதன் சூரியன் நாலில் இருப்பது நல்லதல்ல. இருப்பினும், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியம் தாமதமாகலாம். மன அமைதி பாதிக்கலாம். (2,11) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. (3,10) உரிய சுக்கிரன் 5ல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். தங்க ஆபரணங்கள் சேரும். (4,9) உரிய செவ்வாய் 9ல் நல்ல பலனைத் தரமாட்டார். வாகன சுகம் இருக்காது. பெற்றோருக்கு நல்ல பலன் இல்லை. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (5,8) உரிய குரு மூன்றில் இருப்பது நல்லதல்ல. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. (6,7) உரிய சனி 12ல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகை விலகும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் இரண்டில் இருப்பது சிறப்பானது. மேலும், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்லமுறையில் அமையும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். ராசியில் கேது இருப்பது தீங்கானது. (2,9) உரிய சுக்கிரன் 4ல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்ல பலன் உண்டு. (3,8) உரிய செவ்வாய் 8ல் இருப்பது நல்லதல்ல. முதலீடுகளால் லாபம் இருக்காது. மாமன் மாமிக்கு நல்ல பலன் இல்லை. (4,7) உரிய குரு இரண்டில் இருப்பது நல்லது. தாய்நலம், வாகன சுகம் உண்டு. (5,6) உரிய சனி 11ல் இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும்.(2,7) உரிய செவ்வாய் 7ல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது, திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய குரு ராசியில் இருப்பது நல்லதல்ல உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம், எதிரிகளால் தொல்லையுண்டு. (4,5) உரிய சனி 10ல் இருப்பது மத்திம பலன். வாகன சுகம் இருக்காது, தாய்க்கு மத்திம பலன், பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தரும். (9,12) உரிய புதன் ராசியில் இருப்பது நல்லதல்ல. பிதாவுக்குக் கூடாது. சயன சுகம் இருக்காது. 10ல் சனி இருப்பதால் தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். 11க்குரிய சூரியன் இரண்டில் இருப்பது நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பார்கள்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 6ல் இருப்பது விசேஷம். மேலும், சுக்கிரன் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. எதிரிகள் அடங்கி இருப்பர். (2,5) உரிய குரு 12ல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (3,4) உரிய சனி 9ல் இருப்பது தீங்கு இல்லை. தங்க ஆபரணங்கள் சேரும். தாய்க்கு மத்திம பலன், வாகன சுகம் இருக்காது. (7,12) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது சிறப்பானது. திருமண வாய்ப்பு உண்டு, சயன சுகம் உண்டு. (8,11) உரிய புதன் 12ல் இருப்பது கூடாது. நண்பர்களுக்குக் கூடாது, முதலீடுகளால் லாபம் இருக்காது. 10க்குரிய சனி ராசியில் இருப்பது கூடாது. தொழிலில் முன்னேற்றம் இருக்காது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 11ல் இருப்பது சிறப்பானது. மேலும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். வாகன சுகம் உண்டு. தாய் நலம். வீடு அமையப் பலன் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2, 3) உரிய சனி 8ல் இருப்பது தீங்கானது. கையில் பணம் இருக்காது. தங்க ஆபரணங்கள் தொலைய வாய்ப்பு உண்டு. (5, 12) உரிய செவ்வாய் 5ல் நல்ல பலனைச் செய்ய மாட்டார். பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தராது. சயன சுகம் இருக்காது. (6,11) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். பகைவர் சமரசத்துக்கு வருவர். (7,10) உரிய புதன் 11ல் இருப்பது விசேஷம். திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். சனி வழிபாடு செய்வது நல்லது.

**மகரம்:உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7ல் இருப்பது நல்லதல்ல. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். கையில் பணம் இருக்காது. மன அமைதி பாதிக்கலாம். (3,12) உரிய குரு 10ல் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. சயன சுகம் பாதிக்கலாம். மாமன், மாமியோடு உள்ள உறவு பாதிக்கலாம்.(4,11) உரிய செவ்வாய் 4ல் இருப்பது தோஷமானது. வாகன சுகம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. தாய்க்குக் கூடாத காலம்.(5,10) உரிய சுக்கிரன் 12ல் இருப்பது சிறப்பானது. தொழில் துறை முன்னேறும். பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தரும். 7ம் வீட்டை சுக்கிரன் பார்க்கிறபடியால் திருமண வாய்ப்பு உண்டு, (6,9) உரிய புதன் 10ல் இருப்பது நல்லதல்ல. பிதாவுக்குக் கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 6ல் இருப்பது சிறப்பானது. மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது விசேஷம். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு.

**இவ்வார 'ராசிபலன்' 14–11–2005 முதல் 20–11–2005வரை**

**பொ. சந்திரன்**

சயன சுகம் உண்டு. (2,11) உரிய குரு 9 ல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (3,10) உரிய செவ்வாய் 3ல் ஆட்சியாக இருப்பது சிறப்பானது. தொழில் துறை முன்னேறும். தங்க ஆபரணங்கள் சேரும். திறமையை வெளிக் கொண்டு வர நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும். (4,9) உரிய சுக்கிரன் 11ல் இருப்பது நல்லது. பெற்றோர் நலம். வாகன சுகம் உண்டு. வீடு அமையப் பலன் உண்டு. (5,8) உரிய புதன் 9ல் நல்ல பலனைத் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் குறையலாம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 7க்குரிய சூரியன் 10 ல் இருப்பதால் திருமண பலன் உண்டு.

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| | | | சனி |
| | | | |
| சுக்கிரன் | சூரியன் | புதன் குரு | கேது |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | பரணி | சுக்கிரன் |
| சுக்கிரன் | பூராடம் | சுக்கிரன் |
| புதன | விசாகம | குரு |
| சூரியன் | விசாகம் | குரு |
| குரு | சுவாதி | ராகு |
| சனி | பூசம் | சனி |

ஐப்பசி 28 முதல் கார்த்திகை 5 வரை

சந்திரன் மேடம் முதல் மிதுனம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய சனி 8ல் இருப்பது தீங்கானது. இருப்பினும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (2,9) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. பிதாவுக்குக் கூடாது. (3,8) உரிய சுக்கிரன் 10ல் இருப்பது தீங்கானது. முதலீடுகளால் லாபம் இருக்காது. மாமன், மாமிக்குக் கூடாது. (4,7) உரிய புதன் 8ல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.தாய்க்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (11,12) உரிய சனி 5ல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை.

# தெரியதும் தவறியதும்

நேர்வுக் காய்ச்சலில் இருந்த சினிமாக் காரர்கள் இப்பொழுது தான் ரிலாக்ஸாகி தீபாவளிப் பலகாரம் சாப்பிடுகிறார்கள். சிலருக்கு பலகாரம் கசக்க, பலருக்கு இனிப்போ இனிப்பு!

எதிர்பார்ப்பை கச்சிதமாக நிறைவேற்றி இருக்கின்றது விஜய்யின் 'சிவகாசி'. தியேட்டர்களில் கூட்டம் நிரம்பி வழிகின்றதாம். தியேட்டர் உரிமையாளர்களின் முகங்கள் சந்தோஷத்தில் பிரகாசிக்கின்றன.

ரிலீஸான அன்றே பலத்த வரவேற்பை பெற்று விட்டது விக்கிரமின் 'மஜா'. நிச்சயமான வெற்றிக் கோஷத்துடன் பட்டையைக் கிளப்புகிறது படம்.

தனுஷின் 'அது ஒரு கனாக்காலம்' மெதுவாக நகரும் திரைப் படம் என்பதால் வெற்றி வாய்ப்பு ஐம்பதுக்கு ஐம்பது என்கிறது விமர்சகர்கள் வட்டாரம்.

ஸ்ரீகாந்தின் 'பம்பரக் கண்ணாலே' படத்தைப் பார்த்தவர்கள் ஆச்சரியமாக பரவசப்படுகிறார்களாம். இந்தியாவில் தமிழ்நாடு முழுக்க இந்தத் திரைப்படத்திற்கு அமோக வரவேற்பாம்.

மொத்தத்தில் ஆஹா என்றும் இல்லாமல், ஐயோ என்றும் இல்லாமல் நோர்மல் அவரேஜைத் தொட்டிருக்கிறது இந்த வருட தீபாவளி ரிலீஸ்.





**பா**லுமகேந்திராவின் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் படம் 'அது ஒருகனாக்காலம்'. தனுஷ், பிரியாமணி நடிப்பில் இந்தப்படம் தீபாவளி ரிலீஸாக வெளிவந்திருக்கிறது. பால்ய கால நண்பர்களாக தனுஷும், பிரியாமணியும் நடித்திருக்கிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் தனுஷிடம் தன் கற்பை பறிகொடுத்திருக்கிறார் பிரியாமணி. கற்பைக் கொடுத்த பிரியாமணியை கைவிட மாட்டேன் என வாக்குறுதி கொடுக்கிறார் தனுஷ். வீட்டு வேலைக்காரியான ஒரு பெண்ணை காதலித்து மணம் முடிப்பதில் இருக்கும் சிக்கல்களை அழகாகத் தந்திருக்கிறார் பாலுமகேந்திரா.

இவர்களது காதலை கடுமையாக எதிர்க்கிறார் தனுஷின் அப்பாவாக வரும் டெல்லி கணேஷ். சந்தர்ப்ப சூழ்நிலையில் கொலை வழக்கில் சிறைக்குப் போகும் தனுஷ் சந்திக்கும் சோதனைகளும், கடைசியில் காதலியைக் கரம் பிடிப்பதும்தான் கிளைமாக்ஸ்.

ஒளிப்பதிவும், பிரியாமணியின் நடிப்பும் தான் படத்தின் பிளஸ் பொயின்ட்ஸ். மற்றபடி 'அ





## இஸ்ம் வ… நிஜக் கா…

'அறிந்தும் அறியாமலும்' ப…
அறிமுகமான சமிக்ஷாவுடன் அ…
வயப்பட்டிருக்கிறார். அ…
நடிக்க வி…தாக இல்லை. இ…
சமிக்ஷாவும் ஸ்ரீகாந்துடன் நடி…
பூக்கள்' படத்தில் மட்டுமே நடி…
இரண்டாவது கதாநாயகி என்ப…

காதலிக்கும் போதே இவ்வள…
கல்யாணத்துக்குப் பிறகு.... அ…
பிடிக்குமா என்பது சந்தேகம் த…

சிவகாசி படம் எப்படி?

நான் கதை கேட்கும் போதே மனதைத் தொடக்கூடிய படங்களைத்தான் தேர்ந்தெடுப்பேன். இந்தப் படம் ரசிகர்களுக்கு நிச்சயம் பிடிக்கும். ஆக்ஷனும் தேவையென்று பெண்களும் உணர்கிற அளவுக்கு படம் இருக்கும். சென்டிமென்ட்டும் இருக்கிறது. மற்றது ரசிகர்கள் தான் விமர்சனம் சொல்லணும்.

சிவகாசிக்கு அடுத்தது?

அப்பாவின் தயாரிப்பில் த்ரிஷாவுடன் 'ஆதி' படத்தில் நடிக்க இருக்கிறேன்.

தமிழில் ஒரே மாதிரியான காதல், ஆக்ஷன் இருக்கும் கதைகளில் மட்டும் ஏன் நடிக்கிறீர்கள்?

இப்போது எனது வயதுக்கும், தோற்றத்துக்கும் லவ்வும், ஆக்ஷனும் தான் பொருத்தம். ரசிகர்கள் அதைத் தான் விரும்புகிறார்கள். அதனால்தான் எனது பல படங்கள் பெரிதும் வெற்றி பெற்றிருக்கின்றன. என்னுடைய தனிப்பட்ட ரசனையை நான் ரசிகர்கள்மீது திணிக்கமாட்டேன். அவர்களது எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதுதான் என் ஸ்டைல்.

கம்பீரமான பொலிஸ் அதிகாரி வேடத்தில் எப்போது நடிப்பீர்கள்?

எனது நெடுநாள்ஆசை இது. இப்போது நிறைவேறப் போகிறது என்று நினைக்கிறேன். எஸ்.ஜே சூர்யா இயக்கத்தில் நான் நடிக்க இருக்கும் 'புலி' படத்தில் காவல்துறை அதிகாரியாக நடிப்பேன்.

ஒரு படம் முடிந்தவுடன் தான் மற்றப் படம் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதன் ரகசியம் என்ன?

இது என் நிரந்தரக் கொள்கை. என் படங்கள் வித்தியாசமாக இருக்கவேண்டும். பத்தோடு பதினொன்றாக இருக்கக்கூடாது. மாறுபட்ட சப்ஜெக்ட், மாறுபட்ட கேரக்டர் என பார்ப்போர் பிரமிக்க வேண்டும். இதில் நான் உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கிறேன்.

புதுமுகங்களை உங்களுக்குப் போட்டியாக நினைக்கிறீர்களா?

புதுமுகங்கள் எல்லோரும் திறமைசாலிகளாக இருக்கிறார்கள். நல்ல நடிப்பும், டான்ஸும் அவர்களிடம் இருப்பதால் நான் யாரையும் சாதாரணமாக நினைப்பதேயில்லை. அதனால் எல்லோரையும் எனக்குப் போட்டியாகத்தான் நினைக்கிறேன்.



## நமீதாவின் விருப்பம்

என் விருப்பம் தமிழ் படங்களே என்று மார்தட்டுகிறார் நமீதா. தமிழ் நாட்டு மக்கள் இவரை செல்ல சீமாட்டியாக ஏற்றுக் கொண்டுள்ளனராம், இதனால் முடிந்தவரை தமிழில் பேசவே முயற்சிக்கின்றார். வேறு மொழிப்படங்களிலும் நடிக்க மறுத்துவிடுகின்றாராம்.

## சினி மினி

- நவ்யா நாயர் அவரது சம்பளத்தைக் கணிசமாக உயர்த்தி விட்டார்.
- ஜீவா நடிக்கும் 'ஈ' படத்தில் நயன்தாரா 'காபரே' நடனம் ஆடியுள்ளார்.
- 'ரசிகர் மன்றம்' படத்தின் படப்பிடிப்பு இலங்கையில் நடக்கிறது.
- படப்பிடிப்பு இல்லாத நாட்களில் தனுஷ் தன் மனைவி ஐஸ்வர்யாவுடன் சுற்றுலா சென்று வருகிறார்.
- விக்ராந்த் - சிபி நடிக்கும் 'பட்டாசு' படத்தில் சிபிக்கு ஜோடியாக நடிக்கிறார் சாயாசிங்.
- 'சொல்ல மறந்த கதை' படத்தில் நடித்த ரதி இப்போது 'சாமக்கோழி' படத்தில் நடித்து வருகிறார்.
- 'வேட்டையாடு விளையாடு' படத்தில் முக்கிய வேடமொன்றில் நடிக்க, ரதியிடம் கால்ஷீட் கேட்டுள்ளனர்
- 'ஏபிசிடி'யில் சிநேகா சொந்தக் குரலில் பேசி நடித்துள்ளார். இப்படம் தனக்கு ஒரு மைல் கல்லாக அமையும் என எதிர்பார்க்…
- விவேக் 'அகரம்' படத்தில் சம்பளம் வாங்காமலே நடித்துள்ளார்.
- இவ்வருடம் பிரசாந்த், தனுஷ், காவேரி, பவதாரணி, யுவன்சங்கர் ராஜா, ஸ்ரீகாந்த் தேவா ஆகிய திரையுலக நட்சத்திரங்கள் தலைத் தீபாவளி கொண்டாடியுள்ளனர்.

# 'அது ஒரு கனாக்காலம்'

## திரைவிமர்சனம்



ரி
பிரியா
காடுத்
ள் என
லித்து
ரா.
டல்வி
தனுஷ்
மாக்ஸ்.
. மற்றபடி 'அது ஒரு கனாக்காலம்' கிளிசரின் போடாத அழுகை.


# பொங்கல் ஹிட் லிஸ்ட்

தீபாவளி முடிந்த கையோடு பொங்கல் ரிலீஸுக்குத் தயாராகி விட்டது திரையுலக வட்டாரம்.

கமலின் 'வேட்டையாடு விளையாடு', விஜய்யின் 'ஆதி', ரவியின் 'இதயத் திருடன்', புதுமுகங்களின் 'சித்திரம் பேசுதடி', மாதவனின் 'தம்பி', தனுஷின் 'திருவிளையாடல்', ஆர்யாவின் 'கலாபக் காதலன்' என இப்போதே கியூவில் நிற்கின்றன திரைப்படங்கள்.

இவை தவிர சிம்புவின் 'வல்லவன்', எஸ்.ஜே.சூர்யாவின் 'கள்வனின் காதலி', சூர்யாவின் 'ஆறு' போன்ற படங்கள் டிசம்பரிலேயே திரைக்கு வரப் போகின்றனவாம்.

இவற்றில் பொங்கலுக்குப் பொங்கப் போகிறவை எவை, பதுங்கப் போகிறவை எவை என்று பொறுத்திருந்து பார்ப்போம்.



# ...ம் ஹீரோவின் ...க் காதல்

...பியாமலும்' படத்தில் நவ்தீப்பின் ஜோடியாக ...க்ஷாவுடன் ஆர்யா நிஜத்தில் தீவிரமாய் காதல் ...ள். அதனால் தான் சமிக்ஷாவை வேறுபடங்களில் ... இல்லை. இவரது கட்டுப்பாட்டுக்கு அடங்கிய ...காந்துடன் நடித்துக் கொண்டிருக்கும் 'மெர்குரிப் ... மட்டுமே நடிக்கிறார். அந்தப் படத்தில் அவர் ...நாயகி என்பதால் தான் ஆர்யா சம்மதித்தாராம்.

...போதே இவ்வளவு கண்டிப்புடன் என்றால் ...ப் பிறகு..... அது வரைக்கும் இந்தக் காதல் தாக்குப் ...து சந்தேகம் தான்.

# "திருப்பதி என் கதை" - உதவி இயக்குனர்

நாளொரு பஞ்சாயத்தும், பொழுதொரு தீர்ப்புமாக போய்க் கொண்டிருக்கிறது தயாரிப்பாளர் சங்க வட்டாரம். கடந்த வாரம் கம்பீரத்துக்கும், கண்ணியத்துக்கும் பேர் போன ஏ.வி.எம் நிறுவனத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள புகார் அந்த வட்டாரத்தையே ஒரு குலுக்கு குலுக்கியிருக்கிறது.

அஜித் நடிக்கும் 'திருப்பதி' படத்தின் கதை தன்னுடையதென்று புகார் கொடுத்திருக்கிறார் ஒரு உதவி இயக்குனர். அந்த உதவி இயக்குனரை விசாரித்த தயாரிப்பாளர்கள் சங்கத்துக்கு செம அதிர்ச்சி.

திருப்பதி படத்தின் கதையை வரிவிடாமல் ஒப்பித்த உதவி இயக்குனர், இப்படத்தின் கதையை எப்போது, எங்கே ஏ.வி.எம் தலைவரிடம் சொன்னேன் என்பதையும் சொல்லியிருக்கிறார்.

உதவி இயக்குனர் சொல்லுவது உண்மையில்லை என்று சொல்லிக் கொண்டிருந்த அந்த நிறுவனத் தலைவர், இப்போது உண்மைகள் வெளிவரத் தொடங்க பின்வாங்குகிறாராம். பிரச்சினை முற்றினால் கோர்ட்தான் என்று குமுறுகிறார் உதவி இயக்குனர்.

என்ன நடக்கப் போகிறதோ?

...க் கணிசமாக
...தாரா
...டிப்பு
... தனுஷ் தன்
...லா சென்று
... " படத்தில்
...பாசிங்.
...டித்த ரதி
... நடித்து
...த்தில் முக்கிய
... கால்ஷீட்
...லில் பேசி
...ஒரு மைல்
...ம்
...வேரி,
...ரீகாந்த் தேவா
...தலைத்

## கவர்ச்சியாக நடிப்பேன் ஆபாசமாக நடிக்கமாட்டேன்





# சம்பந்தியானார் சிவகுமார்

கலையுலக மார்க்கண்டேயர் சிவகுமார் சம்பந்தியாகி விட்டார். சூர்யா,கார்த்தி என இரண்டு மகன்களை சினிமாவுக்குள் நுழைத்து விட்ட சிவகுமாரின் கடைக்குட்டி செல்லப் பெண் பிருந்தா, பக்கத்தில் போட்டுக்கொள்ள பி.ஏ, எம்.பி.எம் பட்டம் பெற்றவர்.

மீடியா பக்கமே தலைகாட்டாத அவருக்கு தொழிலதிபர் சிவக்குமாருக்கும் சமீபத்தில் நிச்சயம் செய்யப்பட்டது.

மணமகனின் பெயரைக் கேட்ட பிருந்தாவுக்கு முதலில் ஸ்வீட் ஷாக் அடித்ததாம். நவம்பர் 13ஆம் திகதி சிவக்குமாரும், பிருந்தாவும் இல்லற வாழ்வில் இணையவுள்ளனர்.

திருமண ஏற்பாடுகளை மணமகளின் அன்பு அண்ணன்மாரான சூர்யாவும், கார்த்தியும் செய்து வருகின்றனர்.

# திருமணம் வெற்றி பெற...

'திருமணம் என்பது ஆயிரம்காலத்துப் பயிர்' என்பது எம் சான்றோர் வாக்கு. ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் திருமணம் ஒரு திருப்புமுனை, பல வருடங்கள் தாலி கட்டியவருடனேயே சேர்ந்து வாழவேண்டிய பாசப் பிணைப்பு.

திருமணம் அவசரத்தில் அள்ளித் தெளித்து விடக் கூடிய கோலமல்ல. ஆற அமர யோசித்து முடிவு செய்து நடத்தப்பட வேண்டிய விடயம். பலர் ஏனோ இதை நினைத்துப் பார்ப்பதேயில்லை. 'வயசுப் பெண் வீட்டில் இருக்கிறாள். மடியில் நெருப் பைக் கட்டிக் கொண்டிருக்கிறேன்.' என பல தாய்மார் புலம்புவார்கள். அந்தப் புலம்பல்களின் உச்சமாக நல்லவனோ, கெட்டவனோ எவன் கையிலாவது அவளைப் பிடித்துக் கொடுத்து விட்டால் கடமை முடிந்தது என்று தான் பலர் நினைக்கிறார்கள்.

மடியில் கட்டிவைத்திருக்கும் நெருப்பாக மட்டுமே பெண் பிள்ளைகளை பெற்றோர் ஏன் பார்க்கவேண்டும்? சுட்டெரிக்கும் சூரியனாகப் பார்த்தால் என்ன? அப்படிப் பார்க்க ஏன் தவறுகிறார்கள் என்பதையெல்லாம் எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.



சேலை வாங்குவதென்றாலே பல கடைகள் ஏறி இறங்குகிறோம்.ஒரு மாதமோ, இரண்டு மாதமோ கட்டிவிட்டு மூலையில் போடப் போகும் சேலைக்கே தரம் பார்த்து தேடி அலையும் நாம் காலம் முழுவதும் வாழப்போகும் ஒரு பெண்ணின் வாழ்க்கைக்காக எவ்வளவு பொறுமையுடன் ஒருவனைத் தேட வேண்டும்.

திருமணத்திற்குப் பின் முற்றிலும் புதிய சூழலில்தான் ஒரு பெண் வாழப் போகிறாள். கணவன், மாமனார், மாமியார், மச்சான்மார், மச்சாள்மார் என புது உறவுகள்,புது இடம் என அவள் புகுந்த வீட்டுக்குள் நுழையும் போது, முற்று முழுதுமாய், தன் வாழ்வின் அச்சாணியாய் நம்பி இருப்பது தாலி கட்டிய கணவனைத்தான்.

இப்படி முழுவதும் நீயே என்று கணவனையே நம்பி அவன் பின்னால் போகும் பெண்ணுக்கு எத்தனை கணவன்மார் நூறு வீதம் நம்பிக்கையையும், அன்பையும், அரவணைப்பையும் வாரி வழங்குகிறார்கள் என்று பார்த்தால் பாதிக்குப் பாதிகூட கிடையாது.

மனைவியை ஒரு வேலைக்காரியாய், சமையல்காரியாய், தனக்கொரு வாரிசைப் பெற்றுத் தரும் மெஷினாய்ப்- பார்க்கும் கணவன்மார்தான் அதிகம். அதிலும், ஆண் குழந்தை பிறக்கவில்லை என்றால் அது என்னவோ பெண்ணின் தவறுதான் என்றெண்ணி அவளைப்படுத்தும் பாடு இருக்கிறதே, அதனை வார்த்தையால் வர்ணித்து விடமுடியாது.

எல்லாவற்றையும் விட நவீன காலத்தில் வக்கிரமாகத் தலைவிரித்தாடுவது சீதனக் கொடுமைதான். சீதனப்பிரச்சினையால் முதிர் கன்னியாகி கண்ணீரில் கரைந்துகொண்டிருப்பவர்கள் நம் நாட்டில் நிறையப் பேர் இருக்கிறார்கள். கணவரும், மாமனாரும் சீதனம் கேட்டால் ஆண்வர்க்க ஆதிக்கம் என்று ஒதுக்கலாம். மாமியாரே சீதனம் கேட்டால் என்ன செய்வது? பெண்ணுக்குப் பெண்ணே எதிராக நின்றால் என்ன செய்துவிட முடியும்? இந்தக் கொடுமையை எப்படித் தடுத்துவிடமுடியும்?

''பேரம் பேசவே கல்யாண சந்தையோ
பெண்கள் யாவரும் வெள்ளாட்டு
மந்தையோ?''
''பொன் சேர்க்கவே பெண் தேடுவாள்
அம்மாடி மாமியார் பெண்ணல்ல
தாடகை''

போன்ற பாடல் வரிகளின் ஆழத்தை யோசித்துப் பார்த்தால் அதில் அமிழ்ந்து கிடக்கும் வலி எம்மைப் பதறவைத்து விடும்.

சீதனம் ஒரு பக்கம் என்றால், வேலை இன்னொரு பக்கம். வேலைத் தளத்திலும், வீட்டிலும் மாடாக உழைக்கும் பெண்களின் நிலைமை பரிதாபத்துக்குரியது. ஓய்வின்றி களைத்துப் போய் வேலைத்தளத்திலிருந்து வந்தால் ஆதரவாக தேநீர் தர யாரும் இருக்கமாட்டார்கள். அதே நேரம் கணவன் வேலைவிட்டு வரும்போது தன் களைப்பை எல்லாம் ஒதுக்கிவிட்டு தேநீர் கோப்பையோடு கணவன் முன் நின்றாக வேண்டும்.

மாடாக உழைக்கும் பெண் வேலைத் தளத்தில் கைநிறைய உழைத்துப் பதவி உயர்வு பெற்றுவிட்டால் போதும், ஆண்களுக்கு எங்கிருந்துதான் 'ஈகோ' பிரச்சினை வந்து ஒட்டிக் கொள்ளுமோ தெரியாது. வார்த்தைகளாலேயே பெண்ணை வதைத்தெடுத்து விடுவார்கள்.

இப்படி திருமண வாழ்வில் தோல்வியுறும் பல பெண்கள் தற்கொலையைத்தான் தீர்வாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த தற்கொலைக்குப் பின்னால் உள்ள சோகமோ அழுத்தமானது, ஆழமானது.

பிள்ளையில்லாப் பிரச்சினையும் இன்று பல பெண்கள் வாழ்வில் கோரத்தாண்டவம் ஆடுகிறது. 'மலடி மலடி' என்று பெண்ணை அழைப்பார்களே தவிர 'மலடன்' என்று ஆண்களை யாரும் அழைப்பதில்லை.அவ்வளவு ஏன்? யாரிடம் குறை என்று அறிந்துகொள்ளக்கூட விரும்புவதில்லை. முழுப் பழியையும் பெண் மீது அப்படியே சுமத்திவிடுகிறார்கள். பல பெண்களின் திருமண வாழ்க்கை இப்படி பற்பல காரணங்களினால் சீரழிந்துதான் போய்க்கொண்டிருக்கின்றது.

பல வித சந்தோஷமான கனவுகளுடன் திருமண வாழ்வில் அடி எடுத்துவைக்கும் ஒரு பெண், அந்த கனவு அப்படியே கனவுகளில் மட்டுமே நிலைத்துப் போக, நிஜ வாழ்க்கை முள்ளாகக் குத்த, விழுங்கவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் தவிக்கும் தவிப்பை எழுத்துக்களில் வடித்து விட முடியாது.

எனவே, பெற்றோரே! திருமணம் என்பது ஒரு கட்டாய சடங்காக மட்டுமே இருந்துவிடக்கூடாது. உங்களது சுமையைக் குறைத்து விடும் நிகழ்வாகவும் அமைந்து விடக்கூடாது.

திருமணம் முடிந்தவுடன் உங்கள் கடமை முடிந்து விடுகிறது. ஆனால், காலம் முழுவதும் திருமண ஓடத்தை ஓட்டிச் செல்லப் போவது உங்கள் மகள் தான்.அவளது திருமணத்தில் அவளுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். அவளது விருப்பங்களுக்கு மறுப்புச் சொல்லாதீர்கள். ஏழு ஜென்மம் இருக்கிறது என்பதெல்லாம் உண்மையோ, பொய்யோ தெரியாது. ஆனால், எடுத்திருக்கும் இந்தப் பிறவியில் நாம் சந்தோஷமாக வாழ்ந்தாக வேண்டும். அதற்கு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சுதந்திரமும், உரிமையும் உள்ளது. உங்கள் பெண்களின் வாழ்வை அவர்களது இஷ்டப்படி, உங்களின் சம்மதத்தோடு அமைத்துக் கொடுங்கள்.

நன்றாக யோசித்து, விசாரித்து நூற்றுக்குத் தொண்ணூறு வீதமாவது உங்களுக்கு திருப்தியானால் மட்டுமே திருமணம் செய்து கொடுங்கள். எதிர்காலத்தை நம்மால் முன்கூட்டியே அறிய முடியாது. எனவே, நல்லதையே செய்வோம். நல்லதே நடக்கும் என எதிர்பார்ப்போம் என்ற ரீதியில் செயற்படுங்கள்.

உங்கள் பெண்ணின் வளமான வாழ்வு உங்கள் கைகளில். எனவே, அவளுக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை, நல்லதொரு திருமண வாழ்வை பெற்றுக் கொடுப்பது உங்கள் பொறுப்பு.அது உங்கள் கட்டாயக் கடமையும் கூட. ஆற, அமர, நிதானமாக புள்ளி வையுங்கள். நிச்சயம் திருமணக் கோலமும் வர்ண ஜாலத்துடன் அழகாகப் பிரகாசிக்கும்.

- இந்து -

## பெண்



கனிமொழியே!
கண் மலர்ந்து, வாய் திறந்து
வார்த்தைகள் பல பேசிடுவாய்!
வாடி நிற்கும் உன் முகத்தினை
மலரச் செய்திடுவாய்

கன்னத்து கையெடுத்து
சிரத்திற்கு மேல் வைத்து
பெண் முழக்கம் போட்டிடுவாய்!
உன் மௌனத்தை கலைத்து நீ
பெண் விடுதலைக்காய் முழங்கிடுவாய்!

அங்கொருத்தி வானையே
தொட்டுவிட்டாள்.
ஆனால், இங்கு நீ
இன்னும் பூமியையே
தொட்டுக்கொண்டிருக்கிறாய்

தொட்டுவிடு வானத்தை
இல்லையேல்
வீழ்த்திடுவர் படு பாதாளத்தில்

எஸ்.வி.ஸ்டெலா,
பொகவந்தலாவ.

## பெண்ணே உனக்காக...

* நீ உற்சாகம் என்னும் கேடயத்தை ஏந்திக் கொண்டால் எத்தகைய வேதனையிலிருந்தும், வலியிலிருந்தும் உன்னைத் தற்காத்துக் கொள்ளமுடியும்.

* மற்றவருக்காக விட்டுக் கொடுத்து வாழ்வதென்பது தனக்காக தான் வாழுவதைப் போன்ற சந்தோசத்தைத் தரக் கூடியது.

* இனிய இல்லறம் நம்பிக்கை எனும் வலுவான அஸ்திவாரத்தின் மேல்தான் கட்டப்படுகிறது.


* உணவு மட்டுமல்ல, உள்ளங்களுக்கிடையேயான அன்பும் கூட, அளவுக்கு மிஞ்சினால் விஷமாகி விடும்.

* பெண்ணுக்கு மிகச் சிறந்த அணிகலன் பொறுமை. பூமி மாதாவைப் போன்ற உன் பொறுமையால் நிச்சயம் நீ நினைத்ததை சாதிக்கலாம்.

# புன்னகையின் விலை

அழகாக இருக்க விரும்பாத பெண்கள் தான் யார்? பற்பல அலங்காரங்களில் மிளிரும் பெண்கள் வாய்விட்டுச் சிரிக்க நேரும்போது தர்ம சங்கடமாக உணர்வார்கள். அவர்களின் ஒழுங்கற்ற பல் வரிசையும், கறைபடிந்து துர்நாற்றம் வீசும் பற்களும்தான் இதற்குக் காரணம்.

அலங்காரத்துக்காக நேரத்தைச் செல



விடும் பெண்கள், முகத்தில் உள்ள மகத்துவம் வாய்ந்த பற்களை மட்டும் ஏனோ கண்டுகொள்வதில்லை.

ஒரு இனிய புன்னகையால் சாதிக்கக் கூடிய விடயங்கள் ஏராளம் .எனவே,பற்கள் தொடர்பான சில டிப்ஸ் உங்களுக்காக,

❖ புகையிலை பயன்படுத்துவதால் பற்கள் கறுப்பு நிறமாகிவிடும் எனவே, இவற்றைத் தவிருங்கள்.

❖ மஞ்சள் கறை மற்றும் வாய்த் துர்நாற்றம் பற்களில் பிரச்சினை உள்ளதற்கான அறிகுறிகள் ஆகும்.

❖ 30 வயது கடந்த பெண்கள் பற்கள் மீது விஷேட கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், மெனோபஸ் சமயத்தில் பற்களின் இடையிலுள்ள தூரம் அதிகரித்து, பல் ஈறுகளும் சுருங்கத் தொடங்குகின்றன.

❖ வீட்டு வைத்தியமாக எலுமிச்சைச் சாறையும்,உப்புத் தூளையும் கலந்து வாரம் ஒரு முறை பல்லை மினுக்கலாம்.

❖ ஆண்டுக்கொரு முறை அவசியம் பல் வைத்தியரிடம் சென்று பற்களைப் பரிசோதிக்க வேண்டும்.

புன்னகைதான் உங்கள் தனித்துவத்தை வெளிப்படுத்தும். அதற்கு பற்களின் அழகும்,ஆரோக்கியமும் அவசியம். எனவே, பற்களின் தூய்மை மற்றும் உணவுப் பழக்கத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

பற்கள் அழகுக்கு மட்டுமல்ல, கணீரென்ற குரலுக்கும் அவசியம். அதைத்தான் 'பல்லு போனால் சொல்லு போச்சு' என்கிறது நமது தமிழ் பழமொழி. என்வே, தோழியரே பற்கள் ஜாக்கிரதை.

## என்ன வாசிப்பது.


திருமண வீடுகளில் நாதசுரம் அழகு சேர்க்கிறது.

திருமண நிகழ்ச்சியின் போது எப்போது எந்த ராகம் வாசிக்க வேண்டு என்று வரையறுத்திருக்கிறார்கள்.

அதன் விவரம் வருமாறு :-

மாப்பிள்ளை அழைப்பு—கல்யாணி
மாப்பிள்ளையை அழைத்து வரும் போது—கரகரப்பிரி[illegible]
நிச்சயதார்த்தம்—[illegible]
முகூர்த்த நாள் காலை — கேதாரம்
முகூர்த்தத்துக்கு முன்பு — தன்யாசி
முகூர்த்த வேளையில் — நாட்டைக்குறிஞ்சி
தாலி கட்டும்போது — ஆனந்த பைரவி

# தக்காளி



உணவில் நாம் பயன்படுத்தும் தக்காளி கவர்ச்சியானது மட்டுமல்ல சுவையானதும், சத்து மிக்கதும் ஆகும். ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தக்காளி தென் ஆபிரிக்காவில்கண்டுபிடிக்கப்பட்டது.

தக்காளியில் ஏறத்தாழ 4000 வகைகள் உள்ளன. விட்டமின் ஏ, சி சத்துக்களும், இரும்பு, கல்சியம் சத்துக்களும் நிறைந்தது தக்காளி.

இத்தகைய தக்காளியை உணவில் பல விதமாக பயன்படுத்தும் நாம் அதன் பயன்களையும் இப்போது அறிந்து கொள்வோம். தக்காளியை அடிக்கடி பச்சையாக சாப்பிட்டு வந்தால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். குளிர் காலத்தில் எளிதாகத் தொற்றும் சளி, இருமல் ஏற்படா. கண் பார்வையைக் கூர்மையாக்கும். தக்காளியில் உள்ள தாது உப்புகள் இரத்த நோய்களை விரட்டியடிக்கும்.

அது மட்டுமா, தக்காளி சத்துணவு மட்டுமல்ல அழகு சாதனமும் கூட. வெயிலில் அலைந்து விட்டு வந்ததும் 3 தேக்கரண்டி தக்காளிச் சாறுடன், 1 தேக்கரண்டி பன்னீர் கலந்து முகத்தில் பூசி 30 நிமிடங்கள் கழித்துக் கழுவினால் முகம் 'பளிச்' சென்று இருக்கும்.

பேனா மையினால் ஏற்பட்ட கறைகளையும் தக்காளி போக்கிவிடுகிறது. அத்துடன் புற்று நோயை எதிர்க்கும் 'லைகோபென்' என்ற வேதியியல் பொருளும் தக்காளியில் இருக்கிறதாம்.

என்ன சகோதரிகளே! தக்காளியின் மகத்துவத்தைப் பட்டியல் போட்டாயிற்று. இனி உங்கள் வீட்டு மரக்கறிக் கூடைகளையும், குளிர்சாதனப் பெட்டிகளையும் இந்த லவ் ஆப்பிள் என்று அழைக்கப்படும் தக்காளியும் அலங்கரிக்கட்டும்.

தி.மைதிலி,
கல்லடி,
மட்டக்களப்பு.

## கேள்வி-பதில்

*அன்புக்குரிய சகோதரிகளே!*

உங்களுக்குரிய இந்தப் பக்கத்தில் கேள்வி-பதில் பகுதி ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறோம்.

உங்கள் கேள்வி குடும்பப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம், சமூகப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கலாம் உங்களுடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும். அத்துடன் இப் பகுதிக்கு வாசகர்களாகிய உங்களிடம் இருந்தும் ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

**உங்கள் கேள்விகள், ஆக்கங்கள் ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:-**

**பெண்**
**சுடர் ஒளி வார இதழ்**
**85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு - 14.**

# மூலவியாதிக்கு சத்திர சிகிச்சை அவசியமா?

கே: ஆண். வயது 49. எனக்கு மூலவியாதி வந்துள்ளது. மலம் கழித்தால் இரத்தப் பெருக்கு. ஆரம்ப காலத்தில் மாதம் ஒரு தடவை ஏற்பட்ட இந்த நோய் தற்பொழுது தினமும் ஏற்படுகின்றது. இதனால் மலம் கழிக்கவே பயமாக இருக்கின்றது. முன்னர் எனக்கு குடிப் பழக்கம் இருந்தது. இப்பொழுது மது பாவிப்பதில்லை. இந்த நோயை டாக்டரிடம் காட்டியபோது- சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமென்றார். சத்திர சிகிச்சை செய்ய பயமாக இருக்கிறது. விருப்பமும் இல்லை. மருந்துகள் உபயோகித்து குணம் காண வழிகூறமுடியுமா?

ப: மூலவியாதி என்கின்ற HAEMORRHOIDS அல்லது PILES நோய்க்கு- விரைவாகக் குணம் காண- சத்திர சிகிச்சை தான் சிறந்தது. அதற்காக எடுத்த வாக்கில் சத்திர சிகிச்சையை வைத்தியர்கள் செய்ய மாட்டார்கள். மூலப் பகுதியில் மூன்று நாளங்களின் இறுதி அந்தங்கள் உள்ளன. இவை பல் வேறு காரணங்களால் புடைத்து வீங்கி- சில வேளைகளில்- சிதைந்து இரத்தப் பெருக்கைத்தரும்.இந்த நாளங்கள் நேரடியாக ஈரல் நாளங்களோடு தொடர்பாக இருப்பதால்- மதுபானம் பல காலம் குடித்தவர்களின் ஈரல் அழற்சியுற்று வீங்கும் போது இந்த நாளங்களும் வீங்கி- இரத்தப் பெருக்கு ஏற்படும். இது தவிர குடலில் புற்று நோய்க் கட்டிகள் இருந்தாலும் மூலநோய் உண்டாகலாம். இது தவிர மூல நோய் ஏற்பட பொதுவான காரணம் எமது வாழ்க்கை முறைதான்.

உங்களுக்குத் தெரியுமா- மூல நோய் உலகில் உள்ள ஜீவராசிகளில் இரண்டு இனங்களிடையேதான் காணப்படுகின்றது. ஒன்று மனித இனம், அடுத்தது எமது மூதாதையர் என்ற மனிதக் குரங்கு இனம். மிருக இனங்களும்- நாலு கால்களில் நடமாடித் திரிந்த போது- இந்த மனிதனும் மூதாதைக் குரங்குகளும்-முதுகை நிமிர்த்தி- இரண்டு கால்களால் நேராக நடக்க பரிணாம வளர்ச்சிபெற்றனர். இப்படி ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியால் தான் இந்த இனங்களிடையே மூல நோய் மூலம் வெளியே தள்ளுதல் (PROLAPSE HAEMORRHOIDS) ஏற்பட்டதாக மருத்துவ ஆய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர். தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் உள்ள இந்த நம் மூதாதையரும் மூலம் வெளியே தள்ள நடமாடுவதை இன்னும் காணலாம்.

இப்படி பரிணாம வளர்ச்சியால் ஏற்பட்ட இந்தக் குறைபாட்டை மேலும் பெரிது பண்ண- நமது பழக்க வழக்கங்கள், உணவுப் பழக்கங்கள் உதவுகின்றன. மலச்சிக்கல் ஏற்படக்கூடிய உணவுகளை அதிகமாக உண்ணல் கீரை,பழவகைகளை- அரிதாக உண்ணல்-குடிநீர் குறைவாக அருந்துதல், மதுபானம் அருந்துதல் என்பவை-மலச்சிக்கலை உருவாக்குகின்றன. இதனால் மலம் கழிக்கும் போது- முக்குதல்(STRAINING)-இந்த நாளங்களை பாதித்து- மூல நோயை உருவாக்குகின்றது. மலம் கழிக்கும் போது நீண்ட நேரம் பத்திரிகைகள் வாசிப்பதன் மூலம்-மூலம் வெளியே தள்ளப்படும். அடுத்ததாக- மலம் கழிக்கும் வழக்கத்தை- சோம்பலினால் அல்லது பிரயாணத்தினால் அடிக்கடி மாற்றிக் கொள்வதும் மலச் சிக்கலை உருவாக்கி காலாகாலத்தில் மூல நோய் உருவாகக் காரணங்களாகின்றன.

உங்கள் விஷயத்தில் உங்கள் ஈரல், குடல் போன்றவைகளில் பிரச்சினைகள் எதுவும் இல்லை எனபதை முதலில் கண்டறிந்த பின்னர் தான் இது சாதாரண மூலநோய் என்று சிகிச்சை எடுக்க வேண்டும். சத்திர சிகிச்சை தான் சிபாரிசு செய்யப்பட்டாலும்- ஒரு சில ஆயுள் வேத மருந்துகள் குணமளிப்பதாக இந்தியாவில் அறியப்பட்டுள்ளது. அவற்றில் தற்போது PILEX மாத்திரைகளும், களிம்பும்- அதிகளவில் பிரயோசனம் தருவதாக மருத்துவ சஞ்சிகைகளில் ஆய்வுகள் சொல்கின்றன. நீங்களும் இவற்றை உபயோகித்துப் பார்த்து- பலனில்லாவிடில் சத்திர சிகிச்சை செய்யலாம்.

கே: பெண். வயது 48. திருமணமாகி குழந்தைகள் உள்ளனர். கடந்த மாதம் மாதவிலக்கு வந்து தொடர்ந்து இரத்தப் பெருக்கு போய்க் கொண்டே இருக்கிறது. டாக்டரிடம் காட்டினேன். கருப்பையை சத்திர சிகிச்சை செய்து அகற்ற வேண்டும் என்றார். இதனை மருந்து மாத்திரைகளால் குணப்படுத்த முடியாதா?

ப: உங்கள் வயது, குடும்ப வாழ்க்கை என்பதை கவனத்தில் எடுத்து நோக்கும் போது-பெண்களுக்கு மாதவி லக்கு நிற்கும் காலப்பகுதியில் (MENA PAUSE) இவ்வாறு இரத்தப் போக்கு ஏற்படுவதுண்டு. இதனை- ஆரம்பத்தில் ஹார்மோன் மாத்தி ரைகள், இரும்புச் சத்து மாத்திரைகள் என்ப வற்றைக் கொடுத்து குணமடைய வைக்க முயலுவார்கள் டாக்டர்கள். இந்த சிகிச்சை முறைக்கு- குணம் காணப்படாவிடத்து- கருப்பையை அகற்றுவதே சரியான முறையாகும். ஏனென்றால், இந்த வயதில் ஏற்படும் இரத்தப் போக்குள்ள கருப்பைகள்- புற்று நோய் ஏற்பட சாதகமாக இருப்பதனால் தான் இப்படி வைத்தியர்கள் எண்ணுகின்றனர்.

எனினும்- இப்படி இரத்தப்போக்கு இருந்தால் நோயாளி சரியாக முதலில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின்- இரத்தப் போக்குக்கு வேறு காரணங்கள் கண்டுபிடிக்கப் படாதவிடத்து- இறுதி முடிவாகத்தான் கருப்பை அகற்றல்- அறிவுறுத்தப்படுகிறது. இப்படியான நோயாளிக்கு - VAGINAL EXAMINATION என்ற யோனிப்பாதை வழிப் பரிசோதனையில் கருப்பை வாசலில் ஏற்படும் நோய்கள் அறியப்படலாம். அதை அடுத்து ஸ்கேனிங் முறையில்- கருப்பையில் கட்டிகள் (FIBROIDS) சூலக நோய்கள் அறியப்படலாம். மேற்கூறிய நோய்களும் இரத்தப் போக்குக்குக்



காரணமானவை. இது தவிர- கருப்பையின் உட்சுவரில் ஏற்படும் தொற்றுக்கள், திசு வளர்ச்சிகள் கூட இரத்தப்பெருக்கை ஏற்படுத்தலாம். இதனை முதலில் DILATATION & CURRETAGE என்ற சிறு சத்திர சிகிச்சை மூலம் அறிந்து கொள்ளலாம். இத்தனை செயல் முறைகள், பரிசோதனைகள், மருந்து உபயோகங்களின் பின்னரும் குணம் தெரியாவிடின் தான்- மகப்பேற்று பெண் நோயியல் நிபுணர்கள்- கருப் பையை அகற்ற எண்ணுவர்.

கே: ஆண். வயது 83. எனது கெண்டைக் காலுக்குக் கீழும் மேலும், சில வேளைகளில் அரிக்கிறது. இதனால் அரிப்புத் தாங்காமல் சொறிந்தால் புண்கள் ஏற்படுகின்றன. காலை- மாலை-இரவு என்றில்லாமல் எந்த நேரமும் அரிக்கின்றது. இது எதனால்- எப்படி குணமாக்கலாம்?

ப: எமது ஆயுள் கூடக் கூட எமது தேகம், தேகத்தின் தொழிற்பாடுகள் என்பன நலிவுற்றுப் போகின்றன. இதன் வெளிப்பாடே- நரை,திரை,மூப்பு என்ற குணங்குறிகளாகும். நரை என்பது உரோமங்கள் வெள்ளை ஆவது, மூப்பு, உடலும் உடல் உறுப்புகளும் வயதேற்றத்தினால்-பலம் குன்றுவது. திரை என்பது, தோலில் சுருக்கம் ஏற்படுவது. இள வயதில்- தோலின் கீழே உள்ளCOLLAGEN FIBRES எனும் பகுதி எமது தோலை மினுமினுப்பாகவும், சுருக்கம் இல்லாமலும் இழுத்தும் வைத்துக் கொள்கிறது. வயது ஏற ஏற- இந்த திசுக்கள்-அழிந்து போகின்றன. இதற்கு இன்னொரு காரணம்- இந்தத் திசுக்களுக்குத் தேவையான புரதம், கொழுப்புச் சத்துக்கள் வயதானவர்கள் தேவையான அளவு உணவில் சேர்த்துக் கொள்ளாதது தான். வயதான காலத்தில் புரதங்களை மென்று உண்பதற்கு பற்களின் பலம் இல்லாததும், புரதங்களையும்,கொழுப்பு உணவுகளையும் எளிதாக ஜீரணிக்கக்கூடிய சுரப்புக்களோ, ஜீரணமடைந்த உணவைக் குடலிலிருந்து உறிஞ்சி எடுக்கக்கூடிய குடல் திசுக்களோ -குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருக்கின்றன.எனவே, கொலஜன் திசுக்கள் குறைந்து தோலில் சுருக்கங்கள் ஏற்படுகின்றன. இப்படியான சுருக்கங்கள் அதிகமாக கால்களில், கைகளில் ஏற்படுவதால், ஒருவித நமைச்சல் அல்லது அரிப்பு இந்த இடங்களில் ஏற்பட்டு தொல்லை தருகின்றன. பொதுவாக இந்தக்காரணம் தான் அரிப்புக்கு முக்கியமாக இருக்கின்றது.எனவே, ஓரளவு ஜீரணிக்கக்கூடிய கொழுப்பு- புரத உணவுகளையோ அல்லது இந்த கலவைகள் உள்ள ENSURE, ACTION போன்ற பால்மாவையோ உபயோகித்து பலன் பெறலாம்.அத்துடன் இயற்கையாக மேற்கூறிய காரணத்தால் ஏற்படும் அரிப்பைத் தவிர-நீரிழிவு நோய் இருந்தாலும் இப்படி அரிப்பு ஏற்படலாம். விட்டமின் B குறைவு ஏற்பட்டாலும், முக்கி யமாக BIOTIN விட்டமின் குறைவு, விட்டமின் C குறைவு என்பனவும் உங்கள் நோய்க்குக் காரணமாக இருக்கலாம். இது தவிர- NEURODERMATITIS என்கின்ற வயதான காலத்தில் ஏற்படக்கூடிய நரம்பு அழற்சியும் அரிப்பைத் தரும். இந்த நோய்க்கு தினமும் அரிப்பைக் குறைக்கும் ANTIHISTA MINE வகை மாத்திரைகள் உதவும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

# தீக்காயம்!



தீக்காயம் ஏற்பட்டால் என்ன செய்வது என்பதைத் தெரிந்து கொள்ளுவது நல்லது.

தீக்காயம் ஏற்படாமல் தடுப்பது எப்படி என்பதைத் தெரிந்து கொள்ளுவது அதையும் விட நல்லது.

தீக்காயம் ஏற்பட என்ன காரணம்? பலகாரம் செய்யும் போது அல்லது சமையல் செய்யும் போது பெண்களுக்குக் கையில் தீக்காயம் ஏற்படும். சேலையில் தீப்பிடித்துக் கொள்ளுவதும் உண்டு.

வீட்டில் ஏற்றி வைக்கும் விளக்கு களில், துணி - குறிப்பாகப் பெண்களின் சேலைப் பட்டு, தீப்பற்றிக் கொள்ளும். இதனால் தீப்புண் ஏற்பட வாய்ப்பு உண்டு.

வெடிகளை பற்ற வைக்கும் போதும் மத்தாப்புக்கள் கொளுத்தும் போதும் தீக்காயங்கள் ஏற்படுகின்றன.

## முதலுதவி

தீக்காயம் ஏற்பட்டதும் என்ன செய்ய வேண்டும்?

உடனடியாக முதலுதவி அளிக்க வேண்டும்.

தீ பட்ட இடத்தில் குளிரக் குளிர தண்ணீர் ஊற்ற வேண்டும்.

கையில் தீ பட்டிருந்தால் கையை தண்ணீருக்குள் மூழ்கவைக்கலாம். அல்லது, எரிச்சல் குறைந்து குளிரும் வரை தண்ணீர் ஊற்ற வேண்டும்.

தீ பட்ட இடத்தில் சிலர் மை தடவுவார்கள். எண்ணெய் பூசுவார்கள். வெண்ணெய் தடவிக் கொள்ளுவார்கள்.இது எதுவும் கூடாது. தண்ணீர் ஊற்றுவதுதான் சிறந்த முதலுதவி.தீ பட்ட, கொதித்த எண்ணெய் பட்ட இடத்தில் கொப்புளம் ஏற்பட்டால், அதை ஊசியால் குத்திவிடக்கூடாது.

## காற்றோட்டமாக

உடையில் தீப்பற்றி புண்ணில் ஒட்டிக்கொண்டிருந்தால் அதை எடுக்க முயற்சி செய்யக் கூடாது. முயற்சி செய்தால், புண் பெரிதாகி விடும்.

தீ புண்ணை துணியால் கட்டக்கூடாது. காற்றோட்டமாக வைக்க வேண்டும்.

புண்ணுக்கு நீங்களாக எந்த மருந்தையும் பயன்படுத்த வேண்டாம்.

## மருத்துவரிடம்

காயம் சின்னதோ, பெரியதோ மருத்துவரிடம் போங்கள்.அவர் தகுந்த வைத்தியம் செய்வார்.

சிறு காயம் என்று அலட்சியமாக இருக்காதீர்கள். தோலின் உள்ளே சதை வெந்திருக்கக்கூடும்.எனவே, மருத்துவரிடம் போவதுதான் நல்லது.

துணியில் தீ பிடித்து அடி வயிற்றில் காயம் பட்டு இருந்தால், கட்டாயம் மருத் துவரிடம் போய் விடவேண்டும். ஏனென்றால், உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டிருக்கும். உயிருக்குக் கூட ஆபத்தாகிவிடும்.

கண்ணில் காயம் பட்டிருந் தாலும் கட்டாயம் கண் மருத்துவரிடம் போக வேண்டும்.பார்வையைப் பாதுகாத்துக்கொள்ள அவர் வழி செய்வார்.

## தடுப்பது எப்படி?

தீ விபத்துகள் ஏற்படாமல் நாம் முன் எச்சரிக்கையாக இருப்பது மிகச் சிறந்தது.

பெண்கள் பலகாரம் செய்யும் போது சேலை முந்தானையை இழுத்துச் சுற்றிக் கொள்ள வேண்டும். கொதிக்கும் எண்ணெய்ச் சட்டியில் வடையோ, பலகாரமோ செய்யும் போது எண்ணெய் பொங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பூஜை அறையிலோ, வெளியிலோ ஏற்றி வைக்கும் விளக்கு- துணியில் பற்றிக்கொள்ளாமல் எச்சரிக்கையாக நடமாட வேண்டும். அலட்சியமோ, அவசரமோ கூடாது.

வெடிகளைக் கையில் பிடிக்காதீர்கள். வெடிக்கும் வாணங்களையும் கையில் பிடிக்கக் கூடாது. தீ இருக்கிறதா என்று மிக அருகில் குனிந்து பார்க்கக்கூடாது.

கையில் நெருப்புடன் வெடிகளை எடுக்கக்கூடாது. வெடி களில் நெருப்பு வைத்தவுடன் ஓடி வந்துவிட வேண்டும்.

நாம் எச்சரிக்கையோடு இருந்தால் தீ விபத்துக்கள் ஏற்படா. நாமும் அவதிப்பட நேரிடாது.

# கணவன்-மனைவி சண்டை தீர்ந்தது!



பக்கத்து வீட்டுக்கு குடிவந்த தம்பதிகள் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வதைக் கண்டு அவர்களிடம் வந்தார் ஒரு பெரியவர்.

"சார்! நீங்களும் உங்கள் மனைவியும் பொறுப்புக்களைப் பிரித்துக் கொண்டால் வீட்டில் சண்டையே வராது. நானும் என் மனைவியும் அப்படித்தான் செய்கிறோம். எங்களுக்குள் சண்டையே வருவதில்லை" என்றார் பெரியவர்.

"எப்படி?" என்று கேட்டனர் தம்பதிகள். 'பிள்ளைகளின் படிப்பு,பணவரவு- செலவு, விட்டுப் பொருட்கள்-உடைகள், வண்டிகள் வாங்குவது, உறவினர் வீட்டுக்குப் போவது இப்படி சின்னச்சின்ன விடயங்களை எனது மனைவியிடம் விட்டுவிட்டேன்' என்றார், பெரியவர்.

"நீங்கள்?" கேட்டான் அந்த இளைஞன்.

"சட்டசபை,நாடாளுமன்றம்,ஜனாதிபதித் தேர்தல், சுனாமிப் பாதிப்பு போன்ற பெரிய விடயங்களை நான் கவனித்துக் கொள்வேன்" என்றார் பெரியவர் அமைதியாக.

அந்த தம்பதிகளும் அப்படியே நடப்பதாக உறுதி அளித்தனர். அவர்களின் சண்டையும் ஓய்ந்தது.

## இவ்வார பொன்மொழி

பகைவன் என்றாலும், அவனின் நல்ல பண்புகளும் நமக்கு ஆசான்

- யாரோ



குணசீலன்
தரம் - 4
பக்தி வேதாந்த சிறுவர் இல்லம், மாபோல.



ஸ்ரீ. விஸ்வகாந்
தரம் - 6
வ/மத்திய கல்லூரி



கோ. நந்தசொருபன்
தரம் - 11பீ
கிளி/அக்கராயன் ம.வி.



நிர்தன் ஜெயபாலன்
தரம் 5, கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி
கொழும்பு 6.

# உனக்கு என்ன கவலை?

ஒரு காட்டில் வாழ்ந்த முயல்கள் எல்லாம் ஒரு நாள் ஒன்று கூடின. தங்கள் நிலையை எண்ணிக் கவலைப்பட்டன. ''என்ன வாழ்க்கை, இது? கொஞ்சம் கூட நிம்மதி இல்லை. எந்த மிருகத்தைப் பார்த்தாலும் பயமாக உள்ளது. இப்படி பயந்து வாழ்வதைவிட சாவதே மேல்'' என்று நொந்துகொண்டன.



எல்லா முயல்களும் தற்கொலை செய்வது என முடிவு கட்டி, ஓர் ஏரியை நோக்கிச் சென்றன. ஏரிக்கரையில் பல தவளைகள் ''கொர்....கொர்'' என்று குதூகலமாகப் பாடிக்கொண்டிருந்தன. முயல்கள் வருவதைக்கண்டு ஏரியில் குதித்தன. இதைப் பார்த்த முயல்கள் ''நாம் மற்ற மிருகங்களைப் பார்த்துப் பயப்படுகிறோம், ஆனால், நம்மைவிட சிறிய பிராணிகள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றன. நாம் ஏன் சாகவேண்டும்'' என்று நினைத்தன. வந்த வழியிலே திரும்பின.

எதிரில் ஒரு யானை கவலையுடன் தன் காதுகளை முன்னும்,பின்னும் ஆட்டிக்கொண்டே வந்தது. அதைப் பார்த்த ஒரு முயல், யானையிடம் கேட்டது ''உனக்கு என்ன கவலை? உன் உடம்பைப் பார்த்தாலே எல்லா மிருகங்களும் பயந்து ஓடுமே. எதற்காக நீ கவலையோடு இருக்கிறாய்?''

அதற்கு யானை, ''இதோ என் காதுப் பக்கத்தில் பறக்கும் குளவியைப் பார்த்தாயா?இது என் காதுக்குள் நுழைந்து கொட்டிவிட்டால் அவ்வளவுதான்,என் உயிரே போய்விடும்!'' என்றது.

அதைக் கேட்ட முயல்கள் யோசித்தன ''இவ்வளவு பெரிய உடம்பை வைத்திருக்கும் யானை கூட கவலைப்படுகிறதே எல்லா உயிர்களுக்கும் ஏதாவது ஒரு கவலை இருக்கும் போலிருக்கிறது'' என்று முயல்கள் புரிந்துகொண்டன. அன்று முதல் மகிழ்ச்சியுடன் வாழ முடிவு செய்தன.

நாமும் வாழ்க்கையில் தேவை இல்லாமல் கவலைப்படுகிறோம். இதனால் வாழ்க்கையே பாழாகிப்போகிறது. மகிழ்ச்சியுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

## அறிந்து கொள்ளுங்கள்

1. கிரிக்கெட் விளையாட்டு எங்கே தோன்றியது?
   - இங்கிலாந்தில்.
2. டெஸ்ட் போட்டிகளில் அதிகமாக சதங்கள் எடுத்தவர் யார்?
   - சுனில் கவாஸ்கர்.
3. டெஸ்ட் போட்டியில் ஒரே இன்னிங்ஸில் இரண்டு தடவைகள் 300 ஓட்டங்களை எடுத்தவர் யார்?
   - டொன் பிராட்மன்.
4. ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் யார்?
   - சயீத் அன்வர்(194)
5. கிரிக்கெட் மட்டையை வடிவமைத்தவர் யார்?
   - ஜான் பால்
6. லில்லி பூக்களை உடைய நாடு எது?
   - கனடா.

செ.ஜீவதாஸ்
தரம்-9ஏ
மு/விசுவமடு மகா வித்தியாலயம்.

## சிந்தனைத் துளிகள்

1. வணங்கத்தக்கவர்கள்-தாய், தந்தை
2. வந்தால் போகாதது-புகழ், பழி
3. போனால் வராதது -மானம், உயிர்
4. அடக்க முடியாதது-ஆசை,துக்கம்
5. பிரிக்க முடியாதது-பந்தம்,பாசம்
6. அழிவைத் தருவது - பொறாமை, கோபம்
7. கடைத்தேற வழி - உண்மை, உழைப்பு
8. வருவதும் போவதும் - இன்பம், துன்பம்
9. மிக மிக நல்ல நாள் - இன்று
10. மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
11. மிகவும் வேண்டாதது - வெறுப்பு
12. மிகக்கொடிய நோய் - பேராசை
13. மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
14. விலக்கவேண்டியது-விவாதம்
15. நம்பக் கூடாதது-வதந்தி

இ. நிஷா
இல. 311
ஆனைவிழுந்தான்



கே. நதியா
சித்தன் குறிச்சி
பூநகரி



கே. எம். லட்சுமி
2007 கலை பிரிவு




## உங்கள் கைவண்ணம்



நா. ராஜ்குமார்
தரம் - 11
கினிவேம்பொருகேனி சி. சி. த. பாடசாலை
இத்தாவில், பளை.




சி. அபர்ணா
தரம் - 8ஏ
மு/பாரதி வி.



பத்மேஸன்
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி
கொழும்பு - 6

## தத்துவ முத்துக்கள்

1. நம்ப நட, நம்பி நடவாதே.
2. உன்னைத் திருத்து, சமூகம் தானாகவே திருந்தும்.
3. களவு, பொய் விலக்கு. நன்மை உன்னைத் தேடி வரும்.
4. துன்ப காலத்தில் பொறுமையுடன் இருத்தல் இறைவணக்கத்துக்கு ஒப்பானது.
5. அறிவை விரும்பாதவனை நண்பனாக்காதே, பின் துன்பத்தைஅனுபவிப்பாய்.

பிரியதர்ஷி
ஆண்டு-4
கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி
கொழும்பு6



### பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
வாசம் மிக்க பூக்கள்
சின்னச் சின்ன பூக்கள்
சிரிக்கும் அழகுப் பூக்கள்

மென்மை மிகு பூக்கள்
மிக்க அழகு பூக்கள்
பெண்கள் விரும்பும் பூக்கள்
பெருமை தரும் பூக்கள்

வண்டு மொய்க்கும் பூக்கள்
வகை வகையான பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
கவிதை பாடும் பூக்கள்

க. ஈழராகவன்
சரஸ்வதி வித்தியாலயம் வேலணை.

# கவிதைப் பூங்கா

**பிரிவு**

மனதில் ஒட்டப்பட்டு
ஒடிக்கப்படும் உயிரின்
நியதி

*எஸ்.சசிமாலன்*

**கவலைவிடு என் தோழா...**

கவலை விடு கவலை விடு
என் தோழா....
உந்தன் கண்ணீரை
துடைத்துவிடு தோழா...

சுழற்துறைக் கம்பிக்குள்
அடைபடும் நெஞ்சத்தின்
நெரிசல்களைக் குறைத்துவிடு
உந்தன் நெஞ்சத்தில்
என்னையே நினைத்துவிடு...

அன்பு காட்ட உன்
தம்பி நானிருக்கிறேன்
கவலை விடு என் தோழா...

உந்தன் விடுதலை
கிடைக்கும் வரை
ஆலயங்கள் தோறும் - நான்
படி ஏறுகின்றேன்.
உந்தன் விடுதலைக்காய்
இறைவனை வேண்டுகின்றேன்...

பிரிந்த உறவுடன் ஒன்று சேர்ந்து
இன்பமாய் நீ வாழ்வாய்
கவலைவிடு கவலைவிடு தோழா-இனி
அச்சமில்லை கவலைவிடு
என் தோழா...!

ஜெசி ஜெகன்,
பெரிய பளை

**காதல் நதியே...!**

தூங்காத விழிகளில்
துவண்டோடும் உன் நினைவு,
தொலைந்துவிட்ட சுகங்களை...
தொல் பொருளாய் தேடுதடி...!
வாழ்வு எனும் ஆற்றில்
காதல் என்னும் ஓடம் விட்டு
கரை என்னும் மோட்சத்தை
கடைசிவரை அடைவேனா...?
ஓடம் விட்ட நதியே...
ஓலமிட்டு ஓடுகிறாயே...
ஒப்பிட முடியவில்லையே...
நதி நீரின் சீற்றத்தை...!
காதல் கொண்ட பாவத்தால்
காலமெல்லாம் கலக்கமா...?
நதியே நீ சீற்றம் கொள்வதில்
நியாயம் எதுவும் இல்லையே...!
கரை சேர வழி தேடி
கஷ்டப்படுகிறேன் உன்னால்...
விழி நீரில் ஒளி இழந்து
விழ்கிறேன்...உனக்காக!
விடிவொன்று...வரும் போது...
வந்தணைப்பாய் நீயென்று
விழிகள் தனை...மூடுகிறேன்...

*வஜனன்,*
*முள்ளியவளை*

**சொன்ன வார்த்தை**

உப்பு நீர்
ஊரெல்லாம்
உயிர்களை உறிஞ்சும்போது
மரக்கிளையினை
மந்திபோல் பிடித்தபடி
மச்சான் என்று அவள் அழைக்க,
ஓடிச் சென்று
அவளைப் பற்றமுன்
மறு அலை வந்து
மண் கவ்வச் செய்தது.
மச்சான் என்று கூப்பிட்டவளை
பனை மர வட்டில் இருந்து பார்த்தேன்
அவள் பற்றிய
மாமரத்தைக் கூட காணவில்லை.
ஆனால், அவள் கூப்பிட்ட
வார்த்தை மட்டும்
இன்னும் என் மனதில்
நிலைத்து ஒலித்துக்
கொண்டிருக்கிறது.

*ச.ஜெகன்*

**பேரினவாத நீதி**

நீதிபதியும்
நீதிமன்றமும்
நியாயம் பேசும்
நியாயாதிபதியும்
நிர்க்கதியாய்
நின்ற என்னை
நிற்க வைத்து
கேள்வி கேட்டீரே:
நியாயமாய் பதில் கூறிய எனக்கு
நியாயமற்ற முறையில்
நியாயம் தீர்த்தீரே
நீரே என்
நீதி தேவதையென்று எண்ணினேன்
என் அழுகுரலின் சத்தம்
உம் காதுகளில் ஒலிக்கவில்லையா?
என் கண்ணீர் துளிகள்
உம் மனதை உருக்கவில்லையா?
கண்ணிருந்தும் குருடனாகவும்
காதிருந்தும் செவிடனாகவும்
வாயிருந்தும் ஊமையாகவும்
உம் மனதில் இனவாதம் மேலோங்க
மௌனமாய் நின்றீரே
நீதியும் நியாயம்
நீதிமன்றமும் உமக்கேன்?

*பி.ரஞ்சன்*
*எஸ்-4,*
*களுத்துறை சிறைச்சாலை*

**ஏன் மாறினாய்...?**

ஆசையுடன் உன்னை
நாடி வந்து
அன்புடனே பாசம்
வளர்த்து
நேசமுடன் நெருங்கிட
வந்து
நெஞ்சமெல்லாம் காதல்
வளர்த்து
வாழ்வு என்ற
பந்தத்திலே
புக முனைந்த
வேளையில்
எந்தன் மனம்
விட்டு நீயும்
வேறு மனம்
தாவியது ஏனோ...?

*எஸ்.நிஸா,*
*யாழ்.பல்கலைக்கழகம்*

**நிலா**

வையகத்து நதியில்
தன்னழகு பார்த்து
பூரித்து மகிழும்
வான தேவதை

*அ.யாழினி,*
*மட்டக்களப்பு*

**நன்றிக் கடன்**

காகிதமே!
வெளுத்துப் போன என்னால்
வெள்ளைமான உன்னை மட்டுமே
நிரந்தரமாக தேட முடிந்தது
உன் உடலில் பேனா முனையால்
நான் போட்ட கீறல்கள்
உன்னை கண்ணீர் சிந்த வைத்திருந்தால்
என்னை மன்னித்துவிடு
என் மனதிற்கு கேட்காத
உன் சிமௌன ஓலங்கள்தான்
என்னை ஆறுதல் படுத்தின
எப்படி தீர்ப்பேன் உன் நன்றிக்கடன்!

*கே.தீபா,*
*கிளிநொச்சி*

**உன்னால்**

கண்களை மூடினேன்
கனவு வந்தது...
பேனா எடுத்தேன்
கவிதை வந்தது...
பூக்களை எடுத்தேன்
மென்மை தெரிந்தது...
புத்தகத்தை விரித்தேன்
உன் பெயர் தெரிந்தது...
உன்னை நினைத்தேன்
உலகமே இருண்டது...

*சங்கீதா சண்முகம்,*
*பளை*

**தேர்தல்**

அன்றைய நாட்களில்
ஆறாண்டுக்கொரு முறை-பின்
ஐந்தாண்டுக்கொரு முறை
இன்றைய நாட்களில்
ஈராண்டுக்கொரு முறை- இல்லை
ஓராண்டுக்கொரு முறை

*பி.ஜே.ஜெனின்*

**காத்திருப்பு**

தொட்டது உன் விழி என்னை
ஒரு நொடி...
விழுந்தது என் இதயம்
உன் காலடி...
உன் நினைவால் என் காத்திருப்பு
பல வருஷமடி...
நீ எப்போ வருவாய்
எந்தன் மடி...
அதுவரை நான்
உன் நினைவிலடி...!

*வசந்தி செல்வலிங்கம், விசுவமடு.*

**முக(ம்) மூடிக் காதல்**

காதலித்துப்பாரடி
முகம் மூடி!
தெரியும்
காதலுக்குக் கண்
தேவையென்று!

*அஸ்லாம் ஸாதின், ஏறாவூர்*

**மனக்கோட்டையில்**
**ஒரு கனாக்கோட்டை**

மனக்கோட்டையில் ஒரு
கனாக்கோட்டை
கட்டினேன்!
சரியும் என எண்ணினேனா
இல்லையே
அந்தி சாயும் பொழுதிலே
கட்டினேன் மனக்கோட்டை
மனதிலே மதில்கட்டி
உயர்ந்தது கோபுரம்!
உன் ஓரவிழிப்பார்வையில்
கோட்டையின் உள்ளே
பாய்ந்தது வெளிச்சம்!
காதல் வெள்ளம் பாய
அணையிட்டது சாதி!
மூழ்கியது என் மனக்கோட்டை
அதிலே என் கனாக்கோட்டை!

*சு.திவ்யதுர்க்கா, மாத்தளை*


# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்



4500 பவுண்ட்ஸ் தொகையை ஒரு மாதம் எப்படிச் செலவிடுவது என்று உங்களுக்கு அறிய ஆசையாக இருக்கின்றதா? ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த பைஸ்லி என்ற 19 வயது இளைஞனைக் கேளுங்கள். இவன் சென்ற வருடம் SMS எனப்படும் குறுந்தகவல்களை அனுப்பிய கட்டணமாக 4500 பவுண்ட்ஸ் செலுத்தியுள்ளான். கூடவே தன் வேலையையும் ராஜினாமா செய்திருக்கிறான். காரணம் தனது நிறுவனக் கணினியை உபயோகித்து ஒரு மாதத்தில் 8000 இனையக் கடிதங்களை இவன் அனுப்பியுள்ளதாக அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

* * *

12 வருடங்களாக தொடர்ந்து பண மழையில் நீச்சலடிப்பது என்பது எல்லோருக்கும் முடிந்தகாரியமா? கணினி உலகின் சக்கரவர்த்தி என்று வர்ணிக்கப்படுகின்ற பில்



கேட்ஸ் தொடர்ந்து 12 வது வருடமாக அமெரிக்க பணக்காரர் வரிசையில் முதலாவது இடத்தைத் தனதாக்கிக் கொண்டிருக்கின்றார். இந்தச் செய்தியை உலகப் பிரசித்தி பெற்ற Forbes சஞ்சிகை வெளியிட்டுள்ளது. அதே சமயம் அமெரிக்க பணக்காரர்களின் கையிருப்பும் குறிப்பிட்ட அளவு அதிகரித்து இருப்பதாக இச் சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.


* * *



இரண்டாயிரம் வரையிலான கழுதைகள் பூமி அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானியர்களுக்கு பேருதவியாக வந்துள்ளன. எப்படி என்று ஆச்சரியப்படுகிறார்களா? குதிரைப் படை, யானைப்படை பற்றி அறிந்துள்ளீர்கள். கழுதைப் படை பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரிந்திருக்கின்றது? பாகிஸ்தானின் இராணுவம் 'யுவரு' என்ற பெயரில் மிருகங்களின் உதவி கொண்டு நடத்தும் போக்குவரத்துப் பிரிவொன்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. இந்தத் தடவை நன்கு பயிற்சியளிக்கப்பட்ட இராணுவத்தின் கழுதைகளே மலைப்பிராந்தியங்களில் பொருள்களை ஏற்றிச் செல்ல இராணுவத்திற்கு கைகொடுத்துள்ளன. 2000க்கு மேற்பட்ட கழுதைகள், காஷ்மீரின் மலைப்பிராந்தியங்களில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசியப்படும் பொருட்களை ஏற்றிச் செல்ல பெரிதும் உதவுகின்றன.

* * *

17327 பவுண்ட்ஸா உள்ளாடை ஒன்றின் விலை? படைத்தவனுக்குத்தான் வெளிச்சம். இன்று எந்தப் பக்கம் திரும்பினாலும் கவர்ச்சிதான் பல்லிளிக்கின்றது. அந்த அளவுக்கு எதிலுமே கவர்ச்சி



சேர்த்தால்தான் பிறரால் நோக்கப்படும் என்ற நிலை வந்து சேர்ந்திருக்கின்றது. எங்கும் கவர்ச்சிப்புயல் அடிக்கிறதே என்பதுதான் கவலை.

* * *

நேபாள நாட்டில் தீபாவளி அன்று காகங்களுக்கு தயிர்ச் சோறு வைப்பார்கள். காகங்கள் சோறு தின்று கொண்டிருக்கும் போது அவற்றின்மீது மலர்களைத் தூவுவார்கள். காகங்களின் மீது மலர் பட்டால் அந்த ஆண்டு முழுவதும் நல்லவை நடைபெறும் என்று நம்புகிறார்கள். இம்முறை அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில் தீபாவளி கொண்டாடப் பட்டது. அது போன்று லண்டனில் நடைபெற்ற தீபாவளி விழாவில் பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேயர் கலந்துகொண்டார்.



* * *

குஜராத் மாநிலம், அம்பாஜி என்ற ஊரின் மலைப்பகுதியில் எலுமிச்சைப் புல் விளைகிறது. தேநீர் போடும் போது இந்தப் புல்லை கொஞ்சம் நறுக்கிப் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி பால், சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டால், கமகம மணத்துடன் சுவையாக இருக்கும். அதன் நறுமணமே அலாதி.

புல் கிடைக்கும் நேரத்தில் அதைப் பிடுங்கி வந்து நறுக்கி நிழலில் காய வைத்து, டப்பாவில் போட்டு வைத்து, தேவையான போது பயன்படுத்தலாம். தேயிலைத்தூளோடும் கலந்து வைத்துக் கொள்ளலாம்.

* * *

நாம் ஏதாவது ஒரு பயிற்சியைத் திரும்பத் திரும்பச் செய்யும்போது அதே செயலைத் தொடர்ந்து செய்வது போலத் தோன்றுகிறது. ஆனால், அவ்வாறு செய்வதன் மொத்த விளைவாக பயனுள்ள மாற்றம் ஏற்படுகிறது.

* * *

**வேண்டும் நீ எனக்கு.**

உன் மீது எனக்கு
எல்லையில்லாக் காதல்
சம்மதித்துவிடு பெண்ணே!
மறுத்தாலோ
நான் பாதி மிருகம் பாதி
ஆகிவிடுவேன்
நல்லதல்ல இது எனக்கு
என்று
தெரியாதா உனக்கு
வேண்டாம் நமக்குள்
இந்தப் பிணக்கு
அப்போ
என்வாழ்வு முழுவதும்
வேண்டும் நீ எனக்கு.

* * *




"கத்தியைக் காட்டினதும் பணத்தைக் கொடுத்திட்டியே... இது போலிக் கத்தியப்பா..."
"இதுவும் கள்ள நோட்டப்பா..."

# பாரிஸ் நகரம் பற்றி எரிகிறது!

கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக பாரிஸில் குடியேற்றவாசிகள் வாழும் பகுதிகளில் பொலிஸாருக்கும், இளைஞர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன. இந்த வன்முறைகள் காரணமாக பாரிஸ் நகரம் தீப்பிடித்து எரிகின்றது. வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாது பொலிஸ் தரப்பு திணறுகிறது. எல்லை மீறிப் பரவி வரும் இந்த கலவரங்கள் அயல் நாடுகளுக்கும் பரவலாம் என அந்த நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன.





பாரிஸில் அமைந்துள்ள கிளிச்சி, சூஸ் மற்றும் பொய் ஆகிய பகுதிகளில் ஆரம்பமான வன்முறைகள் இப்போது அஹல்னே, செவ்ரன் போன்ற பகுதிகளுக்கும் பரவி உள்ளன.

பொலிஸாரிடம் இருந்து தப்புவதற்காக இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் மின்சாரக் கோபுரமொன்றில் ஏறியதாகவும், அவர்கள் அவ்வேளையில் மின்சாரம் தாக்கி இறந்ததாகவும் தெரிவிக்கப்படும் சம்பவத்தை அடுத்தே பாரிஸ் நகரில் கலவரங்கள் வெடித்ததாகக் கூறப்படுகிறது.

பொலிஸார் துரத்திய போது அவர்களிடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக இந்த இரு இளைஞர்களும் மின்சாரக் கோபுரத்தில் ஏறியதாகச் சொல்லப்படுவதை பொலிஸ் தரப்பு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

கலவரங்கள் வெடித்துப் பரவ இந்தச் சம்பவம் ஒரு தூண்டுதலாக அமைந்திருக்கலாமெனினும், பிரான்ஸிலுள்ள குடியேற்ற நாட்டு இளைஞர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இவ்வாறான இளைஞர்களின் விரக்தியே இத்தகைய நெருக்கடிகளுக்குக் காரணம் என சர்வதேச அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தக் கலவரங்கள் மெல்ல மெல்ல நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவிவருவதாகத் தெரிகிறது. இவ்வாறான பதற்ற நிலையை அடுத்து நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென பிரான்ஸ் ஜனாதிபதி ஜாக்சிராக் கூறுரைத்திருக்கிறார்.

காட்டுத்தீபோல் பரவி வரும் வன்முறை காரணமாக பொலிஸாருக்கும், வன்முறையாளர்களுக்கும் இடையே பலத்த மோதல்கள் இடம் பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்முறையாளர்களால் இதுவரை 1,500க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தவிர பாடசாலைக் கட்டடங்கள் உட்பட மேலும் பல கட்டடங்களும் தீ வைத்துச் சாம்பராக்கப்பட்டுள்ளன. வன்முறையாளர்களில் 300க்கும் மேற்பட்டோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வன்முறையாளர்கள் ஒரு நகரிலிருந்து இன்னொரு நகருக்கு மோட்டார் சைக்கிளில் சென்று வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் தீவிரவாதச் செயல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2,500க்கும் மேற்பட்ட பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவியாக 7 ஹெலிக் கொப்டர்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வன்முறைகளில் கலவரக்காரர்கள், 10 பொலிஸாரைச் சுட்டுக் காயப்படுத்தி உள்ளனர். பாதுகாப்புப் படையினர் 200 கல்லெறியும் கலவரக்காரர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த வேளையிலேயே பொலிஸாரை நோக்கி அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக பொலிஸார் கூறி இருக்கின்றனர்.

பாதுகாப்பைப் பலப்படுத்துவதில் அரசாங்கம் மிகவும் உறுதியாக இருப்பதாகவும், மக்கள் கலவரமடையத் தேவையில்லை எனவும் ஜனாதிபதி சிராக் விடுத்த அறிவிப்புக்கு மத்தியில் 1,300 வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. பாரிஸ் நகரம் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. தெற்கு பிராந்தியத்தில் பஸ் ஒன்றை முற்றுகையிட்ட இளைஞர்கள் பயணிகளை வெளியேறுமாறு கேட்டுக் கொண்ட பின்னர் பஸ்ஸை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். சாரதியும், பயணி ஒருவரும் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிக்கலான சமூக, பொருளாதார மற்றும் இன விடயங்கள் காரணமாக பயங்கரமாகப் பரவி வரும் கலவரங்களைத் தடுப்பதற்கு சிராக் அரசாங்கம் போராடிக் கொண்டிருக்கின்றது.

நிற, இன அடிப்படையிலான பாகுபாடுகளை பிரான்ஸ் தடை செய்துள்ள போதிலும் அங்கு இனவெறியும், நிறவெறியும் தாண்டவமாடுகின்றன.

மக்களைப் பொறுத்தவரை குடியேற்றவாசிகளுக்கு உதவவென பல அமைப்புகள் உள்ளன. எனினும், குடியேற்றவாசிகளை இணைக்கும் பாரிஸின் கொள்கை தோல்வியில் முடிவடைந்துள்ளதையே இப்போது நடைபெற்று வரும் வன்முறைகள் எடுத்துக் காட்டுகின்றன.

வன்முறைகள் ஆரம்பமானவுடன் குடியேற்றவாசிகளை அரசாங்கம் கட்டுப்படுத்தத் தவறியுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. பெருமளவு கட்டுப்பாடற்ற குடியேற்றவாசிகளே வன்முறைகளுக்குக் காரணம் எனத் தெரிவித்த வலதுசாரி அரசியல்வாதியொருவர், பிரான்ஸ் இஸ்லாமியமயப்படுத்துவது தடுக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.


HOTEL WESTEERN (PVT) LTD



Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

No. 35, Frankfourt Place,
Bambalapitiya, Colombo - 04

T.P.: +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax: +94 11 4518481 E-mail: info@hotelwesteern.com
Website: www.hotelwesteern.com








# சீனாவில் அழிந்த பறவைகள் அறுபது லட்சம்

பறவைக் காய்ச்சல் தாக்கியுள்ள சீனாவின் வடக்குக் கிழக்குப் பகுதியில் 60 லட்சம் பறவைகளை அந்நாடு அழித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



லியோனிங் மாகாணத்தில் மூன்று கிலோமீற்றர் சுற்றுவட்டப் பிரதேசத்தில் உள்ள சகல வளர்ப்புப் பறவைகளும் கொல்லப்பட்டுவிட்டதாக ஸின்ஹுவா செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

அண்மையில் பறவைக் காய்ச்சல் பரவிய போது சீனாவில் மனிதர்களுக்கான தொற்று நோய் பரவியது பற்றி சீனா எதுவும் தெரிவிக்கவில்லை. ஆனால் அண்மையில் பறவைக் காய்ச்சல் பரவிய இடங்களில் ஒன்றான ஹுனானில் நிமோனியா தாக்கத்துக்குள்ளான மூவரை பரிசோதிப்பதற்கு உலக சுகாதார நிறுவன நிபுணர்களுக்கு அழைப்பு விடுக்கப்போவதாக சீனா அறிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆசியாவில் பறவைக் காய்ச்சலால் 60க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் 123 பேர் தொற்றுநோய்க்கு உள்ளாகினர். அநேகமாக பறவைகளுடனான தொடர்பு மூலமே மனிதர்களுக்கு வைரஸ் பரவியுள்ளது தெரியவருவதாக சீன அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் பறவைகளை உயிருடன் விற்பதற்கும் வளர்ப்பதற்கும் அரசாங்கம் தடை விதித்துள்ளது. அத்துடன் வெளி மாவட்டங்களில் இருந்து நகருக்குள் பறவைகளை எடுத்து வரவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சகல பறவைச் சந்தைகளும் மூடப்பட்டுள்ளதாக பீஜிங் நகர சபை அறிவித்துள்ளது.

குடியிருப்பாளர்களும் விவசாயிகளும் வளர்ப்பு பறவைகள் மற்றும் ஏனைய விலங்குகளுடன் அருகாக வசிக்கும் சனநெரிசல் மிக்க ஆசியாவில், இந்தப் போராட்டம் மிகவும் கடினமானதென்றும் நிபுணர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.







இப்பத்திரிக்கை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிரைஸஸ் ஸ்தாபனத்தினால் 2005, நவம்பர் 13 ஆம் திகதி வெளியிடப்பட்டது.